விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பதினெட்டு

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2041 புரட்டாதி 13 புதன்கிழமை (29.09.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 284

ராம்கோ

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

RAMCO

ஆசியாக் கண்டத்தில் முதலாந்தர தொழிற்சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது ராம்கோ சிமெந்து

# 15 வருடங்களுக்குப்பின் 400 ஏக்கர் நிலம்

# அரியாலை விவசாயிகளிடம் கையளிப்பு

## ஏர்பூட்டும் நிகழ்வில் வழங்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)

**அரியாலை கிழக்கில் 400 ஏக்கர் வயல் நிலங்கள் 15 வருடங்களின் பின்னர் விவசாயிகளிடம் கையளிக்கப் பட்டன. நேற்று நடைபெற்ற ஏர்பூட்டு விழாவின்போது இந் நிலங்கள் கையளிக்கப்பட்டன.**

கமநல சேவைகள் திணைக்கள் உதவி ஆணையாளர் பற்றிக் நிறைஞ்சன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபி விருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, நாடாளுமன்ற குழுக்களின் பிரதித்தலைவர் மு.சந்திரகுமார், வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி, யாழ். (18ஆம் பக்கம் பார்க்க)

## வெடிபொருள் அபாயம் உள்ளவரை மீள்குடியமர்வு சாத்தியமில்லை!




### யாழ்.தளபதி உறுதிபடத் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வலி. வடக்கு உயர் பாதுகாப்பு வலயத்தில் வெடிபொருட்களின் அபாயமற்ற நிலையிலேயே மக்களை மீள்குடியேற்றுவோம் என யாழ். கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்க தெரிவித்தார்.

வலி.வடக்கு உயர் பாதுகாப்பு வலயத்திலுள்ள வயாவிளான் மத்திய மகாவித்தியால (18ஆம் பக்கம் பார்க்க)

## மீள்குடியேற்றத்திற்கான ஆரம்பமே வயாவிளான் பாடசாலை கையளிப்பு



### அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உரை

(யாழ்ப்பாணம்)

வயாவிளான் மத்திய மகாவித்தியாலயம் இன்று (நேற்று) ஆரம்பிக்கப்படுவது வலி. வடக்கு உயர்பாதுகாப்பு வலயத்தில் மக்களை மீள்குடியேற்றுவதற்கான ஆரம்பம் என பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

வயாவிளான் மத்திய மகாவித்தியாலயத்தை பாடசாலை சமூகத்திடம் கையளிக்கும் நிகழ்வு நேற்று பாடசாலை மண்டபம் (18ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சர் பஸிலின் யாழ்.விஜயம் திடீர் இரத்து

(யாழ்ப்பாணம்)

பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவின் யாழ். விஜயம் நேற்று திடீரென இரத்துச் செய்யப்பட்டது.

வயாவிளான் மத்திய மகாவித்தியாலயத்தை பாடசாலை நிர்வாகத்திடம் கையளித்தல் மற்றும் ஏர் பூட்டல் போன்ற நிகழ்வுகளில் கலந்து கொள்ளவும் வலி. வடக்கில் சட்டவிரோதமான சுண்ணக்கல் (18ஆம் பக்கம் பார்க்க)

## 20 வருடங்களின் பின்னர் வயாவிளான் மத்திய மகாவித்தியாலயம் பாடசாலை நிர்வாகத்திடம் கையளிப்பு

(யாழ்ப்பாணம்)

வலி. வடக்கு உயர் பாதுகாப்பு வலயத்திலுள்ள வயாவிளான் மத்திய மகாவித்தியாலயம் 20 வருடங்களின் பின் நேற்று பாடசாலை நிர்வாகத்திடம் உத்தியோக பூர்வமாக கையளிக்கப்பட்டது.

இந் நிகழ்வில் பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, நாடாளுமன்ற குழுக்களின் பிரதித் தலைவர் மு.சந்திரகுமார், வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் (18ஆம் பக்கம் பார்க்க)

## விடுதலைப்புலிகள் சார்பில் வைகோ ஆஜராக முடியாது

### இந்திய நடுவர் மன்றம் தீர்ப்பு

(சென்னை)

இந்தியாவில் விடுதலைப்புலிகள் இயக்கத்தின் மீதான தடையை நீடிக்க வேண்டுமா என்பது தொடர்பாக நடைபெறும் விசாரணையில் ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ ஆஜராக முடியாது என்று நடுவர் மன்றம் தீர்ப்பளித்துள்ளது.

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மீது கடந்த 1992ஆம் ஆண்டு முதல் இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை இந்திய அரசு தடை நீடிப்புச் செய்து வருகிறது.

அதன்படி (18ஆம் பக்கம் பார்க்க)

## வெடிகுண்டு அபாயம் நிபுணர்கள் எச்சரிக்கை

(கொழும்பு)

கரடியனாறு பொலிஸ் நிலையத்தில் வெடிமருந்துகள் வெடித்து 27 பேரைப் பலி வாங்கியதைப் போன்ற சம்பவங்கள் மேலும் நடக்கலாம். அதற்குள் அரசு விழிப்படைந்து பொலிஸ் நிலையங்களில் வைக்கப்பட்டுள்ள வெடி மருந்துகளை அகற்றியே தீரவேண்டும் என்று வெடிமருந்து நிபுணர்குழு எச்சரித்துள்ளது.


பெரும்பாலும் தமிழர்கள் வசிக்கும் பகுதிகளில் உள்ள பொலிஸ் நிலையங்களில் சுமார் 2 இலட்சம் கிலோ கிராம் அளவுக்கு சக்தி வாய்ந்த வெடிமருந்துகளும் வெடித்திரிகளும் வைக்கப் பட்டுள்ளன. இவை விடுதலைப்புலிகள் அமைப்பிடமிருந்து கைப்பற்றப்பட்டவை அல்ல. (18ஆம் பக்கம் பார்க்க)




அரியாலையில் நேற்று ஆரம்பமான ஏர்பூட்டும் விழாவின் போது...

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்







வயாவிளான் மத்திய மகா வித்தியாலயத்தை பாடசாலை நிர்வாகத்திடம் கையளிக்கும் நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் அவர்கள் மேடையில் அமர்ந்திருப்பதையும் பாடசாலை அதிபரிடம் கணனி கையளிக்கப்படுவதையும் மேல் உள்ள படங்களிலும் வட மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, யாழ்.கட்டளைத் தளபதி மகிந்த கத்துருசிங்க ஆகியோர் உரை நிகழ்த்துவதையும் நிகழ்வில் கலந்து கொண்ட மாணவர்களையும் படங்களில் காணலாம்.

## சங்கீத பாட செயலமர்வு

வலிகாமம் கல்வி வலயத்தில் 2010 ஆம் ஆண்டு க.பொ.த. (உ/த) சங்கீத செயன் முறைப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாண வர்களுக்கான செயலமர்வு நாளையும் நாளை மறுதினமும் ஆகிய இரு தினங்க ளும் யாழ்.இராமநாதன் கல்லூரியில் காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணி வரை நடைபெறவுள்ளது.

பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் தங் கள் பொறுப்பாசிரியர்கள் சகிதம் செயலமர் வில் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட் டுக் கொள்ளப்படுகின்றார்கள். (ச-5)

## 4 ஆம் மாடியில் 3 மணி நேரம் மங்கள சமர மீது விசாரணை!

ஐக்கிய தேசியக் கட்சியின் மங்கள சமர வீர எம்.பி. நேற்றுச் செவ்வாய்க்கிழமை குற் றப் புலனாய்வுப் பிரிவுப் பொலிஸாரால் 4 ஆம் மாடியில் பலத்த விசாரணைக்குட்படுத் தப்பட்டார்.

சுமார் 3 மணித்தியாலங்களுக்கு மேலாக இவ் விசாரணை இடம்பெற்றுள்ளது. ஜனாதி பதி மகிந்த ராஜபக்ஷவைக் ஹிட்லராக சித்தி ரித்து பிரசுரிக்கப்பட்ட சுவரொட்டிகள் தொடர் பாக இவரை விசாரித்திருக்கின்றார்கள்.

விசாரணைகளை முடித்துக் கொண்டு வெளியே வந்த மங்கள சமரவீர எம்.பியை ஐ.தே.க. எம்.பிக்களான ரவி கருணாநாயக்க, ரிலான் அலஸ் ஆகியோர் உட்பட ஐ.தே.க. பிரமுகர்கள் பலரும் வரவேற்றனர்.

18-வது திருத்தச் சட்டத்தை எதிர்த்தே இச் சுவரொட்டிகள் பிரசுரிக்கப்பட்டமை என்பது குறிப்பிடத்தக்கது. (ச-5)

# வயாவிளான் ம.ம.வித்தியாலயத்தின் கட்டடப் புனரமைப்புக்கு 2 மில். ஒதுக்கீடு

## வடக்கு மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வயாவிளான் மத்திய மகா வித்தியாலயத் தின் சொந்தக் கட்டடத்தை உடனடியாகப் புன ரமைப்பதற்கு 2 மில்லியன் ரூபாய் நிதியை ஒதுக்கீடு செய்வதாக வடக்கு மாகாண ஆளு நர் மேஜர் ஜெனரல் சந்திரசிறி அறிவித்தார்.

அத்துடன் பாடசாலைக்குரிய கற்றல், கற் பித்தல் உபகரணங்கள், தளபாடங்கள், கண னிகள் மற்றும் பாட நூல்கள் வழங்கி வைப்ப தாகவும் அவர் குறிப்பிட்டார்.

வலி.வடக்கு உயர் பாதுகாப்பு வலயத்தில் அமைந்துள்ள வயாவிளான் மத்திய மகா வித்தியாலயத்தை பாடசாலை நிர்வாகத்திடம் கையளிக்கும் வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்ட வாறு குறிப்பிட்டார்.

அங்கு தனது உரையில் வடக்கு மாகாண ஆளுநர் மேலும் தெரிவிக்கையில்,

வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம் சொந்த இடத்தில் மீள இயங்குவதனையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன். இப் பாடசாலையை சகல வசதிகளுடனும் சிறப்பாக நடைபெறுவ தற்குச் சகல உதவிகளும் செய்து கொடுக்கப் படும்.

இப் பாடசாலையின் கட்டடத்தை விரை வில் புனரமைப்பதற்கு 2 மில்லியன் ரூபாய் நிதி உடனடியாக ஒதுக்கப்படுகின்றது.

சகலரும் இணைந்து விரைவில் தமது பணிகளை முன்னெடுத்துப் பாடசாலையை விரைவில் ஆரம்பிக்க வேண்டும். அத்துடன் கற்றல், கற்பித்தல் உபகரணங்கள், தளபா டங்கள், கணனிகள் மற்றும் இலவசப் பாட நூல்கள் விரைவில் வழங்கி வைப்பேன்.

இப் பாடசாலைக்கும் மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் எதுவித சிரமங்களும் இன்றி ஒழுங்காக வருவதற்குரிய சகல ஏற் பாடுகளும் செய்யப்படும் என வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி குறிப்பிட்டார். (ச-5)

முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடம்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் - இலங்கை
விரிவுரைகள் ஆரம்பம்

...த்தின் புகுமுக மாணவர்களுக்கான வழிகாட்டல் கருத்தரங்கும் விரிவு... ...திர்வரும் ஒக்ரோபர் மாதம் 18 ஆம் திகதி காலை 09.00 மணிக்கு ஆரம்ப... ஏனைய மாணவர்களுக்கான விரிவுரைகள் பின்வரும் ஒழுங்கில் ஆ...பமாகும்.

* ...ம் வருட முதலாம் அரையாண்டு - 18.10.2010
* ...ம் வருட இரண்டாம் அரையாண்டு - 11.10.2010
* ...ம் வருட இரண்டாம் அரையாண்டு - 11.10.2010

பதி...
(c-1306)

செல்லா சினிமா
09.09.2010 முதல்

மம்முட்டி
அர்ஜுன்
சினேகா
மற்றும் பலர்
நடிப்பில்
ரம்ழான் பெருநாளை முன்னிட்டு
இந்திய இலங்கை ஒரேதின வெளியீடு
வந்தே மாதரம்
அக்ஷன் காட்சிகள் நிறைந்த படம்
D.இமான்
ஹென்றி
அரவிந்த்.T.
பாடல்கள் : வைரமுத்து. நந்தலாலா. சினேகன். விவேகா.
காட்சி நேரம்:- 10.30, 2.30, 6.00, 9.00

## அடையாள அட்டைகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன

(யாழ்ப்பாணம்)

புலோலி வடக்கைச் சேர்ந்த சுந்தரம் சண் முகநாதன் என்பவருடைய தேசிய அடை யாள அட்டையும் (761092375 V) கோப் பாய் தெற்கு பழைய வீதியைச் சேர்ந்த சிவபாதம் சிவதர்சினி என்பவருடைய அடையாள அட்டையும் (727233512 V) விசேட அடையாள அட்டையும் (0903006997) கண்டெடுக்கப்பட்டு யாழ். போதனா வைத்தி யசாலைக் காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட் டுள்ளது. உரியவர்கள் தகுந்த ஆதாரத்துடன் போதனா வைத்தியசாலைக் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம் என பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-4)

## உரும்பிராய் புனித மிக்கேல் ஆலய வருடாந்த திருவிழா

(புன்னாலைக்கட்டுவன்)

உரும்பிராய் புனித மிக்கேல் ஆலய திரு விழாத் திருப்பவனி இன்று புதன்கிழமை காலை 6.30 மணிக்கு நடைபெறும்.

புனித மிக்கேல் ஆலய அருட்தந்தை மைக்கல் தலைமையில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படவுள்ளது.

திருப்பலி முடிந்தவுடன் திருச்சொரூப பவனி நடைபெறும். (ஸ்ரீ-2-78)

## முன்பள்ளி மழலைகளின் விளையாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் அச்சுவேலி லயன்ஸ் கழக அனுசரணையுடன் வலி.கிழக்குப் பிரதேச முன்பள்ளி மழலைகளின் விளையாட்டு விழா இன்று புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி மைதானத்தில் புத்தூர் வலி.கிழக்குப் பிரதேச சபைச் செயலாளர் த.நடராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக யாழ்.பிரதேச செயலக கணக்காளர் லயன் வேலாயுதம் வேல்நிதி, கோப்பாய் தேசிய கல் வியியற் கல்லூரி விரிவுரையாளர் லயன் சீமாட்டி திருமதி புவனேஸ்வரி வேல்நிதி ஆகி யோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

கௌரவ விருந்தினர்களாக ஓய்வு பெற்ற வைத்திய ஆய்வுகூட உத்தியோகத்தர் லயன் இராமநாதன் கிருஷ்ணன், லயன் சீமாட்டி திருமதி கிருஷ்ணன் அருந்தவராணி ஆகி யோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ஸ்ரீ-4)

# இன்று ஒரு தகவல்

## மூடநம்பிக்கைகள்

"இன்றைக்கு யாருடைய முகத்தில் முழிச்சேனோ தெரியவில்லை...பார்க்கிறவனெல்லாம் என் மீது எரிஞ்சு விழுகிறான்" என்று சொல்லி அலுத்துக் கொள்பவர்கள் உண்டு.

பார்க்கின்றவர்கள் எல்லாம் எரிந்து விழுகிறார்கள் என்றால் முழித்த முகத்தில் என்ன கோளாறு–என்று யோசிப்பதை விட, உங்களுடைய முகத்தில் அல்லது மனத்தில் கோளாறு என்று யோசிப்பது தான் நல்லது.

ஒரு பையன் பரீட்சை எழுதினான். பெயிலாகி விட்டான். என்னடா காரணம் என்று விசாரித்தார்கள்.

"வழக்கமாக நான் எழுதும் பச்சைக்கலர் பேனை அன்றைக்குத் தொலைந்து விட்டது சேர். வேறு ஒரு பேனாவால் எழுதும் படி ஆகிவிட்டது. அது தான் ரிசல்ட்டும் வேறு மாதிரி ஆகிவிட்டது" என்றான்.

"பேனாவின் கலரைப் பார்த்தா மார்க்ஸ் போடுகிறார்கள்?" என்று கேட்டால், "அப்படியில்லை சேர்... எனக்கு அந்தப் பேனா தான் ராசியான பேனை." என்கிறான்.

ராசியான கலர், ராசியான சைக்கிள், ராசியான வீடு இவையெல்லாம் உண்மையென்றா நினைக்கிறீர்கள்?

மனோதத்துவ நிபுணர்கள், இதெல்லாம் அர்த்தமில்லாத விடயம்–மூடநம்பிக்கை என்கிறார்கள்.

ஒன்றிரண்டு தடவை பச்சைக்கலர் பேனாவால் எழுதி பாஸ் பண்ணி விட்டான். உடனே பாஸுக்கும் பச்சைக்கலருக்கும் சம்பந்தம் இருக்கிறது என்ற எண்ணம் அவனுடைய மனதில் கொஞ்சம் கொஞ்சமாக வேர் விட ஆரம்பித்து விட்டது. அவ்வளவு தான்.

மூட நம்பிக்கை அவனுடைய மூளைக்குள் போய் உட்காந்து கொள்கிறது. மனோதத்துவ நிபுணர்கள் இதையெல்லாம் சோதனைகள் மூலமாக நிருபித்திருக்கிறார்கள். B.F.skinner என்ற ஒருத்தர் இருந்தார். மூட நம்பிக்கையை பரிசோதனை செய்த முதல் ஆள் இவராகத் தான் இருக்க வேண்டும் என்று நிபுணர்கள் சொல்கிறார்கள். அவர் என்ன செய்தார்.

சில புறாக்களை தனித்தனியாக கூண்டுக்குள் அடைத்தார். 15 நிமிடத்துக்கு ஒரு தடவை அதற்கு சில தானியங்களை ஆகாரமாக கொடுத்தார். இப்படி கொஞ்ச நாட்கள் பண்ணிக் கொண்டிருந்தார். அதற்குப் பின் பார்த்தால் 15 நிமிடத்துக்கு ஒரு தடவை அந்தப் புறாவெல்லாம் வித்தியாசமாக நடந்து கொள்ள ஆரம்பித்தது. ஒரு புறா தலையை மேலும் கீழும் ஆட்டியது. அதிலொன்று கூண்டுக்குள்ளேயே அப்படியும் இப்படியுமாக சுற்றியது. ஒன்று கழுத்தை ஒரு மூலைப் பக்கமாக நீட்டியது. 15 நிமிடத்துக்கு ஒரு தடவை தீனி தவறாமல் போட்டுக் கொண்டு தான் இருந்தார். இருந்தாலும் அந்தப் புறாவெல்லாம் அந்த நேரம் பார்த்து ஒவ்வொரு விதமாக நடக்க ஆரம்பித்து விட்டது. அதெல்லாம் Superstitious ஆகிவிட்டது. அதாவது மூட நம்பிக்கைக்கு ஆளாகிவிட்டது.. இது எப்படி என்று Skinner விளக்கம் கொடுக்கிறார்.

முதல் தடவையாக தீனி போடும் போது தற்செயலாக அந்தப் புறா ஏதாவது செய்துகொண்டிருக்கிறதல்லவா! அதாவது தீனி வரும் நேரத்தில் தற்செயலாக தலையைக் கீழேயும் மேலேயும் ஆட்டிக் கொண்டிருக்கிறது என்று வைத்துக் கொள்ளுங்களேன். இரண்டு மூன்று தடவைகள் தீனி வரும் சமயத்தில் இப்படி செய்கிறது என்றால் அதன் பின் இந்தப்பழக்கம் உறுதியாகி விடுகிறது.

ஒரு கட்டத்தில் தலையை ஆட்டினால் தீனி வருகிறது என்று அந்தப் புறா நம்ப ஆரம்பித்து விட்டது. அவ்வளவு தான் விடயம்.

இன்னொரு விடயம் என்னவெனில்...

மூட நம்பிக்கைக்கு ஆதரவான சான்றுகளை மட்டுமே மனிதன் தேட முயற்சிக்கிறான். ஒருநாள், ஒரு ஆளின் முகத்தில் முழித்து ஏதாவதொரு கெடுதல் வந்து விட்டால் அதன் பின் அந்த ஆளைப் பார்க்கும் போதெல்லாம் என்ன கெடுதல் நடக்கிறதோ அதைத் தான் கணக்கில் எடுத்துக் கொள்கிறான். அன்றைக்கே ஏதாவது நல்லது நடந்தால் கூட அதை நினைத்துப் பார்ப்பதில்லை.

ஒரு விமான விபத்தில் தப்பிய சிலரை பேட்டி கண்டபோது, "நாங்கள் செய்த பிரார்த்தனை தான் எங்களைக் காப்பாற்றியது" என்று சொல்கிறார்கள்.

அதே விபத்தில் இறந்தவர்கள் கூட கடைசிக் கட்டத்தில் பிரார்த்திருப்பார்கள். ஆனால் அதைச் சொல்வதற்கு அவர்கள் உயிருடனில்லை. அதனால் நிரூபிப்பது கஷ்டமாகிவிட்டது. இப்படியெல்லாம் சொல்வதனால் எல்லாமே மூட நம்பிக்கை என்று நான் சொல்வதாக யாரும் நினைத்து விட வேண்டாம். பல நல்ல நம்பிக்கைகள் கூட சரியாக நிருபனம் இல்லாததால் மூட நம்பிக்கை என்று நினைத்துக் கொண்டிருக்கிறோம். அது வேறு விடயம். இது வேறு விடயம். இது இரண்டையும் போட்டு குழப்ப வேண்டாம்.

இந்த ராசி பார்க்கிற விடயத்தை சில பேர் சாமர்த்தியமாகக் கூட பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

ஒரு கணவர் தன் மனைவியைப் பார்த்து,

"தினமும் காலை உன் முகத்தில் முழித்து விட்டால் அன்று முழுக்க எனக்கு ராசியான நாள். எல்லாம் நல்லவிதமாக நடக்கிறது" என்றார்.

அந்த ஆளை தனியாக அழைத்து வந்து "ஏன் சேர் நீங்கள் சொல்வது நிஜம் தானா" என்று கேட்டேன்.

"அட நீங்க வேற சேர். அப்படி சொன்னதனால் தான் காலையிலே எழுந்து காப்பிபோட்டுஎன் முன்னால்வந்து முகத்தைக்காட்டுறா. இல்லையென்றால் அவ எழும்ப 8 மணிக்கும் மேல ஆகும். நான் அவளுக்கு காப்பி போட வேண்டி வந்து விடும்" என்றார்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# 2009 ஆம் ஆண்டு வெளிவந்த நூல்களில் ஒன்பது நூல்கள் சிறந்த நூல்களாக தெரிவு

2009 ஆம் ஆண்டு வெளிவந்த நூல்களில் 9 நூல்கள் வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சினால் சிறந்த நூல்களாக தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இதற்கான உத்தியோக பூர்வ முடிவுகள் அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவனால் வெளியிடப் பட்டுள்ளது.

மேலும் இந்நூல்களின் நூல் ஆசிரியர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு எதிர்வரும் 5 ஆம் திகதி மாலை 2 மணிக்கு கிளிநொச்சி இந்துக்கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார். தெரிவு செய்யப்பட்ட நூல்களின் விபரம் வருமாறு,

**நாடகம்**

"கங்கையின் மைந்தன்", நா.தர்மராஜா (அகளங்கினி), (வவுனியா)

**சிறுகதை**

"முடிந்து போன தசையாடல் பற்றிய கதை", மு.பொன்னம்பலம் (கொழும்பு)

**நாவல்**

"தெம்மாடுகள்", எஸ். ஏ.உதயன் (பேசாலை)

**உயர்கல்வி**

தெரிவுசெய்யப்படவில்லை

**கவிதை**

"அவாவுறும் நிலம்", முல்லை முஸ்திப்பா (கொழும்பு-10)

**சிறுவர் இலக்கியம்**

"தீந்தேன்", பண்டிதர் ம.ந.கடம்பேசுவரன் (வட்டுக்கோட்டை)

**ஆய்வும் விமர்சனமும்**

"இலங்கைத் தமிழர் சிந்தனை வளர்ச்சியில் அமெரிக்கமிஷன்", கலாநிதி.எஸ்.ஜெபநேசன் (யாழ்ப்பாணம்)

**பல்துறை**

தெரிவுசெய்யப்படவில்லை

**பொது**

"ஏழாவது ஊழி" பொ. ஐங்கரநேசன் (யாழ்ப்பாணம்)

**மருத்துவம்**

"செகராச சேகர திறவுகோல்", டாக்டர்.நா.கணேசலிங்கநாதன் (திருகோணமலை)

**சமயம்**

"சிவபெருமானை திருக்கைலாயத்தில் கண்டேன்", வி.செல்வரத்தினம் (வட்டுக்கோட்டை). (ஸ்ரீ-4)

# வடமராட்சி வலய மட்ட வணிகப் போட்டி முடிவுகள்

வடமராட்சி வலய மட்ட வணிகப் போட்டி முடிவுகளை வடமராட்சி வலய பிரதிக் கல்விப்பணிப்பாளர் (கல்வி அபிவிருத்தி க. புஸ்பலிங் கம் அறிவித்துள்ளார்.

இதில் முதல் மூன்று இடங் களைப் பெற்றவர்களின் பெயர் விபரம் வருமாறு,

**தரம் 10**

ரி.சன்சியா (வல்வெட்டி இ.த.க.பாடசாலை), ஜெ.தாட்சாயினி (யா/ இந்து மகளிர் கல்லூரி), எம்.புருசோத்தமன் (யா/ வேலாயுதம் மகாவித்தியாலயம்).

**தரம் 11**

ஜெ.ஜெசிந்ததாசன் (யா/ஹாட்லிக் கல்லூரி), கே.பிருந்தாபன் (யா/நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம்), கே.பிரணவன் (யா/நெல்லியடி மத்திய மகா வித்தி

**தரம் 12**

ப.வினோதா (யா/ மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை), தே.சுரேஸ் (யா/ ஹாட்லிக் கல்லூரி), மூன்றாமிடம் இருவர் எஸ். கோகிலா (யா/ வட இந்து மகளிர் கல்லூரி), க. சிவச்சந்திரன் (யா/விக்னேஸ்வரா கல்லூரி). (ஸ்ரீ-2-19)

# இராசி பலன்

*29.09.2010*
*(புரட்டாதி 13, புதன்கிழமை)*
*சஷ்டி மாலை 6.52 மணிவரை*
*ரோகிணி பிற்பகல் 5.57மணிவரை*
*இராகுகாலம் 12.02 -1.32 மணிவரை*
*சுபநேரம் 4.32 - 6.02 மணிவரை*
*கபில சஷ்டி*

**மேடம்** யோகமான நாள், யோசிக்காமல் செய்த செயல்களில் கூட வெற்றி கிடைக்கும், கொடுத்த வாக்கை காப்பாற்ற வேண்டுமென்ற எண்ணம் மேலோங்கும், திருமண முயற்சி வெற்றிதரும்.

**இடபம்** பெருமைகள் வந்து சேர பெரு மானை வழிபட வேண்டிய நாள், கனிவாகப் பேசி காரியம் சாதிப்பீர் கள், உள்ளொன்று வைத்து புறமொ ன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள் வீர்கள்.

**மிதுனம்** எடுத்த செயலை முடிக்க ஒரு முறைக்கு பலமுறை அலைய வேண்டிய சூழ்நிலை உருவாகும், நீங்கள் சந்திக்க நினைத்த நபர் உங்களைத் தேடி வரலாம்.

**கடகம்** கையில் பணப்புழக்கம் அதிகரிக்கும், வீட்டுத் தேவைகளை பூர்த்தி செய்வதில் அதிக அக்கறை காட்டுவீர்கள், பயணங்கள் கைகூடுவதற்கான வாய்ப்புகள் வந்து சேரும்.

**சிங்கம்** கொள்கைப்பிடிப்போடு செயற் படும் நாள், குடும்பத்தில் மங்கல ஓசை கேட்பதற்கான அறிகுறி தோன்றும், கொடுத்த வாக்கை காப்பாற்றி மகிழ் வீர்கள், தூர தேசச் செய்திகள் மனதைக் குளிர வைக்கும்.

**கன்னி** வம்பு வழக்குகள் தீர்ந்து வளம் காணும் நாள், மறைமுக எதிர்ப்புகள் மாறும், உஷ்ண வியாதி ஏற் படலாம், சொத்துக்களால் இலாபம் கிட்டும்.

**துலாம்** வழிபாட்டால் ஆனந்தம் காண் வேண்டிய நாள், அலைச்சல் அதிகரிக்கும், தேக நலனில் அதிக அக்கறை காட்ட வேண்டிய நாள், மறதியால் ஒரு சில பணிகளை செய்யாமல் விட்டு விடுவீர்கள்.

**விருச்சிகம்** எண்ணங்கள் எளிதில் நிறைவேறும் நாள், இல்லத்தில் நல்ல சம்பவங்கள் நடைபெறுவதற்கான அறிகுறிகள் தோன்றும், திடீர் பயணம் சிந்திக்க வைக்கும், தெய்வீக சிந்தனை மேலோங்கும்.

**தனுசு** கடன் சுமை குறைந்து கவலைகள் தீரும் நாள், இனத்தார் பகை மாற எடுத்த முயற்சி வெற்றி தரும், உடல் நலம் சீராகும், புகழ் மிக்கவர்களின் சந்திப்பு கிட்டும்.

**மகரம்** செல்வாக்கு மேலோங்கும் நாள், எதிர்கால முன்னேற்றத்திற்கு அக்கறை காட்டுவீர்கள், பிள்ளைகளின் நீண்ட நாளைய கோரிக்கைகளை நிறைவேற்றுவீர்கள்.

**கும்பம்** வாகன மாற்றம் பற்றிய சிந்தனை மேலோங்கும், தாய்வழி உறவினர்களால் ஏற்பட்ட தகராறுகள் அகலும், சொத்துக்கள் வாங்கும் எண்ணம் மேலோங்கும், சுப செய்திகள் வந்து சேரலாம்.

**மீனம்** பகை விலகி பாசம் கூடும் நாள், பெரிய மனிதர்களின் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், தொழில் முயற்சியில் எதிர்பார்த்த சில நல்ல திருப்பங்களைக் காணலாம்.

வளவன்

# வடமராட்சி கிழக்கில் கடற்றொழில் செய்வதற்கு இராணுவம் அனுமதி

மீள்குடியேற்றப்பட்டுள்ள வடமராட்சி கிழக்கு பிரதேச மக்கள் கடற்றொழிலை மேற்கொள்வதற்கு இராணுவத்தினரால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை கடலில் தொழிலை மேற்கொள்வதற்கு இராணுவத்தினரால் அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக கடற்தொழிலாளர்கள் தெரிவித்தனர்.

மேலும் ஒவ்வொரு கிராமத்திலும் கடற்தொழிலுக்கு செல்பவர்களுக்கான அனுமதி அட்டைகளை அந்தந்த கிராமத்திலுள்ள இராணுவத்தினரால் நேற்று முன்தினம் வழங்கப்பட்டுள்ளதாகவும் இதனைக் கொண்டு தொழிலில் ஈடுபட முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இம்மக்கள் இடம் பெயர்ந்து முன்பு தொழிலில் ஈடுபட்ட இடங்களில் உள்ள படகு இயந்திரம் மற்றும் தொழில் உபகரணங்களை கடல் வழியாக எடுத்து வருவதற்கு அனுமதி வழங்கப்படவில்லை எனவும் இதனை தரை வழியாகவே வடமராட்சி கிழக்கிற்கு கொண்டு வர வேண்டுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் குறித்த மக்கள் உப கரணங்களை எடுத்து வருவதில் மிகுந்த கஷ்டங்களை எதிர்நோக்கு வதாக கவலைதெரிவிக்கின்றனர். (ஸ்ரீ-4-64)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 80 | 90 |
| உருளைக்கிழங்கு | 80 | 80 | 80 |
| பச்சைமிளகாய் | 50 | 60 | 70 |
| தக்காளி | 80 | 80 | 70 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 40 | 40 |
| கோவா | 60 | 60 | 60 |
| கரட் | 40 | 40 | 80 |
| பூசணி | 40 | 35 | 30 |
| புடோல் | 40 | 40 | 40 |
| வாழைக்காய் | 40 | 40 | 50 |
| சின்ன வெங்காயம் | 70 | 60 | 70 |
| பெரிய வெங்காயம் | 80 | 50 | 60 |
| பாகற்காய் | 80 | 80 | 80 |
| வெண்டிக்காய் | 40 | 40 | 40 |
| கருணைக் கிழங்கு | 50 | 60 | 70 |
| பயற்றங்காய் | 50 | 40 | 60 |
| லீக்ஸ் | 80 | 120 | 100 |
| பீற்றூட் | 30 | 20 | 30 |
| கறிமிளகாய் | 60 | 60 | 60 |
| முருங்கைக்காய் | 80 | 50 | 80 |
| போஞ்சி | 120 | -- | 100 |
| கத்தரிதம்புள்ள | 40 | 35 | 70 |
| கீரை - 1 பிடி | 30 | 15 | 25 |
| தேசிக்காய் | 80 | 60 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 35-40 | 30 |





இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தில் அங்கம் வகிக்கும் உதைபந்தாட்ட லீக் அணிகளுக்கிடையில் நடைபெற்றுவரும் உதைபந்தாட்ட லீக் போட்டிகள் அண்மையில் நெல்லியடி மத்திய மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது. விருந்தினராக கலந்து கொண்ட நெல்லியடி பொலிஸ்நிலைய பொறுப்பதிகாரி ரி.காங்கராவிடம் பருத்தித்துறை லீக் அணி வீரர்கள் தங்களை அறிமுகம் செய்து வைப்பதையும் அருகில் பருத்தித்துறை உதைபந்தாட்டச் செயலாளர் கி.வரதராஜன் நிற்பதையும் விளையாடிய ஹற்றன் லீக் அணிவீரர்கள் மற்றும் பருத்தித்துறை லீக் அணி வீரர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:-கரவெட்டி செய்தியாளர்)

# செயலமர்வு

(அல்வாய்)

வடமராட்சி வலயப் பாடசாலைகளில் தரம் 6 தொடக்கம் தரம் 11 வரையில் சுகாதாரமும் உடற்கல்வியும் பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு எதிர்வரும் 9,10 ஆம் திகதிகளில் காலை 8.30 மணி தொடக்கம் மாலை 3.30 மணிவரை ,யாழ். மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலையில் நடைபெறவுள்ளது.

இச்செயலமர்வு கொழும்பு தேசிய கல்வி நிறுவகத்தில் இருந்து வருகை தரும் வளவாளர்களால் நடத்தப்படவுள்ளது.

பாடசாலையில் இப்பாடத்தைக் கற்பிக்கும் ஆசிரியர் ஒருவரை மட்டும் தவறாது அனுப்பி வைக்குமாறு அதிபர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

இச்செயலமர்வில் பங்குபற்றுவதற்கான கொடுப்பனவும் ஆசிரியர்களுக்கு வழங்கப்படவுள்ளது.

பெருவிளையாட்டு நிகழ்வுகளுக்கான செயல் முறை பயிற்சியும் நடைபெறவுள்ளதென வடமராட்சி வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் ச. செல்வகுமரன் அறிவித்துள்ளார்.

(ஸ்ரீ-2-19)

★ ★ ★

வடமராட்சி வலய பாடசாலைகளில் உள்ள நட்புதவியாளர்களுக்கான செயலமர்வு இன்று புதன்கிழமை பிற்பகல் ஒரு மணிமுதல் 3.30 மணிவரை யாழ். வட இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இச்செயலமர்வில் விழிப்புணர்வுக் கலந்துரையாடல் மற்றும் இறுவெட்டு வழங்கல் என்பன இடம்பெறவுள்ளதால் பொறுப்பான ஆசிரியரை தவறாது பங்குபற்ற செய்யுமாறு வடமராட்சி வலயக் கல்விப்பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார்.

(ஸ்ரீ-4-19)

# நீதிமன்றத்தை அவமதித்த நபருக்கு ஒருவருடகால சிறைத்தண்டனை

நீதிமன்றத்தினை அவமதித்த குற்றத்திற்காக குற்றவாளி ஒருவருக்கு ஒருவருட கால சிறைத்தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

கடந்த 10 ஆம் திகதி வெள்ளிக் கிழமை வழக்கு விசாரணை ஒன்றிற்காக பருத்தித்துறை நீதவான் நீதிமன்றத்திற்கு குறித்த நபர் அழைக்கப்பட்டிருந்தார் என குறிப்பிடப்படுகிறது. இதற்கிணங்க குறித்த நபர் நீதிமன்றில் ஆஜரானார்.

பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதிபதி திருமதி ஜோய்மகிழ்மகாதேவா, குறித்த நபரிடம் விசாரணை மேற்கொண்ட போது அந் நபர் நீதிமன்றத்தை அவமதிக்கும் வகையில் தனது தலையை சுவருடன் மோதி மன்றில் சத்தம் போட்டதுடன் வழக்கை திசைதிருப்ப முயன்றுள்ளார்.

இவரது செயற்பாடுகளை அவதானித்த நீதவான் குறித்த நபர் நீதிமன்றத்தை அவமதிக்கும் வகையில் செயற்பட்டமையினால் குற்றவாளி என குறிப்பிட்டதுடன் குற்றவாளிக்கு ஒருவருட கால சிறைத்தண்டனையும் வழங்கி தீர்ப்பளித்தார். (ஸ்ரீ-4-24)

# அவதானத்துடன் பிரயாணிப்பதன் மூலமே விபத்துக்களை தவிர்த்துக் கொள்ளலாம்

## யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அறிவுரை



(யாழ்ப்பாணம்)

மக்களின் அவதானமான பிரயாணத்தின் மூலமே விபத்துக்கள் இடம்பெறுவதை தவிர்த்துக் கொள்ளலாம் என யாழ்.மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நேவின் பத்மதேவ தெரிவித்துள்ளார்.

பொலிஸ் போக்குவரத்து பிரிவினரின் ஏற்பாட்டில் நேற்று துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்ற கண்காட்சியில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் அதைத் தொடர்ந்து உரைநிகழ்த்துகையில்,

வாகன விபத்துக்களை தவிர்த்துக் கொள்ளும் நோக்கில் தான் இக்கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. குறிப்பாக வாகனங்களில் பயணிப்பவர்கள் அவதானத்துடன் பயணிக்க வேண்டும்.

நான் பல முறை அவதானித்துள்ளேன் பாடசாலை மாணவ, மாணவிகள் துவிச்சக்கர வண்டியில் பயணிக்கும் போது சமாந்தரமாக செல்வதை காண முடிகிறது. இதனால் தான் இக்கண்காட்சியில் பாடசாலை மாணவர்களை உட்படுத்தியுள்ளோம். தெருக்களில் பயணிக்கையில் ஒருவர் பின் ஒருவராக செல்ல வேண்டும்.

இவைதவிர பெருந்தெருக்களில் இருந்து சிறுவீதிகளுக்கும் சிறுவீதிகளில் இருந்து பெருந்தெருக்களுக்கும் நுழையும் போது மிகவும் அவதானமாக இருத்தல் வேண்டும்.மேலும் வீதி விபத்துக்கள் எச்சந்தர்ப்பத்திலும் ஏற்படலாம்.மக்களின் அவதானமான பயணத்தின் மூலமே விபத்துக்கள் இடம்பெறுவதை தவிர்த்துக் கொள்ள முடியும் என அவர் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் யாழ். மாவட்டத்திலுள்ள பாடசாலைகளில் இருந்து 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்களும் ஆசிரியர்களும் கலந்துகொண்டனர். அத்துடன் ஆட்டோ சாரதிகள், அரச நிறுவனத்தில் சாரதிகளாக பணிபுரிபவர்கள் மற்றும் பொலிஸ் , இராணுவத்தில் சாரதிகளாக பணிபுரிபவர்கள் என பலர் கலந்துகொண்டனர். (ஸ்ரீ-4-6)

# கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் 'தமிழ் துறை' கருத்தரங்கு இன்று பிற்பகல் 2 மணிக்கு யாழ். பல்கலைக்கழக தமிழ்துறை விரிவுரை மண்டபத்தில் தமிழ்துறைத் தலைவர் பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா தலைமையில் நடைபெறும்.

இக்கருத்தரங்கில் கலாநிதி செல்வி. செல்வரஞ்சிதம் சிவசுப்பிரமணியம் 'சிலப்பதிகாரத்தொன்மை' என்ற பொருளில் கருத்துரை வழங்கவுள்ளார்.

எனவே, இதில் அனைத்து ஆர்வலர்களையும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு யாழ். பல்கலைக்கழக தமிழ்துறைத் தலைவர் பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)


# ஆசிரியர் தினத்தை முன்னிட்டு பாடசாலை மட்ட நிகழ்ச்சிகள்

(அல்வாய்)

வடமாகாண கல்விப் ப்ணிப்பாளரின் அறிவுறுத்தலுக்கமைய வடமராட்சி வலயத்தில் உள்ள சகல பாடசாலைகளும் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 6 ஆம் திகதி புதன்கிழமை ஆசிரியர் தினத்தை நடத்துவதற்கு பாடசாலை மட்டத்தில் நிகழ்ச்சிகளை ஒழுங்குபடுத்த வேண்டும்.

இதற்கமைய பாடசாலை அபிவிருத்திச் சங்கம் மாணவத் தலைவர்கள் இந்நிகழ்வினைப் பொறுப்பேற்று ஆசிரியர் தினத்தை சிறப்பாக நடாத்துமாறு வடமராட்சி வலயக் கல்விப்பணிப்பாளர் வ. செல்வராசா அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2-19)



துணைவியூர் சிவ.கேசவன் எழுதிய சங்ககாலம் முதல் சமகாலம் வரை எனற உயர்தரத் தமிழ்பாட நூல் வெளியீட்டு விழா அண்மையில் சித்தங்கேணியில இடம பெற்றது இதில் தெல்லிப்பழை கோட்டக் கல்விப் பணிப்பாளர் ச.கைலாசநாதன் நூலை வெளியிட்டு வைப்பதையும் நடுவில் நூலாசிரியர் சிவ.கேசவன் நிற்பதையும் படத்தில் காணலாம்.

# காரைநகர் பொன்னாலைப்பால வீதியின் புனரமைப்பு பணிகள் பூர்த்தி

(காரைநகர்)

காரைநகர் பொன்னாலைப் பாலம் வீதி புனரமைக்கும் பணிகள் முழுமையாக நிறைவு பெற்றுள்ளதாக ஆர்.டீ.சீ.பொறியியலார் எம். தில்லைநாதன் தெரிவித்துள்ளார்.

மேலும் புனரமைக்கப்பட்ட இவ்வீதியானது வீதி அபிவிருத்தி அதிகார சபையினரிடம் கடந்த 25 ஆம்திகதி சனிக்கிழமை ஒப்படைக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

சுமார் 350 மில்லியன் ரூபா செலவில் அகலமாக்கி அமைக்கப்பட்ட இவ்வீதியின் ஒப்பந்த வேலைகள் முழுமையாக நிறைவு பெற்றுள்ளன.

ஆனாலும் சிறுசிறு வேலைகள் பூர்த்தியாகாமல் நடைபெற்று வருவதுடன் ஒப்பந்த வேலைகளுக்கு மேலதிகமாக வழங்கப்பட்ட காரைநகர் கிராமிய வைத்தியசாலை வரையிலான வீதியின் இரு மருங்கும் அகலப்படுத்தி புனரமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

அதேபோல் பொன்னாலை சந்தியில் இருந்து யாழ்.வீதியின் சிறுபகுதியும் இவ்வாறு அகலமாக்கப்பட்டு வருகிறது. இவ் வேலைகள் குறித்த காலப்பகுதியினுள் நிறைவு பெற்றுவிடும் எனவும் அவர் தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்தில் இதுவே முதன் முதலாக அமைக்கப்பட்ட இருவழிப்பாதை என்ற பெருமை பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2-246)

## வடக்கின் அபிவிருத்திப் பணிகளில் ஈடுபடும்

# ஒப்பந்தகாரர்கள் குறித்து ஆராய்வதற்கு வடமாகாண ஆளுநர் நடவடிக்கை

(கொழும்பு)

வட பகுதி அபிவிருத்தி நடவடிக்கையில் ஈடுபடும் ஒப்பந்தகாரர்களின் பணி குறித்து ஆராய வடமாகாண ஆளுநர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

ஒப்பந்த காரர்கள் தங்கள் பணிகளை சரிவர செய்யத்தவறும் பட்சத்தில் அவர்களுடனான ஒப்பந்தங்கள் இரத்துச் செய்யப்படும் என்று வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி தெரிவித்தார்.

வடமாகாணத்தில் அரசாங்கத்தால் முன்னெடுக்கப்படும் பல்வேறு அபிவிருத்திப் பணிகளை துரிதப்படுத்துவதே இதன் நோக்கமாகும்.

வடமாகாணத்தில் அபிவிருத்திப் பணிகளை மேலும் துரிதப்படுத்துவது தொடர்பாக ஒப்பந்த காரர்கள் மற்றும் அதன் உடன் தொடர்புடைய பொறியிலாளர்களுடன் விரிவாக ஆராயத் தீர்மானித்துள்ளதாக ஆளுநர் மேலும் குறிப்பிட்டார்.

இதில் வட பகுதியில் நானூற்றுக்கும் மேற்பட்ட ஒப்பந்தகாரர்கள் கட்டு மாணப் பணிகளில் ஈடுபட்டு வருவதோடு அவர்களை வடமாகாண ஆளுநர் இன்று புதன் கிழமை வவுனியா கலாசார நிலை யத்தில் சந்தித்துப் பேசவுள்ளார்.

வட மாகாண அபிவிருத்திப் பணிகளுக்கு தேவையான போதிய நிதியை அரசாங்கம் ஒதுக்கீடு செய்துள்ளதாகவும் அதனைத் துரிதப்படுத்துவதே பிரதான நோக்கம் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார். (ஸ்ரீ-2)

# இந்திய வர்த்தகத் தூதுக்குழு இலங்கைக்கு விஜயம்

(கொழும்பு)

இலங்கை வந்துள்ள இந்திய வர்த்தகத் தூதுக்குழு அமைச்சர் றிஷாட் பதியுதினுடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளது.

இந்திய கைத்தொழில் துறை கூட்டுச் சம்மேளனத்தைச் சேர்ந்த வர்த்தக மற்றும் முதலீட்டு தூதுக்குழு ஒன்று இலங்கைக்கு விஜயம் செய்துள்ளது.

தற்போதைய சூழலில் இலங்கையில் வர்த்தகம் மற்றும் முதலீட்டு வாய்ப்புக்களை அதிகரித்துக்கொள்வதற்கான சாத்தியங்கள் பற்றி ஆராயும் வகையில் வருகை தந்துள்ள இக்குழுவினர் கைத்தொழில் மற்றும் வர்த்த அமைச்சர் றிஷாட் பதியுதினை அமைச்சு அலுவலகத்தில் சந்தித்து விரிவான பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டனர்.

இந்தியாவின் பிரிகேட் விருந்தோம்பல் சேவைகள் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி வினீத் வர்மா தலைமையிலான குழுவினரே இலங்கை வந்துள்ளனர்.

(ஸ்ரீ-2)

# துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகிய இலங்கையர் உயிரிழப்பு

(கொழும்பு)

ஐக்கிய அரபு இராச்சியத்தில் பதிவு செய்யப்பட்ட கப்பலொன்றில் சேவையாற்றிய இலங்கை கப்டன் ஒருவர் துப்பாக்கி சூட்டுக்கு இலக்காகி கடந்த ஞாயிற்றுக்கிழமை உயிரிழந்துள்ளார்.

கோமாகம பகுதியைச் சேர்ந்த 53 வயதான சுனில் தர்மரத்ன என்பவரே துப்பாக்கி சூட் டுக்கு இலக்காகி உயிரிழந்தார்.

இவர் ஒஸன் றைற் என்ற கப்பலின் கப்டனாக கடந்த 4 வருடங்களாக கடமையேற்று வந்துள்ளார். குறித்த கப்டன் ஈரான் மற்றும் ஐக்கிய அரபு இராச்சியம் ஆகிய நாடுகளின் கடல் எல்லையில் சஞ்சரித்துக் கொண்டிருந்த போதே துப்பாக்கி பிரயோகம் இடம்பெற்றதாக தெரி விக்கப்படுகிறது.

இந்தக் கப்பல் சார்ஜா துறைமுகத்தை நோக்கி தற்போது பயணித்து வருவதாக வெளிவிவகார அமைச்சு குறிப்பிடுகின்றது.

உயிரிழந்த இலங்கைக் கப்டனின் சடலத்தை நாட்டிற்குக் கொண்டுவருவதற்கான நடவடிக்கைகளை ஐக்கிய இராச்சியத்தில் உள்ள இலங்கைத் தூதரகம் மேற்கொண்டு வருவதாகவும் வெளிவிவகார அமைச்சு தெரிவிக்கின்றது.

துப்பாக்கி பிரயோகத்திற்கான காரணம் என்னவென்பது இது வரை சரியான தகவல்கள் தெரியவில்லை. இந்தச் சம்பவம் குறித்து சார்யாவிலுள்ள ஹொன்சேலர் நாயகமூடாக விசாரணை கள் மேற்கொள்ளப்படுவதாகவும் வெளிவிவகார அமைச்சு குறிப்பிடுகின்றது. (ஸ்ரீ-4)

# தரம் -5 புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகள்

**யா/சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாசாலை**

ம.கம்சிகா-172,த.டிலக்சனா-162, ச.குகாயினி-160,ரா.சோவினி-154, ம.கலைவிழி-153, அ.அபினாஸ்-152, ஜெ.கிருஸ்ணப்பிரியன்-151, ரா.லதுசன்-151, சி.கஜனி-151, உ.கதீசன்-151, இ.தவரூபன்-146, சி.கயப்பிரியன்-142.

**கிளி/இந்து ஆரம்ப வித்தியாலயம்**

நி.கோமிஷா-162, ச.இசைவாணி-161, மை.ஜெனிலா-145, ஜீ.ஜீவப்பிரிதா-144, பி.டனிஸ்ரன்-142.

**யா/நாயன்மார்க்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலை**

பி.கஜியந்தன்-151

**யா/வல்வை சிவகுரு வித்தியாசாலை**

ச.ரமணன்-160

**யா/விக்னேஸ்வரா ஆரம்பப்பாடசாலை**

கெ.ரகுராஜ்-159,ப.குணாயினி-154,இ.விதுர்ஷனன்-149,ப.தனோஜா-149,கு.நிமல்ராஜ்-148,ஜீ.உஷாளினி-146,

**யா/கரணவாய் மணியகாரன் தோட்டம் அ.த.க.வி.**

அ.வாதவூரன்-161,ஸ்ரீ.அபிநயா-147,நே.நூர்ஜிகா-146,க.ஷாமந்தி-143, இ.திலோத்தமன்-162.

**யா/தேவைரயாளி இந்துக்கல்லூரி**

சி.விதுர்சன்-164,சு.சுகிர்தன்-162, ஆ.ஆதித்தியா-159,சி.திரண்யா-148.(ஸ்ரீ)

# இரண்டு வாரத்தில் இரணைமடுக் குளத்திலிருந்து யாழ்ப்பாணத்திற்கு குடிநீர் வழங்கும் திட்டம்

## தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை தெரிவிப்பு

(கொழும்பு)

கிளிநொச்சி இரணைமடு குளத்திலிருந்து யாழ்ப்பாணத்துக்கு குடிநீர் வழங்கும் திட்டம் இரண்டு வாரகாலத்தில் ஆரம்பித்து வைக்கப்படும் என்று தேசிய நீர்வழங்கல் வடிகால் அமைப்பு சபை தெரிவித்துள்ளது.

இதற்கமைய நூறு கோடி ரூபா செலவில் ஆரம்பிக்கப்படவிருக்கும் குடிநீர் வழங்கும் திட்டத்திற்கான செயலகம் யாழ். மாவட்டத்தில் உள்ள சுண்டுக்குளிப் பகுதியில் திறந்து வைக்கப்படும்.

சகல மக்களுக்கும் சுத்தமான குடிநீர் கிடைக்க வேண்டும் என்ற மஹிந்த சிந்தனைக்கு அமைவாக உலகவங்கியின் நிதியுதவியுடன் இந்த திட்டம் மேற்கொள்ளப்படுவதாக குறிப்பிடப்படுகிறது. (ஸ்ரீ-4)


## மக்கள் வங்கி

1986ஆம் ஆண்டின் 32ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961ஆம் ஆண்டின் 29ஆம் இலக்க மக்கள் வங்கிச்சட்டத்தின் 29டி என்னும் பிரிவின் கீழ் ஆன தீர்மானம்.

1986ஆம் ஆண்டின் 32ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961ஆம் ஆண்டின் 29ஆம் இலக்க மக்கள் வங்கிச்சட்டத்தின் 29டி என்னும் பிரிவின் கீழ் பின்வரும் தீர்மானம் மக்கள் வங்கிப் பணிப்பாளர் சபையினால் 2008.05.30ஆந் திகதி நடைபெற்ற அவர்களது கூட்டத்தில் ஏக மனதாக நிறைவேற்றப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

யாழ்ப்பாணப் பிரதேச நொத்தாரிசு திருமதி லிங்கா துரைராஜா அவர்களால் அத்தாட்சிப் படுத்தப்பட்ட 2004.10.19ஆந் திகதி கொண்ட இல 4668 இலக்கம் கொண்ட ஈட்டு முறியின் பிரகாரம் வங்கிக்கு செலுத்த வேண்டிய வருமதி கொடுப்பனவில் திரு.பொன்னையா தவராசா, திருமதி தவராசா மதிவதனா தவணை தவறியுள்ளமையினாலும், குறிப்பிட்ட ஈட்டு முறியின் கீழ் தற்போது ரூபா பதினொருலட்சத்து அறுபத்து ஐயாயிரத்து அறுநூற்றுத் தொண்ணூறு சதம் ஏழும்(1,165,690.07) பணத்தொகையை ஈட்டு முறி இல 4668 பிரகாரம், தற்போது மக்கள் வங்கிக்கு வருமதியாக சேரவேண்டியுள்ளது.

ஆகையால் மக்கள் வங்கி பணிப்பாளர் சபை அதன் 1986ஆம் ஆண்டின் 32ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29ஆம் இலக்க வங்கி சட்டத்தினால் அதற்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் கீழ் இவ் வருமதி கொடுப்பனவுகளை அறவிடுவதற்காக மேல் குறிப்பிட்ட ஈட்டு முறி 4668 இன் கீழ் வங்கிக்கு ஈடு செலுத்தப்பட்ட ஆதனம் யாழ்ப்பாணம் உத்தரவு பெற்ற ஏலதாரர் கார்த்திகேசு பொன்னையா பாலகிருஸ்ணன் அவர்களால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டு வங்கிக்கு வருமதியாய் சேரவேண்டிய சொல்லப்பட்ட தொகை ரூபா பதினொரு இலட்சத்து அறுபத்து ஐயாயிரத்து அறுநூற்றி தொரண்ணூறு சதம் ஏழும் (1,165,690.07),பதினொரு இலட்சத்து ஐம்பத்தாறாயிரத்து எண்ணூற்றி பதினேழும் சதம் தொண்ணூற்றி ஆறுக்கும் (1,156,817.96) 2006.12.13 திகதியிலிருந்து விற்பனை திகதிவரை 20.25% வீத வருடாந்த வட்டியும், ஏற்கனவே செலுத்தப்பட்ட தொகையிருந்தால் அவை தவிர்த்து மக்கள் வங்கிச்சட்ட "29எல்" பிரகாரம் அறவிடப்படும் ஏணைய வரவுத் தொகைகளையும் அறவிட வேண்டும் என்பதை தீர்மானம் செய்துள்ளது.

### ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விபரம்

1) வடமாகாணம், யாழ்.மாவட்டம், வண்ணார்பண்ணை பரிஷ், வண்ணார்பண்ணை மேற்கு "வெள்ளைச்சூரித்தரை" நிலம் குளி15.5/8 உறுதியின்படி ஆனால் உத்தரவு பெற்ற நில அளவையாளர் எஸ்.நிர்மலேந்திரன் 2004.09.18 ஆந் திகதி வரையப்பட்ட இல 398இன் பிரிவின் படி குளி 15.389 இரு மாடிக்கட்டிடம், கிணறு, பயிரிட்டவை, குறிப்பிட்ட குளி 15.389 எல்லை கிழக்கு கந்தப்பிள்ளை சிற்றம்பலம் ஆதனம், வடக்கு செல்லத்துரை பெண் தெய்வானைப்பிள்ளை ஆதனம், மேற்கு சிவன்பண்ணை வீதியும் கிருஷ்ணன் பெண் ராஜலட்சுமியின் ஆதனம், தெற்கு முத்தையா குணரத்தினத்தின் ஆதனம். இலக்கம் டி639/82 இன் கீழ் யாழ்ப்பாணம் காணி அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

கிளை சங்கானை,
மக்கள் வங்கி.

(சி-1303)

பணிப்பாளர்சபை கட்டளைப்படி.
உதவி பொது முகாமையாளர்,
வடக்கு வலயம்.



## எம்மினிய நம்பியை வாழ்த்துகின்றோம்



யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முகாமைத்துவக் கற்கைகள் வணிக பீடத்தின் முதலாவது பேராசிரியர் என்ற உயர் தகைமையை எய்திய

**கலாநிதி.தி.வேல்நம்பி**

அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதில் உளம் பூரிப்படைகின்றோம். எம்மண்ணின் கல்வி வளர்ச்சிக்காக அரும் பணி ஆற்றும் அவர் மேலும் பல உயர்வுகளை எய்த வேண்டுமென அவாவுகின்றோம்.

**அன்புடன்**

நீர்வை மணி கு.தியாகராஜக் குருக்கள்




இ.குணநாதன் (அதிபர்,நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி)

ச.லலீசன் (நீர்வைக்கிழான்)

(விரிவுரையாளர் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை)

(சி-1305)



யாழ். பொலிஸ் போக்குவரத்தின் பிரிவின் ஏற்பாட்டில் நேற்று துரையப்பா விளையாட்டு அரங்கில் நடைபெற்ற கண்காட்சி நிகழ்வில் விருந்தினர்களாக கலந்துகொண்ட யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நேவின் பத்மதேவா யாழ்.நீதிமன்ற நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜா ஆகியோர் அழைத்துவரப்படுவதையும் பொலிஸ் அத்தியட்சகர் உரையாற்றுவதையும் பொலிஸ் குழுவினால் நடத்தப்பட்ட விபத்துக்கள் பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சிகளையும் கண்காட்சி தொடர்பாக கேட்கப்பட்ட கேள்விகளுக்கு பதில் உரைத்த ஒருவருக்கு யாழ். பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரி சி.ஐ.குணசேகரா பரிசில் வழங்குவதையும் நிகழ்வில் கலந்து கொண்ட மாணவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:-கரன்)

# முதலாந்தர அனுமதியில் மோசடி செய்தமை தொடர்பில் மேல்மாகாண அதிபர்கள் எழுவர் பணிநீக்கம்

(கொழும்பு)

முதலாம் தரத்திற்கு பிள்ளைகளைச் சேர்த்துக் கொள்வதில் இடம்பெற்ற முறைகேடுகள் தொடர்பில் மேல் மாகாணத்தைச் சேர்ந்த 7 பாடசாலைகளின் அதிபர்கள் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

இந்த அதிபர்களுக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மேல் மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் ஜயந்தி விஜேதுங்க தெரிவித்தார்.

இது தவிர மாகாணப் பாடசாலைகளில் மாணவர்களை சேர்த்துக்கொள்ளும் நடவடிக்கையின் போது இடம்பெற்ற பல்வேறு முறைகேடுகள் தொடர்பில் சுமார் 50 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகவும் முறைப்பாடுகள் குறித்து வலயக்கல்வி அலுவலக மட்டத்தில் விசாரணைகள் நடத்தப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

முதலாம் தரத்திற்கும் பிள்ளைகளைச் சேர்த்துக்கொள்ளும் நடவடிக்கையின் போது கல்வி உத்தியோகத்தர்கள் முறைகேடுகளில் ஈடுபட்டிருந்தால் அது தொடர்பில் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனக் கல்வி அமைச்சின் செயலாளர் கூறினார். (ஸ்ரீ-2)

# கிளிநொச்சியில் மிதிவெடி செயற்பாட்டு உப அலுவலகம் திறப்பு

கிளிநொச்சி மாவட்ட மிதிவெடி செயற்பாட்டு உப அலுவலகம் இன்று காலை 11 மணிக்கு கிளி.மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரனால் திறந்து வைக்கப்படவுள்ளதாக யாழ். மாவட்ட மிதிவெடி செயற்பாட்டு அலுவலர் வி.முருகதாஸ் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# சரத் பொன்சேகாவுக்கு எதிராக மேலுமொரு குற்றப்பத்திரிகை தாக்கல்

படையில் இருந்து தப்பி சென்ற 10 வீரர்களை தம்வசம் வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் நாடாளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகா மற்றும் அவரின் செயலாளர் சேனக சில்வா ஆகியோருக்கு எதிராக குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கொழும்பு மேல் நீதிமன்றத்தில் நேற்று இந்த குற்றப்பத்திரிகை சட்டமா அதிபரினால் தாக்கல் செய்யப்பட்டது.

கடந்த 2009ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலின் போதே சரத் பொன்சேகா தப்பிச் சென்ற இந்த படை வீரர்களை தம்வசம் வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டுக்கு உள்ளானார்.

இந்த நிலையில் இந்த குற்றப் பத்திரிகைக்கு அமைய விசாரணைகள் எதிர்வரும் டிசம்பர் 13ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளதாக மேல் நீதிமன்ற நீதிபதி தீபாலி விஜயசுந்தர அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# கட்டார் தீ விபத்தில் இலங்கையர் ஒருவர் பலி

கட்டாரில் கட்டமொன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் இலங்கையைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்த இளைஞர் பணிபுரிந்த 9 மாடிக் கட்டத்தொகுதியில் தீப் பற்றியதாக வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் மேலதிகப்பொதுமுகாமையாளர் எல்.கே.ருஹுனுகே குறிப்பிட்டார்.

மின்சாரத் தொழில் நுட்பவியலாளராகக் கட்டாரில் பணிபுரிந்து வந்த மாத்தளைப் பகுதியைச் சேர்ந்த இந்த இளைஞர் சில மாதங்களுக்கு முன்னரே திருமண பந்தத்தில் இணைந்துள்ளார்.

இவரது மரணம் தொடர்பாக கட்டாரில் நடைபெறவுள்ள விசாரணைகளின் பின்னர் இளைஞரின் பிரேதத்தை இலங்கைக்குக் கொண்டுவர நடவடிக்கை எடுப்பதாக வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் மேலதிகப் பொதுமுகாமையாளர் எல்.கே.ருஹுனுகே குறிப்பிட்டார். (ஸ்ரீ-2)

# ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கான போட்டி முடிவுகள்

(பூநகரி)

பூநகரி கோட்ட பாடசாலைகளின் ஆரம்பிரிவு மாணவர்களுக்கு நடத்தப்பட்ட வகுப்பு ரீதியான கற்றல் திறன் செயற்பாடுகளுடன் தொடர்புடைய போட்டிகளில் வெற்றி பெற்றவர்களின் பெயர் விபரம் அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்போட்டிகளில் முதலிடம் பெற்ற மாணவர்களின் பெயர் விபரம் வருமாறு,

**திருக்குறள் மனனப் போட்டி**

தரம் -1

றெ.றெஜிமாலினி (இரணைதீவு றோ.க. பாடசாலை)

தரம்-2

வி.துவாரகா (கரியாலை நாகபடுவான் அ.த.க.பாடசாலை)

தரம்-3

ந.பிருந்தா(ஜெயபுரம் ம.வி.)

தரம்-4

பி.மனோஜன் (பூநகரி ம.வி.)

தரம்-5

ச.சயிந்தூ (ஞானிமடம் அ.த.க.பாடசாலை)

**வாய்பாடு**

தரம்-1

ந.கோபிகா (அரியாலை நாகபடுவான் அ.த.க. பாடசாலை)

தரம்-2

றொ.மேரி றொபேக்கா(வலைப்பாடு றோ.க. பாடசாலை)

தரம்-3

க.சங்கவி (சாமிப்புலம் அ.த.க. பாடசாலை)

தரம்-4

கி.ஐஸ்வர்யா (கிராஞ்சி அ.த.க.பாடசாலை)

தரம்-5

ச.றஜீவா (கிராஞ்சி அ.த.க. பாடசாலை)

**கோலம்போடுதல்**

தரம்-1

செ.பவிகரன் (ஜெயபுரம் ம.வி.)

தரம்-2

மு.கோலம்பிரியன்(ஜெயபுரம் ம.வி.)

தரம்-3

கி.கொலஸ்ரிகா (கிராஞ்சி அ.த.க. பாடசாலை)

தரம்-4

ச.சிந்துஜா (முழங்காவில் ம.வி.)

தரம்-5

ஆ.அஜிகரன் (இரணைதீவு றோ.க. பாடசாலை)

**விரைவுக்கணிதச் செய்கை**

தரம்-3

ச.சங்கவி (சாமிப்புலம் அ.த.க.பாட சாலை)

தரம்-4

ம.லேஜீனா (குழிமுனை அ.த.க. பாடசாலை)

தரம்-5

இ.லலிதர்ஷினி (பூநகரி ம.வி.)

**சிறுவர் நாடகம்**

ஞானிடம் அ.த.க. பாடசாலை (ஸ்ரீ-84)


## யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம், இலங்கை
## உயர் பட்டப்படிப்புக்கள் பீடம்

**விசேட மீள் பரீட்சை - முதுமாணி கற்கை நெறிகள்**

யாழ். பல்கலைக்கழக உயர் பட்டப்படிப்புகள் பீடத்தால் நடத்தப்படும் பின்வரும் முதுகலைமாணி கற்கைநெறிகளின் முதலாம், இரண்டாம், அரையாண்டு பரீட்சைக்குத் தோற்றி குறித்த பாட அலகுகளில் சித்தியடையாத மாணவர்களுக்கும், கற்கைநெறியை பூர்த்தி செய்து முதலாம், இரண்டாம், அரையாண்டுப் பரீட்சைக்கு தோற்ற தவறிய மாணவர்களுக்கும் விசேட மீள் பரீட்சை நடத்த ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

1. அபிவிருத்தி முதுகலைமாணி கற்கைநெறி (MA in Development studies)
2. குடித்தொகை அபிவிருத்தி முதுகலைமாணி கற்கை நெறி (MA in Population Development studies)
3. பிராந்தியத்திட்டமிடல் முதுகலைமாணி (MA in Regional Planning)
4. பொதுநிர்வாகத்தில் முதுகலைமாணி (MA in Public Administration)
5. பண்பாட்டியல் முதுகலைமாணி கற்கை நெறி (MA in Cultural Studies)

மேற்குறித்த விசேட பரீட்சைக்கான விண்ணப்பப்படிவத்தினை உயர் பட்டப்படிப்புகள் பீடம், யாழ். பல்கலைக்கழகத்தில் பெற்றுக் கொள்ளலாம். பரீட்சை கட்டணம் ஒரு பாடத்திற்கு ரூபா 300/- வீதம் செலுத்தப்படல் வேண்டும்.


பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்தினை 30.10.2010 இற்கு முன்னர் உயர் பட்டப்படிப்புக்கள் பீடம், யாழ். பல்கலைக்கழகத்தில் சமர்ப்பித்தல் வேண்டும்.

கற்கைநெறிக்கான கட்டணங்கள் அனைத்தும் செலுத்தப் பட்டிருந்தால் மாத்திரமே பரீட்சைக்கான அனுமதி அட்டை உயர் பட்டப்படிப்புக்கள் பீடத்தால் வழங்கப்படும்.

மேற்குறித்த முதுகலைமாணி கற்கைநெறிகளுக்கான மீள் பரீட்சைகள் மீண்டும் நடத்தப்படமாட்டா என்பதனை கவனத்தில் கொள்ளவும்.

பதிவாளர்
27/09/2010

(சி-1303)




நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியின் பரிசளிப்பு விழாவில் விருந்தினர்களாகக் கலந்து கொண்ட யாழ். வலய உதவிக் கல்விப்பணிப்பாளர் மு.இராசநாயகம், கல்லூரி அதிபர் இ.குணநாதன், லண்டன் வழக்கறிஞர் பொ.சிவசுப்பிரமணியம், சற்குணராணி சிவசுப்பிரமணியம், வைத்தியர் எஸ்.கே.தர்மலிங்கம், இளைப்பாறிய அதிபர் க. தர்மரத்தினம், முன்னாள் பிரதி அதிபர் ஐ.சிவராசா ஆகியோா வரவேற்கப்படுவதை முதலாவது படத்திலும் பாடசாலை நிறுவுநர் முதலியார் அத்தியார் அருணாசலத்தின் உருவச் சிலைக்கு நீர்வை இ.தியாகராசா மலர்மாலை அணிவிப்பதை இரண்டாவது படத்திலும் மாணவிகள் வழங்கிய நடன ஆற்றுகைக் காட்சியொன்றை இறுதிப் படத்திலும் காணலாம்.

## சமுர்த்தி முத்திரை பணக்கொடுப்பனவு

கல்வயல் சமுர்த்தி முத்திரை பயனாளிகளில் ரூபா ஆயிரத்து 500, 900 ஆயிரம் பெறுமதியான முத்திரை பெறுவோருக்கு மேற்படி முத்திரைக்குரிய பணக்கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.

எனவே மேற்படி முத்திரைகளையுடைய பயனாளிகளில் குடும்பத்தலைவன் அல்லது குடும்பத்தலைவி இன்றும் நாளையும் காலை 9 மணி முதல் 1 மணி வரை ஜே/305 கல்வயல் சமுர்த்தி உத்தியோகத்தர் அலுவல கத்திற்கு சமுர்த்தி ,சமுர்த்தி வங்கிப் புத்தகம், தேசிய அடையாள அட்டை ,குடும்ப அட்டை ஆகிய ஆவணங்களுடன் சமுகமளிக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-31)


### தரம் 6 அனுமதி - 2011
### யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்

யா/ நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் தரம்-6இல் 2011ஆம் ஆண்டில் புதிய மாணவர்களை சேர்த்துக் கொள்வதற்கான விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப் படுகின்றன. ஆண், பெண் இருபாலாருக்கும் தமிழ், ஆங்கில மொழி மூல வகுப்புகளுக்கு அனுமதி வழங்கப்படும்.

✷ விண்ணப்பப்படிவங்களை 2010.09.29 முதல் அலுவலக நேரத்தில் பாடசாலையில் பெற்று விண்ணப்பிக்கவும்.

முடிவுத் திகதி 2010.10.15

அதிபர்
யா/நெல்லியடி ம.ம.வி

(சி-1304)


# ஆயுதப் போராட்டம் நிறைவடைந்துள்ளமையால் சமஷ்டி முறையிலானஅதிகாரப் பகிர்வு அவசியமில்லை

## ஐ.தே.க. தெரிவிப்பு

ஆயுத போராட்டம் நிறைவடைந்துள்ள சமஷ்டி முறையிலான அதிகாரப் பகிர்வு அவசியமற்றதென ஐக்கிய தேசியக் கட்சி அறிவித் துள்ளது.

சமஷ்டி முறைமையிலான அதிகாரப் பகிர்வு தொடர்பில் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் ஐக்கிய தேசியக் கட்சி பேச்சுவார்த்தை நடத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

பிராந்தியங்களை மையப்படுத்திய அதிகாரப் பகிர்வு தற்போது அவசியப்படாதென ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது. ஐக்கிய இலங்கைக்குள் பிராந்தியங்களுக்கு சுயாட்சி அதிகாரங்களை வழங்கும் ஓர் சமஷ்டி முறை ஆட்சியை ஏற்படுத்துவது குறித்து தமி ழீழ விடுதலைப் புலிகளும், ஐக்கிய தேசியக் கட்சியும் கடந்த காலங்களில் இணக்கப் பாட்டை எட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஒஸ்லோவில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின் போது சமஷ்டி முறைமைத் தீர்வுத் திட்டம் குறித்து கூடுதல் கவனம் செலுத்தப் பட்டிருந்தது.

வடக்கு,கிழக்கு மக்கள் அன்றாடம் எதிர் நோக்கி வரும் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதே தற்போதைய தேவை என ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதனை விடவும் தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்பட வேண்டியது அவசியமானதெனவும் எவ்வாறெனினும்,13 ஆவது திருத்தச் சட்ட மூலத்தில் திருத்தங்களை கொண்டு வருவதற்கோ அல்லது இரத்து செய்வதற்கோ ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவளிக்காது என அவர் தெரிவித்துள்ளார்.

13 ஆவது திருத்தச் சட்ட மூலம் இலங்கை அரசியல் சாசனத்தின் ஓர் அங்கம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ் மக்களின் இயல்பு வாழ்க்கையை கட்டியெழுப்புவது தொடர்பில் அரசாங்கம் கூடுதல் கவனம் செலுத்த வேண்டுமெனவும் தமிழீழ விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்டுள்ள காரணத்தினால் அரசியல் தீர்வுத் திட்டமொன்றின் அவசியம் கிடையாது என அவர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# தமிழக முகாம்களில் வசிக்கும் இலங்கை அகதிகள் கண்காணிப்பு

தி.மு.க. முகாம்களில் இருந்து கடல் வழியாக அவுஸ்திரேலியாவிற்கு தப்பிச் செல்வதாக எழுந்த புகாரை தொடர்ந்து இலங்கை அகதிகளை கண்காணிக்கும் பணி தீவிரப் படுத்தப்பட்டுள்ளதாக தெரிகிறது.

தமிழகத்தில் உள்ள அகதிகள் முகாமில் ஏராளமான இலங்கை தமிழர்கள் வசிக்கின் றனர். இலங்கையில் நடந்த இறுதிக்கட்டப் போருக்கு பின் இலங்கை தமிழர்கள் அங்கு திரும்பி செல்வார்கள் என எதிர்பார்ப்பு நிலவியது.

எனினும் இலங்கை செல்ல அவர்கள் தயக்கமடைவதாகவும்அவுஸ்திரேலியா போன்ற நாடுகளில் இலங்கை தமிழர்கள் அதிகளவில் வசிப்பதால் அகதிகள் இங்கிருந்து கடல் வழியாகத் தப்பி அங்கு செல்வதாகதகவல்கள் வெளியாகியுள்ளன.

இதையடுத்து முகாம்களில் வசிப்போரை கண்காணித்து அறிக்கை அனுப்ப வருவாய் துறை கியூ பிரிவினருக்கு அரசு உத்தரவிட்டுள்ளதாகவும் முகாமில் இருந்து வெளியில் செல்வோர் மாலையில் திரும்பாவிட்டால் அவரை தொடர்பு கொண்டு விசாரிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிகிறது.(ஸ்ரீ-2)


### மகாஜனன் கவிதைகள்
### நூல் வெளியீட்டு விழா

**இடம்**
யா/மகாஜனக்கல்லூரி, தெல்லிப்பழை

**காலம்**
30.09.2010 வியாழக்கிழமை முற்பகல் 10.00

**தலைவர்**
திருமதி.சிவமலர் அனந்தசயனன் அவர்கள்
(அதிபர்)

**பிரதம விருந்தினர்**
பேராசிரியர், கலாநிதி கி.விசாக ரூபன் அவர்கள்
(தமிழ்த்துறை, கலைப்பீடம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

**வரவேற்புரை:-** திரு.சு.சயந்தன் அவர்கள் (பிரதி அதிபர்)

**வெளியீட்டுரை:-** திரு.ந.விஜயசுந்தரம் அவர்கள்
(பிரதம ஆசிரியர், வலம்புரி)

**முதற்பிரதி வழங்கல்:-**

**வழங்குபவர்:** மயிலங்கூடலூர் பி.நடராசன் அவர்கள்
(முன்னாள் ஆசிரியரும் பழையமாணவரும்)

**பெறுபவர்:** : திரு.இ.ச.பே.நாகரத்தினம் அவர்கள்
(தொழிலதிபர் E.S.P. Nagaratnam & Co)

**மதிப்பீட்டுரை:** ம.ரூபவதனன் அவர்கள்
(விரிவுரையாளர் ஊவா வெல்லஸ்ஸப் பல்கலைக்கழகம்)

**ஏற்புரை:** ம.பா.மகாலிங்கம் அவர்கள்
(பழையமாணவர், ஆசிரியர், ஸ்கந்தவரோதயக்கல்லூரி)

**நன்றியுரை:** திரு.ம.மணிசேகரன் அவர்கள் (உபஅதிபர்)

பிரதி ஒன்றின் விலை : ரூபா 350.00

தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரி,
உலகப் பழைய மாணவர் சங்கப்பதிப்புக்குழு.

(சி-1301)


# அமைச்சரவை எண்ணிக்கை மேலும் அதிகரிக்கப்படவுள்ளது

அமைச்சரவையின் எண்ணிக்கை மேலும் விஸ்தரிக்கப்படவுள்ளது. தற்போது பிரதியமைச்சர் பதவிகளை வகித்து வருவோரும் 18 ஆவது திருத்தச் சட்ட மூலத்திற்கு ஆதரவளித்த நாடாளுமன்ற உறுப்பினர்களும் அமைச்சரவைக்குள் உள்வாங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் நவம்பர் மாதம் அமைச்சரவையில் மாற்றங்கள் ஏற்படுத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.இதில் தற்போது பிரதியமைச்சுப் பதவிகளை வகித்து வரும் சிலர் அமைச்சர்களாக பொறுப்பேற்றுக் கொள்ளவுள்ளதாக அரசாங்கத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கண்டி,பதுளை,மொனராகலை ,அனுராதபுரம் மற்றும் காலி மாவட்டங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இந்தப் பதவிகள் வழங்கப்படவுள்ளன.

இதேவேளை அண்மையில் ஆளும் கட்சியில் இணைந்து கொண்ட ஐக்கிய தேசியக்கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களும் சிறுபான்மைக் கட்சிகளைச் சேர்ந்த சில ஐக்கிய தேசிய முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் அமைச்சுப் பொறுப்புக்கள் வழங்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

குறிப்பாக முஸ்லிம் காங்கிரஸ் ,தொழிலாளர் ஒன்றியம் மற்றும் பிரஜைகள்முன்னணி போன்ற கட்சிகளைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அமைச்சு அல்லது பிரதியமைச்சுப் பொறுப்புக்கள் வழங்கப்படலாம் என சுட்டிக்காட்டப்படுகிறது.

அமைச்சர்களின் எண்ணிக்கையைக் குறைத்து வீண் செலவுகளை வரையறுக்கப் போவதாக கடந்த ஜனாதிபதி மற்றும் பொதுத் தேர்தல்களின் போது ஆளும் கட்சி உறுதிமொழியளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

# ஆட்சியைக் கைப்பற்றுவதற்கு முன் கட்சியை கட்டிக்காக்க ரணில் முயற்சிக்க வேண்டும்

## அமைச்சர் ஹெகலிய அறிவுரை

(கொழும்பு)

அரசாங்கத்தின் பதவிக்காலம் முடிவடைவதற்குள் பாராளுமன்றத்தை கலைத்து ஐக்கிய தேசியக் கட்சியை ஆட்சிப்பீடம் ஏற்றுவ



தற்கு முன்னர் தமது சொந்தக் கட்சியை ஒருங்கிணைத்து உறுப்பினர்களை தம்முடன் வைத்துக்கொள்ள எதிர்க்கட்சி தலைவர் முயற்சிக்க வேண்டும் என்று தகவல் மற்றும் ஊடகத்துறை அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

நாடு ஒன்றின் எதிர்க்கட்சி தலைவர் ஆட்சியை கைப்பற்ற வேண்டும் என்று எண்ணுவதும் முயற்சிப்பதும் இயல்பான விடயமாகும். ஆனால் அதற்கு முன்னர் தனது கட்சியை கட்டிக்காக்க வேண்டியது எதிர்க்கட்சி தலைவரின் தலையாய கடமையாகும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

கூடிய விரைவில் பாராளுமன்றத்தை கலைத்து ஐக்கிய தேசிய கட்சியை ஆட்சிப்பீடமேற்றுவதுடன் சிறைப்படுத்தப்பட்டுள்ள முன்னாள் இராணுவத்தளபதி சரத்பொன்சேகாவை விடுதலை செய்வோம் என்று ஐக்கிய தேசிய கட்சியின் தலைவரும் எதிர்க்கட்சி தலைவருமான ரணில் விக்கிரமசிங்க கடந்த 26ஆம் திகதி களனியில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் தெரிவித்துள்ளமை குறித்து கருத்துத் தெரிவிக்கையிலேயே அமைச்சர் ரம்புக்வெல மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இது குறித்து அமைச்சர் மேலும் தெரிவிக்கையில்,

பாராளுமன்றத்தின் பதவிக்காலம் முடிவடைவதற்கு முன்னர் அதனை கலைத்து ஐக்கிய தேசிய கட்சியை ஆட்சிப்பீடமேற்றப் போவதாக ஐக்கிய தேசிய கட்சியின் தலைவரும் எதிர்க்கட்சி தலைவருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் இவ்வாறு கூறுவதற்கு முன்னர் ஒரு விடயத்தை புரிந்து கொள்ளவேண்டும் அதாவது பாராளுமன்றத்தின் பதவிக்காலம் முடிவடைவதற்குள் அதனை கலைக்க முயற்சிப்பதற்கு முன்னர் தனது கட்சியை சீர்ப்படுத்த அவர் முயற்சிக்க வேண்டும்.

ஐக்கிய தேசியக்கட்சியை மறுசீரமைத்து ஆதரவாளர்களை ஒருங்கிணைத்து கட்சியின் உறுப்பினர்களை தன்னுடன் வைத்தக் கொள்ள எதிர்க்கட்சி தலைவர் முதலில் முயற்சிக்கவேண்டும்.

அதனை விடுத்து விரைவில் ஐக்கிய தேசிய கட்சியை ஆட்சி பீடத்தில் ஏற்றுவேன் என்று கூறினால் எப்படி முதலில் தமது பக்கம் உள்ளவிடயங்களை சரிசெய்து கொள்ள வேண்டும் என்பதுடன் சீர்ப்படுத்தவேண்டும்.

மேலும் பாரிய பலமான நிலையில் இருக்கின்ற ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தை கலைத்து ஐக்கிய தேசிய கட் சியை ஆட்சிக்கு கொண்டுவரப் போவதாக எதிர்க்கட்சி தலைவர் கூறியிருப்பது அவரின் மற்றுமொரு நகைச்சுவை என்றே கூற வேண் டும் மக்களுக்கு அதனை பற்றி நன்றாகவே தெரியும்.

மற்றுமொரு விடயமாக சரத்பொன்சேகாவை விடுவிடுக்கப் போவதாகவும் எதிர்க்கட்சி தலைவர் குறிப்பிட்டுள்ளார். பொன்சேகா விடயத்தில் ஐக்கிய தேசிய கட்சி சிறப்பாக செயற்படுவதில்லை என்று மக்கள் விடுதலை முன்னணி அடிக்கடி குற்றம் சுமத்தி வந்தது. அதனை சமாளிக்கும் வகையிலேயே தற்போது பொன்சேகா குறித்து எதிர்க்கட்சி தலைவர் இவ்வாறு கூறியுள்ளார். என்று கருதுகின்றோம். (ஸ்ரீ-2)

## முதியோர், சிறுவர் கௌரவிப்பு

(யாழ்ப்பாணம்)

ஜே/101 குடும்பநல உத்தியோகத்தர் பிரிவின் முதியோர், சிறுவர் கௌரவிப்பு நிகழ்வு நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு நீராவியடி சைவ பரிபாலன சபையில் யாழ்.மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி எம்.மரியதாசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா கலந்து சிறப்பிப்பதுடன் சிறப்பு விருந்தினர்களாக யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன், யாழ். மாநகர சபை ஆணையாளர் மு.செ. சரவணபவ, யாழ்.மாவட்ட தாய் சேய் நல வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி திருமதி எஸ்.திருமகள் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

மேலும் முதியோர், சிறுவர்கள் கௌரவிக்கப்படவுள்ளதுடன் கலைநிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (ஸ்ரீ-4)




## பொன்னாலை மேற்கில் மீள்குடியேற்றம் எப்போது?

கௌரவ கே.என்.டக்ளஸ் தேவானந்தா,
அமைச்சர்,
பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சு.

ஐயா;

யாழ்.குடாநாடு இராணுவத்தினரின் பூரண கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டு ஏறக்குறைய 13 வருடங்கள் கடந்துள்ள நிலையில், நாட்டில் இடம்பெற்ற கொடிய யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டு ஒன்றரை வருடங்கள் கடந்துள்ள போதிலும், எமது பொன்னாலை மேற்குப் பிரதேசத்திலிருந்து இடம்பெயர்ந்த மக்கள் மீளக் குடியேற்றப்படாமை தொடர்பான விடயத்தை மிக வேதனையுடன் தங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகின்றோம்.

இதுவரை காலமும் இங்கு மக்கள் மீளக்குடியேற்றப்படாமைக்கான காரணம்; இப்பகுதி கடற்படையினரால் உயர்பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப் படுத்தப்பட்டிருப்பதே ஆகும்.

பொன்னாலைப் பிரதேசத்தின் ஒரு பகுதியில் மக்கள் குடியேறி வாழ்வதற்கு அனுமதிக்கப்பட்டிருக்கின்ற போதிலும், இதன் மேற்குப் பகுதியானது கடந்த 1996 ஆம் ஆண்டு தொடக்கம் கடற்படையினரால் உயர் பாதுகாப்பு வலயமாகவே பேணப்பட்டு வருகின்றது.

இதனால், இங்கிருந்து வெளியேறியுள்ள ஏறக்குறைய 400 குடும்பங்களைச் சேர்ந்த 2300 வரையான பொதுமக்கள் வெளிப் பிரதேசங்களில், மிகவும் கஷ்டங்களை அனுபவித்த நிலையில் வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் மூளாய் - ஒடுகம்புலம், சுழிபுரம் - பாணாவெட்டி, மூளாய், முன்கோடை மற்றும் பொன்னாலை தெற்குப் போன்ற இடங்களில் வாழ்ந்து வருகின்றனர்.

எங்களை மீளக்குடியேற்றுவதற்கு நடவடிக்கைகளை எடுக்குமாறு கோரி, கடந்த வருடங்களில் யாழ்.அரச அதிபர்களாகப் பதவி வகித்தவர்கள், அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் எனப் பல தரப்பினரிடமும் கோரிக்கைகளை முன் வைத்திருந்தோம். இறுதியாக, கடந்த 2002ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில் சங்கானைப் பிரதேச செயலகத்திற்கு முன்பாக அமைதிவழியில் கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்றையும் நடத்தியிருந்தோம்.

"எங்களைப் படிப்படியாக மீள்குடியேற்ற நடவடிக்கை எடுக்கப்படும்" என்று எழுத்து மூலம் பதில் வழங்கப்பட்ட போதிலும் இன்றுவரை எந்தவிதமான நடவடிக்கையும் முன்னெடுக்கப்படவில்லை.

யாழ்.குடாநாட்டில் தற்போது பல இடங்களிலும் மீள் குடியேற்றங்கள் நடைபெற்று வருகின்றன. குறிப்பாக, பாரிய இராணுவ முகாம்கள் அமைந்திருந்த பிரதேசங்களிலும் மீள் குடியேற்றங்கள் நடைபெறுகின்றன. ஆனால், பாரியளவில் யுத்தம் நடைபெறாத தற்போது கடற்படையினருக்கு எதுவித முக்கியத்துவமுமற்ற பிரதேசமாகிய பொன்னாலையில் மீள் குடியேற்றம் இடம்பெறவில்லை.

எனவே, குடாநாட்டின் பல பிரதேசங்களிலும் தாங்களாகவே முன்னின்று மீள் குடியேற்றங்களைச் செயற்படுத்திவரும் தங்களிடம், எமது பகுதியிலும் மீள் குடியேற்றத்திற்கு நடவடிக்கை எடுக்குமாறு மிகவும் விநயமாகக் கேட்டுக் கொள்கின்றோம்.

இங்ஙனம்,
மக்கள் சார்பில்,
என்.பொன்ராசா

## உயர் கல்வியைத் தொடரும் மாணவர்களுக்கு மடிக் கணனிகளை வழங்குவது குறித்து கவனம்

## உயர் கல்வியமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

உயர்கல்வியைத் தொடரும் மாணவர்களுக்கு அடுத்த ஆண்டு மடிக் கணனிகள் வழங்குவது குறித்து கவனம் செலுத்தப்பட்டு வருவதாக உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழகங்களுக்கு தெரிவாகும் சகல மாணவர்களுக்கும் ஆங்கில மொழிக் கல்வியை புகட்டுவற்கு விசேட செயற்றிட்டமொன்று முன்னெடுக்கப்படவுள்ளதா கத் தெரிவிக்கப்படுகிறது.

ஒவ்வொரு வருடமும் இணையத்தின் ஊடாக நான்கு மாத ஆங்கில பயிற்சி நெறி நடத்தப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

மாணவர்களிடையே ஆங்கில மொழி அறிவினை விருத்தி செய்வதற்கு இந்தத் திட்டம் உதவியாக அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது. (ஸ்ரீ-2)




சுன்னாகம் மக்கள் வங்கியினால் யா/மல்வத்தை றோ.க.த.க.பாடசாலையில் சிசு உதான (மாணவர் மலர்ச்சி) வங்கி அலகு கடந்த 24ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டது: இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட உதவிப்பிராந்திய முகாமையாளர் என்.நாகேஸ்வரன் மாணவி ஒருவரிடம் வைப்பினை ஏற்பதனையும் அருகில் பிரதம விருந்தினராக கலந்துகொண்ட உடுவில் கோட்டக்கல்விப் பணிப்பாளர் எஸ். குபேரநாதன், கிளை முகாமையாளர் சு.இராசமனோகரன், மக்கள் வங்கி சிசு உதான பொறுப்பாளர் பி.உதயணன் ஆகியோர் அமர்ந்திருப்பதனையும் படத்தில் காணலாம்.

# இலங்கையின் சுற்றுலாத்துறை முதலாவது வருமானமீட்டும் துறையாக மாற்றப்படும்

## பிரதி அமைச்சர் லக்ஸ்மன் யாப்பா தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையின் சுற்றுலாத்துறையை முதலாவது வருமானம் ஈட்டும் துறையாக மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப் போவதாக பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் லக்ஸ்மன் யாப்பா அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

தற்போது சுற்றுலாத்துறை 5ஆவது இடத்தில் இருப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

மாத்தறை கிரிலகெல பிரதேசத்தை சுற்றுலா வலயமாக பிரகடனப்படுத்தும் நிகழ் வில் நேற்று முன்தினம் பங்கேற்று உரை யாற்றும் போதே பிரதியமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்தத் துறையை அபிவிருத்தி அடையச் செய்வதற்கு பிரதேச சபைகளை ஒன்றிணைக்கும் செயற்றிட்டம் ஒன்றை முன்னெடுக்கப்போவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

# கிழக்கு மாகாணத்தில் சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் அதிகரிப்பு

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தில் சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக கிழக்கு மாகாண மற்றும் சிறுவர் அபிவிருத்தி அமைச்சர் எம்.எஸ்.சுபைர் தெரிவித்துள்ளார்.

அதிகரித்துச் செல்லும் சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்களை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் நாட்டில் அமைதி நிலவும் ஓர் காலப்பகுதியில் துரதிர்ஷ்டவசமாக சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் உயர்வடைந்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதற்கு அமைய அதிகளவிலான சிறுவர் பாலியல் துஷ்பிரயோகச் சம்பவங்கள் பாடசாலைகளில் இடம்பெற்று வருவதாக அவர் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு சிறுவர் துஷ்பிரயோகச் சம்பவங்களில் ஈடுபடுவோரை சில உயர் அதிகாரிகள் பாதுகாத்து வருவதாகவும் இந்தச் சம்பவம் குறித்து கிழக்கு மாகாண ஆளுநரும்,முதலமைச்சரும் உன்னிப்பாக அவதானித்து வருவதாக அவர் தெரிவித்துள்ளார்.

குற்றச்செயல்களுடன் தொடர்புடைய நபர்கள் விரைவில் நீதியின் முன் நிறுத்தப் படுவார் என அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

கிழக்கு மாகாண சிறுவர்களை பாதுகாக்கும் நோக்கில் மனித உரிமை அமைப்புக்கள் ,பொலிஸ் , தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை மற்றும் மத பீடங்கள் ஆகியவற்றை பிரதிநிதித்துவப்படுத்தும் குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# வவுனியாவில் புனர்வாழ்வு அதிகார சபையின் பிராந்திய காரியாலயம்

(கொழும்பு)


புனர்வாழ்வு அதிகார சபையின் பிராந்திய காரியாலயம் ஒன்று இன்று வவுனியாவில் திறந்து வைக்கப்படவுள்ளது.

வடக்கில் மனித வாழ்க்கையை மேம்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்டுவரும் நடவடிக்கைகளைத் துரிதப்படுத்தும் நோக்கிலேயே இந்த காரியாலயம் ஸ்தாபிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

விசேடமாக வீடுகளை புனரமைத்தல், மக் களின் பொருளாதார நிலையை சீரமைத்தல் போன்றவையே இதன் பிரதான நோக்கமாக அமைந்துள்ளன.

இதனடிப்படையில் புதிய பிராந்திய காரியாலயத்தின் ஊடாக வடக்கு மக்களுக்கான வீடமைப்பு மற்றும் சுயதொழிலுக்கான கடன் திட்டங்களை ஆராயும் நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படவுள்ளன.

இந்த நிலையில் ஒன்றிணைந்த நிவாரண திட்டத்தின் கீழ் ஒரு குடும்பத்திற்காக வாழ்வாதாரமாக 25 ஆயிரம் ரூபாவும் வீடமைப்பு நிதியாக 75 ஆயிரம் ரூபாவும் வழங்கப்பட்டுள்ளதாக புனர்வாழ்வு அதிகார சபை தெரிவித்துள்ளது. (ஸ்ரீ-2)



செலிங்கோ ஆயுள் காப்புறுதி நிறுவனத்தின் இழப்பீட்டுக் கொடுப்பனவு வழங்கும் நிகழ்வில் வங்கியின் வாடிக்கையாளரான பொலிகண்டியைச் சேர்ந்த பாலசிங்கம் பிரபாகரன் அகால மரணமடைந்தமையால் அவருக்கான இழப்பீட்டுக் கொடுப்பனவான 4 இலட்சத்து 3 ஆயிரத்து 300 ரூபா பெறுமதியான காசோலையை அவரது மனைவி நகுலமாலா பிரபாகரனிடம் யாழ்.மாவட்ட விற்பனை அபிவிருத்தி உதவி முகாமையாளர் நிறோஜன் வழங்குவதையும் அருகில் மகன் அபிஸன், தாய் பாலசிங்கம் பவளம், நெல்லியடி கிளை முகாமையாளர் பாஸ்கரன், சிரேஸ்ட விற்பனை அதிகாரி இராஜகோபால், விற்பனை அதிகாரி சோபனா, காப்புறுதி அலோசகர் உஸா ஆகியோர் நிற்பதையும் படத்தில் காணலாம்.

# 29.09.2010

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

## நிகழ்வுகள்

- கிமு 480 - தெமிஸ்டோகில்ஸ் தலைமையிலான கிரேக்கக் கடற்படை பேர்சியப் படையை சலாமிஸ் என்ற இடத்தில் தோற்கடித்தது.
- 1227 - புனித ரோமப் பேரரசன் இரண்டாம் பிரெடெரிக் சிலுவைப் போரில் பங்குபற்றாமல் போனதை அடுத்து பாப்பரசர் ஒன்பதாம் கிரகரி அவனை மதவிலக்கம் செய்தார்.
- 1567 - பிரான்சில் இரண்டாம் சமயப் போர் ஆரம்பமானது.
- 1833 - மூன்று வயதுள்ள இரண்டாம் இசபெல்லா ஸ்பெயின் அரசியாக முடிசூடினாள்.
- 1848 - ஹங்கேரியப் படையினர் குரொவேசியர்களை பாகொஸ்ட் என்ற இடத்தில் இடம்பெற்ற ஹங்கேரிப் புரட்சிப் போரில் தோற்கடித்தனர்.
- 1850 - இங்கிலாந்திலும் வேல்சிலும் ரோமன் கத்தோலிக்க உயர்சபையை பாப்பரசர் ஒன்பதாம் பயஸ் மீண்டும் அமைத்தார்.
- 1885 - உலகின் முதலாவது மின்சார திராம் வண்டி இங்கிலாந்தில் பிளாக்பூல் நகரில் சேவையை ஆரம்பித்தது.
- 1911 - இத்தாலி ஒட்டோமான் பேராட்சிக்கெதிராகப் போர் தொடுத்தது.
- 1916 - ஜோன் ரொக்பெல்லர் உலகின் முதலாவது கோடீஸ்வரர் ஆனார்.
- 1918 - முதலாம் உலகப் போர்: பல்கேரியா கூட்டுப் படைகளுடன் அமைதி ஒப்பந்தத்தை ஏற்படுத்தியது.
- 1938 - செக்கோசிலவாக்கியாவின் சுடெட்டென்லாந்துப் பகுதியை ஆளும் உரிமையை ஜெர்மனிக்கு வழங்குவதற்கான உடன்படிக்கையில் பிரித்தானியா, பிரான்ஸ், ஜெர்மனி மற்றும் இத்தாலி ஆகியன கைச்சாத்திட்டன.
- 1941 - உக்ரேனின் கீவ் நகரில் குறைந்தது 33ஆயிரத்து 771 யூதர்கள் நாசி ஜெர்மனியரினால் கொல்லப்பட்டனர்.
- 1962 - கனடாவின் முதலாவது செய்மதி அலூட் 1 ஏவப்பட்டது.
- 1971 - அரபுக் கூட்டமைப்பில் ஓமான் இணைந்து கொண்டது.
- 1972 - ஜப்பான் மக்கள் சீனக் குடியரசுடனான தூதரக உறவை மீள அமைத்து, சீனக் குடியரசுடனான உறவை முறித்துக் கொண்டது.
- 1991 - ஹெயிட்டியில் இராணுவப் புரட்சி இடம்பெற்றது.
- 2003 - சூறாவளி ஜுவான் கனடாவின் ஹாலிபாக்ஸ் துறைமுகத்தைத் தாக்கிப் பேரழிவை விளைவித்தது.

## பிறப்புகள்

- 1901 - என்ரிக்கோ பெர்மி, இத்தாலிய இயற்பியலாளர், நோபல் பரிசு பெற்றவர் (இ. 1954)
- 1936 - சில்வியோ பெர்லுஸ்கோனி, இத்தாலியப் பிரதமர்
- 1951 - மிசெல் பாச்செலெட், சிலியின் ஜனாதிபதி
- 1975 - ஸ்டுவட் கிளார்க், அவுஸ்திரேலிய துடுப்பாட்ட வீரர்
- 1988 - கெவின் டுரான்ட், அமெரிக்க கூடைப்பந்து ஆட்டக்காரர்

## இறப்புகள்

- 1969 - சி.டபிள்யூ.டபிள்யூ.கன்னங்கரா, இலங்கையில் இலவசக்கல்வித் திட்டத்தை அறிமுகப்படுத்தியவர் (பி. 1884)

**1993 - மகாராஷ்டிரா மாநிலத்தில் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் 10ஆயிரம் பேர் கொல்லப்பட்டனர்.**



# ஈழத்தவர் வரலாறு

50

## 8.நல்லூர்க் கந்தசுவாமி ஆலயம்

### (கி.மு 5 ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 1621 ஆம் ஆண்டு வரை)

எனவே கி.பி.1248 ஆம் ஆண்டு, புவனேகவாகு எனும் அமைச்சரால் முதன் முதல் கட்டப்பட்ட நல்லூர்க் கந்தசுவாமி கோயில் கி.பி.1450 ஆம் ஆண்டு, சப்புமல்குமரயாவின் படையெடுப்பால் தகர்த்தழிக்கப்பட்டது. தான் புரிந்த பாவத்திற்குப் பரிகாரம் தேடுவான் போன்று, யாழ்ப்பாண நகரியை மீண்டும் புதுப்பித்த சப்புமல்குமரயா, அழிந்துபோன நல்லூர்க் கந்தசுவாமி கோயிலையையும் மீண்டும் ஆக்கினான்.

ஆரியச் சக்கரவர்த்தியோடு செண்பகப் பெருமாள் கடும்போர் நிகழ்த்திய நாட்களில், அரண்களும் இராசதானியும் பெரிதும் அழிவுற, அவற்றைச் செண்பகப்பெருமாள் திருத்தி அமைத்தானென்றே கொள்ள வேண்டும். சப்புமல்குமாரன் யாழ்ப்பாணப் பட்டினத்திற் கோட்டைகளையும் காவலரண்களையும் அமைத்தான் என்று ராஜவலிய சொல்வனவும் இக்கருத்திற்கு ஆதாரமாயுள்ளன.


நல்லூர் கந்த சுவாமி கோயிலின் பழைய தோற்றம்

சப்புமல்குமரயாவின் தந்தை மலையாள தேசத்திலிருந்து வந்த ஒரு பணிக்கனாவான். 'ஆறாம் பராக்கிரமபாகு அவனை உபசரித்து, அவன் தேகவலிமையிலும் வாட்போர்த்திறத்திலும் ஈடுபட்டவனாய்த் தன் குலத்தினளாகிய ஒரு கன்னிகையை அவனுக்கு மணம் முடிப்பித்தான். இவர்களுக்குப் பிறந்தவனே சப்புமல்குமரயா ஆவான். 'செண்பகப்பெருமாள் தமிழ்க்குருதி தன் நாளங்களில் ஓடக் கொண்டவனாதலாலும், தமிழுற்பத்தியாளனேயாகிய அளகேஸ்வரன் காலந்தொட்டு ஜயவர்த்தன கோட்டையிலேயும் வழிபாடு பயின்றுவந்தமையாலும், கோகில சந்தேசமுடையார் அவனைப் புத்த மதத் தாபகரெனப் புகழ்ந்தோதியவிடத்தும் தமிழ்ப் பிரஜைகட்சிதமாய்த் தமிழ்த் தெய்வ வழிபாடுகளையே யாழ்ப்பாணத்தில் வளர்த் திருப்பான் என்பதிற் சிறிதும் சந்தேகமன்று.

**இரண்டாவது கந்தசுவாமி கோயில்**

கி.பி.1450 ஆம் ஆண்டிலிருந்து 1467 ஆம் ஆண்டு வரை யாழ்ப்பாண இராச்சியத்தை ஆண்ட சப்புமல்குமரயா என்ற சிறிசங்கபோதி புவனேகவாகு, குருக்கள் வளவு என்றவிடத்திலிருந்து அழிக்கப்பட்ட நல்லூர்க் கந்தசுவாமி கோயிலை மீண்டும் புதிதாகக் கட்டுவித்தான். படையெடுப்பின் போது அழிந்து சிதைந்து போன முதலாவது தேவாலயம் அமைந்திருந்த விடத்தில் அக்கோயிலை அமைக்காது புதியதொரு இடத்தைத் தேர்ந்தெடுத்து அமைப்பித்தான். அரண்மனை, அரசமாளிகைகள் என்பன அமைந்திருந்த பண்டார வளவு, சங்கிலித்தோப்பு (பின்னர் வந்த பெயர்) என்பவற்றிற்கு அருகில் இக்கோயிலுக்கான இடம் தேர்ந்தெடுக்கப்பட்டது. அவ்விடம் முத்திரைச்சந்தியில் இன்று கிறிஸ்தவ தேவாலயம் அமைந்துள்ள இடமாகும்.

அவ்விடத்தில் நல்லூர்க் கந்த சுவாமி கோயில் இரண்டாவது தடவையாக அமைக்கப்பட்டது.

இக்கோயில் ஆகம விதிகளுக்கு இணங்க அமைக்கப்பட்டது என்பதில் ஐயமில்லை. இக்கோயில் விதானங்கள் செப்புத் தகடுக ளில் வரையப்பட்டிருந்தன. சிலாவிக்கிரங் கள் இக்கோயிலில் பிரதிட்டை செய்யப்பட்டிருந்தன. இக்கோயில் மிகப்பெரியதாக தென்னிந்தியக் கோயில்களை ஒத்ததாக இருந்திருக்க வேண்டும். 'யாழ்ப்பாணத்திலேயே பெரிய கோயிலாக இதுவே இருந்தது.' என்பதை, குவெறோஸ் சுவாமிகளின் குறிப்பிலி ருந்து அறிந்துகொள்ள முடிகின்றது. இக் கோயிலைச் சுற்றி நெடு மதில்கள் அமைக் கப்பட்டிருந்தன. இன்றும் இந்தக் கோயில் மதிலின் ஒரு பகுதியை சங்கிலித்தோப்பில் யமுனாரி என்ற பகர வடிவ ஏரிக்குக் கிழக்குப் புறத்தில் காண முடிகின்றது. நான்கு அடிகள் அகலமான செங்கற்சுவரின் அத்திவாரத்தை யமுனாரிக்குச் செல்கின்ற ஒழுங்கை முகப்பிலும் காணலாம்.


மந்திரிமனை

நல்லூர்க் கந்தசுவாமி கோயில், உயர்ந்த மதில்களுள் அமைந்திருந்தமையால் தான், பின்னர் யாழ்ப்பாணத்தின் மீது படையெடுத்த பிலிப் ஒலிவேரா என்ற போர்த்துக்கேயத் தளபதி, ஒரு கட்டத்தில், இக்கோயிலினுள் தனது வீரர்களுடன் புகுந்து, இதனை ஒரு கோட்டையாகப் பயன்படுத்தி இருக்கிறான்.

நல்லூரில் மீண்டும் முத்திரைச் சந்தி கிறிஸ்தவ தேவாலயம் இன்று அமைந்துள்ள கோட்டத்தில் கந்தனாலயம் கோபுர கலசங்களோடு அமைந்தது. இக்கோயிலிருந்த சிலா விக்கிரகங்கள் சிலவற்றை யாழ்ப்பாணத் தொல்பொருட் காட்சிச்சாலையில் இன்றும் காணலாம். இப்பெரிய ஆலயத்தை அமைத்தமையால், இவனது பெயர் இன்றும் கோயில் கட்டடத்தில் 'சிறீசங்கபோதி புவனேகவாகு' வென நினைவு கூரப்படுகின்றது.

**கலாநிதி க.குணராசா**
செங்கை ஆழியான்

(தொடரும்)

## கம்பஹாவில் இண்டு பஸ்கள் நேருக்குநேர் மோதி விபத்து

### 100 இற்கும் மேற்பட்டோர் காயம்

(கொழும்பு)

கொழும்பிலிருந்து குருணாகலை நோக்கி பயணித்துக் கொண்டிருந்த தனியார் பேருந்து வண்டியொன்றும் குருணாகலிலிருந்து கொழும்பு வந்து கொண்டிருந்த தனியார் பேருந்து வண்டியொன்றும் கம்பஹாவில் நேருக்கு நேர் மோதியதில் 100 இற்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்து மருந்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருப்பதாக மருத்துவமனை வட்டாரங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

நேற்று முன்தினம் மாலை 4 மணியளவில் மினிவாங்கொட -கொழும்பு பிரதான வீதியில் கம்பஹா யாகொடமுள்ள மிரிஸ்வத்த பகுதியில் இவ்விபத்து நிகழ்ந்துள்ளது.

மேற்படி விபத்தில் காயமடைந்தவர்களுள் 30 பேர் கம்பஹா, ராகம மற்றும் கொழும்பு ஆகிய மருத்துவமனைகளுக்கு மாற்றப்பட்டுள்ளதாகவும் காயமடைந்தவர்களுள் அதிகம் பெண்கள் அடங்குவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரு பேருந்து வண்டிகளினதும் சாரதிகள் பலத்த காயங்களுக்குள்ளான நிலையில் கம்பஹா மற்றும் கொழும்பு வைத்தியசாலைகளுக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

இவ்விபத்து தொடர்பாக மினிவாங்கொட பொலிஸார் மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (ஸ்ரீ-2)

## பூநகரி பிரதம தபால் நிலையத்திற்கு நிரந்தர கட்டடம் அமைக்க நடவடிக்கை

(பூநகரி)

பூநகரி பிரதம தபால் நிலையத்துக்கான நிரந்தர கட்டடத்தை அமைப்பதற்கான நிதி ஒதுக்கப்பட்டு கடந்த 27 ஆம் திகதி அடிக்கல் நாட்டும் நிகழ்வு பூநகரி வாடியடியில் இடம் பெற்றது.

தபால் திணைக்கள மாவட்ட பிராந்திய அத்தியட்சகர் கே. புஸ்பநாதன் அடிக்கல்லை நாட்டி வைத்து வேலையை ஆரம்பித்து வைத்தார்.

இதுவரை காலமும் பூநகரி பிரதம தபால் நிலையத்துக்கென நிரந்தர கட்டடம் இல்லாதிருந்ததும் தனியார் கட்டடங்களில் இயங்கி வந்ததும் குறிப்பிடத்தக்கது.

இதேநேரம் வடக்கு அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் முற்றாக சேதமடைந்த பூநகரி உதவி அரசாங்க அதிபர் பணிமனை ,பூநகரி பிரதேச சபை , பூநகரி பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் ஆகியவற்றுக்கான மாடிக் கட்டட வேலைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-84)

## அதிபர் பதவி வெற்றிடம் நிரப்புதல்

வலிகாமம் கல்வி வலயத்திற்குட்பட்ட யா/ ஆனைக்கோட்டை அ.மி.த.க. பாடசாலைக்கு அதிபர் பதவி வெற்றிடமாகின்றது. இலங்கை அதிபர் சேவை வகுப்பு 2-II இலங்கை அதிபர் சேவை வகுப்பு 3 ஐச் சேர்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

மேற்படி பதவிக்கு வலிகாமம் கல்வி வலயத்தைச் சேர்ந்தவர்களே விண்ணப்பிக்கலாம்.மாதிரி விண்ணப்பப்படிவத்தை வலயக் கல்வி அலுவலகத்தில் பார்வையிட்டு அதற்கமைய விண்ணப்பிக்க விரும்புவோர் தங்கள் விண்ணப்பங்களை எதிர்வரும் 8 ஆம் திகதிக்கு முன்னர் உரிய முறைப்படி வலயக் கல்வி அலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு வலிகாமம் வலய பிரதிக்கல்விப்பணிப்பாளர் (நிர்வாகம்) சு.சுந்தரசிவம் கேட்டுக் கொள்கின்றார். (ஸ்ரீ)




வாழ்வகத்தின் நிறுவுனர் தின நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்துவரப்படுவதையும் பேராசிரியர் டி.பி.எம். வீரக்கொடி, வாழ்வகத் தலைவர் ஆ.ரவீந்திரன் ஆகியோர் உரையாற்றுவதையும் அருகில் யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் ,தொழிலதிபர் இ.எஸ்.பி. நாகரட்ணம் உள்ளிட்ட விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் வாழ்வக அன்னை செல்வி அன்னலட்சுமி சின்னத்தம்பியின் சமாதிக்கு யாழ். அரச அதிபர் மலர் அஞ்சலி செலுத்துவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:-சுன்னாகம் செய்தியாளர்)

# யுத்தத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நட்டஈடு வழங்கப்படவுள்ளது

(கொழும்பு)

யுத்தம் காரணமாக பல்வேறு வழிகளில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நட்டஈடு வழங்கப் படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட சுமார் 250 இடம்பெயர் மக்களுக்கு 25 மில்லியன் ரூபா வழங்கப்படவுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

குறிப்பாக யுத்தம் காரணமாக சொத்துக் களை இழந்தவர்களுக்கு இந்த நட்ட ஈட்டுத் தொகை வழங்கப்படவுள்ளதாக புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் அமைச்சு அறி வித்துள்ளது.

பாதிக்கப்பட்டவர்கள் கிராம சேவகர் மற் றும் மாவட்டச் செயலாளரின் ஊடாக விண்ண பிக்க வேண்டுமென புனர்வாழ்வு அதிகார சபையின் தலைவர் ஈ.ஏ.சமரசிங்க தெரிவித் துள்ளார்.

மாவட்டச் செயலாளரின் அங்கீகாரம் பெற் றுக்கொள்ளப்பட்டதன் பின்னர் நட்டஈடு வழங்கப்படும் என அவர் குறிப்பிட்டுள் ளார்.

இழப்புக்களுக்கு ஏற்ற வகையில் ஒரு இலட்சம், ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபா என நட்டஈட்டுத்தொகை வழங்கப்படவுள் ளது.

இதில் பெரும் எண்ணிக்கையிலான விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றுள்ளதா கவும் இவற்றில் தகுதியானவர்களுக்கு நட்டஈடு வழங்கப்படும் எனவும் அறிவிக்கப் பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# நாகதேவதையின் அவதாரமென வழிபடப்படும் குழந்தை தொடர்பில் விசாரணை ஆரம்பம்

(கொழும்பு)

சிலாபம் மாரவில பிரதேசத்தில் நாக தேவ தையின் அவதாரம் என வழிபடப்பட்டு வரும் குழந்தை ஒன்று தொடர்பான விசாரணை கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

தமது பிள்ளைக்கு நாகதேவதையின் அருள் கிட்டியுள்ளதாகவும் குழந்தையை வழிபடுவோருக்கு அருள் கிட்டும் எனவும் குழந்தையின் தந்தை பிரசாரம் செய்து வரு வதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த குழந்தை தொடர்பில் சிறுவர் பாது காப்பு அதிகாரசபை அதிகாரிகள் விசார ணைகளை ஆரம்பித்துள்ளனர்.

குறித்த குழந்தையை பாடசாலைக்கு அனுப்பாது பூஜை வழிபாடுகளில் ஈடுபடுத் தப்பட்டு வருவதாகவும் இதற்கு எதிராக நட வடிக்கை எடுக்கப்படவுள்ளதாகவும் சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் தலைவர் சட்டத் தரணி அனோமா திஸா நாயக்க தெரிவித் துள்ளார்.

குறித்த குழந்தையின் தந்தை வீட்டுக்கு எதிரில் நாககோயில் ஒன்றையும் அமைந் துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நாகதேவதையாக வர்ணிக்கப்படும் குறித்த குழந்தை தற்போது வைத்திய பரி சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் குழந்தை பக்தர்களுக்கு அருள் வாக்கு அளித்து வருவதாகவும் பிரதேச மக்கள் இந்தக் குழந்தையிடம் அருள்வாக் குப் பெற்றுக்கொள்ள அணி திரண்டு செல் வதாகவும் குறிப்பிடப்படுகிறது. (ஸ்ரீ-2)

# இலங்கையர் மூவருக்கு மலேசியாவில் மூன்று வருட கடூழிய சிறைத்தண்டனை

(கொழும்பு)

சிறுவன் ஒருவரைக் கடந்த வருடம் கடத்தினர் என்கிற குற்றச்சாட்டின் பேரில் மலேசியாவில் அந்நாட்டவர் ஒருவருக்கும் இலங்கையர் மூவருக்கும் தலா மூன்றாண்டு கடூழியச் சிறைச் தண்டனை விதிக்கப்பட்டுள் ளது.

இல்ங்கையின் திருகோணமலையைச் சேர்ந்த இச் சிறுவனை கடந்த வருடம் ஒக் டோபர் மாதம் 26 ஆம் திகதி காலை 8.50 மணியளவில் கோலாலம்பூரின் Jaian Langkawi in Setapak பகுதியில் உள்ள Teratai Mewah Apartment இற்கு அருகில் வைத்து கடத்தினர் என்ற குற்றச் சாட்டின் பேரில் கைது செய்யப்பட்ட இவர்கள் மீது வழக்கு இடம்பெற்றது.

இவர்கள் குற்றத்தை ஒப்புக்கொண்டதை யடுத்து அந்நாட்டு மேல் நீதிமன்றம் ஒன்று குறைந்த பட்சத் தண்டனை வழங்கி உள்ளது. மேல் நீதிமன்ற நீதிபதி மொஹமட் ஹபிடின் இத் தீர்ப்பை வழங்கினார்.

இலங்கையரான எஸ்.செல்வகுமார் வயது 32, பி.ஜயநாதன் வயது 26, ஜே.அந்தோனி வயது 22 மற்றும் மலே சியரான ரி.ராமு வயது 22 ஆகியோரே தண்டனை விதிக்கப்பட்டிருப்பவர்கள் ஆவர்.

# தேர்தல் தொகுதிகளை உடனடியாக அறிவிக்குமாறு தேர்தல் செயலகம் கோரிக்கை

(கொழும்பு)

உத்தேச உள்ளூராட்சி சபைத் தேர்தல்கள் கலப்பு முறையில் நடத்தப்படுமானால் விரை வில் தேர்தல் தொகுதிகளை தீர்மானிக்கும் நடவடிக்கைகளை ஆரம்பிக்குமாறும் தாமதங் களை தவிர்த்து செயற்பாடுகளை முன் னெடுக்குமாறும் தேர்தல் செயலகம் அரசாங் கத்திற்கு அறிவித்துள்ளது.

அடுத்த வருடம் பெப்ரவரி மாதத்திற்கு முன்னதாக உள்ளூராட்சி சபைத் தேர்தல் களை நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

அதனை புதிய முறையில் நடத்து வதற் கும் உள்ளூராட்சி சபைத் தேர்தல் திருத் தத்தை எதிர்வரும் 6ஆம் திகதி நாடாளு மன்றத்தில் சமர்ப்பிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக தேர்தலை நடத்துவ தற்கு தகுந்த இரண்டு மாதங்களையும் தேர் தல் தொகுதிகளையும் அறிவிக்குமாறு தேர் தல் செயலகம் உள்ளூராட்சி சபை அமைச் சிடம் கோரியுள்ளது.

கடந்த சில தசாப்தகாலமாக இலங்கை யில் விகிதாசார அடிப்படையிலேயே தேர்தல் கள் நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

**பச்சிலை அல்லது கதிர்பச்சை**

Botanical Name - Pogostemon heyneanus

Family - Lamiaceae

Sinh - Kollankola.

இச்செடியானது மிகவும் நறுமண முள்ள அல்லது பெருஞ்செடி வகையைச் சார்ந்ததாகும். ஒரு மீற்றர் உயரம் வரை வளரக் கூடியதும் வளைந்த கிளைகளைக் கொண்டதுமாகும். இதன் தண்டுகள் மழுங் கிய நாற்சதுரமான அல்லது கிட்டத்தட்ட உருளை வடிவமாகவும் காணப்படும் (bluntly quodr ongular or nearly cylindrical) இளம் தண்டுகளில் ரோமங்கள் காணப்படும். இலைகள் கரும்பச்சை நிற மானவை. தனியிலை, எதிரிலை அடுக்கம் கொண்டவை. கரும்பச்சை நிறமானவை, 5 - 12.5 செ.மீ நீளமானவை. இலைகளின் விளிம்புகளில் பற்கள் போன்ற அமைப்பு காணப்படும். இலைகளின் பின்பக்கத்தில் நரம்பமைப்புகள் (Venation) தெளிவாகக் காணப்படும். இலைக்காம்புகள் 2.5 - 7.5 செ.மீ நீளமானவை. பூக்கள் ஒழுங்கற் றவை. இருபாலானவை. இதில் வெண்ணிறமான நிறைய சிறிய பூக்கள் காணப்பட்டு பழங் கள் சிறியவையாகவும் ஒரு விதையுடைய தாகவும் காணப்படும். பூக்களை சித்திரை, வைகாசி ஆகிய மாதங்களில் அவதானிக் கலாம்.

**இனவிருத்தியும், பரம்பலும்.**

பச்சிலை மூலிகையானது பச்சிலைத் துண்டங்கள் மூலம் இலகுவில் இனவிருத்தி அடையும். (Cuttings) யாழ் மாவட்டத்தில் மட்டுவில் பிரதேசத்தில் இதன் பரம்பல் அதிகமாக காணப்படுகின்றது.

**மருத்துவப்பயன்கள்.**

❖ இதன் உடன் இலைகளை 1 கைப்பிடி அளவு எடுத்து 200 மில்லி நீர்விட்டு $1/4$ ஆக வற்றக் காய்ச்சி வாய்கொப்பளித்து வர முரசு கரைதல், வாய்த்துர்நாற்றம் ஆகி யன தீரும்.




❖ இதன் உடன் இலைகளில் சாறு பிழிந்து கொப்பளங்களுக்கு பூசலாம்.

❖ இதன் இலைகளை நன்றாக நிழலில் உலர்த்தி 40 கிராம் அளவு பொடி செய்து 200மில்லி லீற்றர் தேங்காய் எண்ணெ யில் கலந்து அடுப்பேற்றி காய்ச்சி, மெழு கு பதத்தில் வடித்து, ஆறவிட்டு சிரங்கு மற்றும் சொறி என்பவற்றிற்கு பூசலாம்.

❖ பச்சிலைச் சாறு 10மில்லி எடுத்து 200 மில்லி சுத்தமான தேனுடன் கலந்து காலை, மாலை சேர்த்து வர இருமல், ஆஸ்மா போன்ற நோய்நிலைமைகளில் பயன்படுத்தலாம்.

❖ இதன் வேர்களை சேகரித்து கழுவி நிழலில் உலர்த்தி 40 கிராம் அளவு எடுத்து 200 மில்லிநீர் விட்டு $1/4$ ஆகவற்ற வைத்து 30 மில்லி அளவு காலை, மாலை கொடுக்க மூட்டுவலி குணமாகும்.

❖ இதன் இலைகளின் சாறை செறிவாக எடுத்து தலை வலிக்கு தடிப்பாக பூசிவர தலைவலி குணமாகும்.

❖ இதன் இலைகளிலிருந்து நீராவியால் வடித்து எடுத்தல் மூலம் சேகரிக்கப்படும் நறு மண எண்ணெயை முகத்தி லும், உடலிலும் பூசிவர வியர்வை துர்நாற்றம் நீங்கு வதுடன், தோல் நல்ல மினு மினுப்பாக வரும்.

❖ முகப்பருவிற்கு,

திருநீற்றுப்பச்சிலை 100 கிராம்
வெண்துளசி 50 கிராம்
தாமரைப்பூவிதழ் 100 கிராம்
பச்சிலை 100 கிராம்
சந்தனம் 100 கிராம்
மஞ்சள் தூள் 150 கிராம்

இதில் திருநீற்றுப்பச்சிலை, வெண் துளசி, தமரைப்பூவிதழ், பச்சிலை இலைகளை பச்சையாக அரைத்து அதனு டன் அரைத்த சந்தனத்தைச் சேர்த்து மீண் டும் அரைத்து மஞ்சள் தூளையும் சேர்த்து அடைபோல் தட்டி நிழலில் உலர்த்தவும் பின் நன்றாக உலர்ந்ததும் மீண்டும் இடித்து பொடி செய்து கொள்ளவும்.

**பயன்படுத்தும் முறை.**

தேவையான அளவு தூளை எடுத்துக் வெந்நீர் விட்டு வெண்ணெய்ப்பதமாக குழைத் துக் கொள்ளவும். குளிக்கப்போகுமுன் முகம் முழுவதும் சீராகத் தடவி 30 நிமிடங்கள் கழித் துக் குளிக்கவும் அல்லது இரவு நித்திரைக்கு போகு முன் இதனை முகத்தில் பூசிக் கொண்டு காலையில் குளிக்கவும் தொடர்ந்து 40 நாட் கள் நாட்கள் இம்முறையை பயன்படுத்தி வர முகப்பரு நீங்கும் முகம் வள வளப்பாகும் மருந்து பயன்படுத்தும் காலத்தில் சவர்க்கா ரம் பயன்படுத்தக்கூடாது .

❖ பச்சிலைகளிலிருந்து எடுக்கும் சாறுக்கு புண்களில் ஏற்படும் கிருமிகளை அழிக் கும் தன்மை உள்ளதால் புண்களை இல குவில் ஆற்றும் குணமுடையது.

டாக்டர் திருமதி விவியன் சத்தியசீலன் (M.D.C.S.)
சிரேஷ்ட விரிவுரையாளர், சித்தமருத்துவத்துறை,
யாழ். பல்கலைக்கழகம், கைதடி.

❖ பச்சிலை, பூவாங்கிழங்கு, கஸ்தூரிமஞ் சள், சடாமாஞ்சிக், வாய்விடங்கம், கசகசா, கார்போகரிமி, சந்தனம், கிச்சிலிக்கிழங்கு, கோரைக்கிழங்கு இலைகளை நிழலில் உலர்த்தி பொடித்து ஒன்றாய்க் கலந்து வைத்துக் கொண்டு எண்ணெயில் (நல் லெண்ணெய்) குழைத்து பூசி தலைமுழு கினாலும், பொடியை தனியாகத் தேய்த் துக் குளித்தாலும் வியர்க்குரு, சொறி, கடி, வியர்வை நாற்றம் என்பன அகலும்.

# நுளம்புகள், ஈக்கள் ஜாக்கிரதை!

தற்போது காய்ச்சல் காலம்! தொடர்ந்து மழை பெய்வதால் ஆங்காங்கே தண்ணீர் தேங்கும். நுளம்புகள் உருவாகி பெருகும். பின்னர் ஒவ்வொருவரையும் கடித்து இரத்



தத்தை உறுஞ்சுவதோடு நோய்களையும் பரப்பி விடும். அதேபோல் ஈக்களும் ... உணவுப் பொருட்களை மொய்த்து, தொற்று நோய்களை பரப்பிவிடும். இதனால் பல வகையான காய்ச்சல், வயிற்றுப்போக்கு ஏற்பட்டு அவஸ்தைப்பட வேண்டிருக்கும். நுளம்புகள், ஈக்களிடமிருந்து முன்னெச்சரிக்கையாக உங்களைப் பாதுகாத்துக்கொள்ளுங்கள்.

❖ ஈக்களும், இதர பூச்சிகளும் உணவுப் பண்டங்களின் மீது உட்காராதவாறு அல்லது ஊர்ந்து செல்லாதவாறு பார்த்துக் கொள்ளுங்கள்.

❖ பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர் கிடைக்காத பட்சத்தில் குடிப்பதற்கு முன் தண்ணீரை கொதிக்க வைப்பது மிகவும் நல்லது.

❖ வீட்டை அடிக்கடி சுத்தம் செய்யுங்கள். தரைகளையும் சுவர்களையும் சுத்தமாக வைத்துக் கொள்ளுங்கள். நாள்பட்ட உணவை சாப்பிட வேண்டாம். நோய் தாக்கியவர்கள் மற்றவர்களை விட்டு ஒதுங்கியிருந்து சாப்பிட வேண்டும்.

❖ நோயாளிகள் பயன்படுத்திய தட்டுகளையும் பாத்திரங்களையும் மற்றவர்கள் பயன்படுத்துவதற்கு முன் சுடுநீரில் கழுவுவது நல்லது.

❖ மலேரியா நோய் தாக்கியவரின் இரத்தத்தில் இந்த நோயை விளைவிக்கும் ஒட்டுண்ணிகள் இருக்கின்றன. நுளம்புகள் மூலமும் இந்த ஒட்டுண்ணிகள் பரவுகின்றன. எங்கும் எதிலும் சுத்தம் சுகாதாரமாக இருந்தால் தொற்று நோயிலிருந்து நம்மை பாதுகாத்துக் கொள்ள முடியும்.

# குளுக்கோஸ் ஏற்றுவது ஏன்?

மருத்துவமனையில் குளுக்கோஸ் ஏற்றுவதற்கு பல காரணங்கள் உண்டு. முக்கியமாக நம் உடம்பிலிருந்து நீர் வெளியேறிவிட்டால், பற்றாக்குறையை தீர்க்க உடனே குளுக்கோஸ் ஏற்றி விடுவது மிகமிக முக்கியம். அப்படி ஏற்றவில்லை என்றால், உடம்பில் நீர் முழுவதும் வற்றி, கை, கால் ஜில்லிட்டு நாம் புத்துடிப்பு இன்றி, இரத்த அழுத்தம் இறங்கி மயக்க நிலைக்கு போய் விடுவார்கள்.

இதனால் உயிருக்கு ஆபத்து ஏற்படும் சூழலும் ஏற்படலாம். சிலருக்கு காய்ச்சல் அதிகமாகும் போது சாப்பிட முடியாது. அப்போது அவர்களுக்கு எனர்ஜிக்காக குளுக்கோஸ் ஏற்றப்படும்.




மஞ்சள் காமாலை வந்தால் கல்லீரலுக்கு குளுகோஸ் அதிகம் தேவை. அப்போது குளுக்கோஸ் ஏற்றினால் மஞ்சள் காமாலை நோய் குறைய வாய்ப்பு உண்டு.

நமது உடலின் பெரும் பகுதி நீரால் ஆனது சராசரியாக 65 கிலோ எடையுள்ள மனிதனின் உடலில் 40 லீற்றர் தண்ணீர் இருக்கும். இதில் 28 லீற்றர் நீரானது உடலின் பல்வேறு உறுப்புகளில் இருக்கும் பல ஆயிரம் செல்லுக்குள் இருக்கும்.

செல்லிற்குள் இருக்கும் நீர் **இன்ட்ரா செல்லுலர் வாட்டர்** எனப்படும் 3 லீற்றர் நீரானது இரத்தத்தில் உள்ள திரவ நீரான பிளாஸ்மாவில் இருக்கும். மீதமுள்ள 9 லீற்றர் நீரானது இந்த இரண்டிற்கும் இடைப்பட்ட இணைப்புப்பாகங்களில் இருக்கும். இவற்றின் அளவு குறைகிறபோது தான் குளுக்கோஸ் ஏற்றப்படுகிறது.

# குடற்புண்

இன்றைய அவசர உலகில் நம்மில் அநேகர் சாப்பிடக்கூட நேரம் ஒதுக்குவதில்லை. கண்ட இடங்களில் எந்த நேரத்தில் வேண்டுமானாலும் சாப்பிடுவது அல்லது நாள் முழுவதும் சாப்பிடாமல் இருப்பது என மாறுபட்ட உணவுப் பழக்கத்திற்கு ஆளாகியுள்ளோம். இதனால் அவ்வப்போது உணவு செரிமானத்திற்காக சுரக்கப்படும் அமிலம் கிரகிப்பதற்கு உணவு இல்லாமல் வயிற்றிலுள்ள சளிச்சவ்வை கிரகித்து புண்ணை ஏற்படுத்துகிறது. இதற்கு ஆங்கிலத்தில் அல்சர் என்று




பெயர் வழங்கப்படுகிறது.

இது பாரபட்சமின்றி பாமரர் முதல் பணக்காரர் வரை அனைவரையும் பாதிக்கும் நோயாகும். இதனையே சித்த ஆயுர்வேத மருத்துவ முறைகளில் குன்மம் என்று அழைக்கின்றனர். குன்மம் என்ற சொல் குல்மம்- புதர் என்ற வடமொழிச் சொல்லின் சிதைவு.

வலி வரும் போது நோயினால் முன் பக்கம் குன்றவைக்கும் காரணத்தினால் இதனை குன்ம நோய் என்றும் கூறுவர். குடற்புண் ஏற்பட காரணங்களாக சொல்லப்படுபவை.

❖ நேரத்திற்கு சாப்பிடாமல் இருத்தல்

❖ அவசர அவசரமாக சாப்பிடுவது

❖ அடிக்கடி கோபம் கொள்ளுதல்

❖ அதிக பட்டினி இருத்தல்

❖ குறைவான தூக்கம் மற்றும் இரவில் அதிக நேரம் கண் விழித்து வேலை செய்வது

❖ மன அழுத்தம்

❖ புகை பிடித்தல், அளவுக்கு மிஞ்சிய மதுப் பழக்கம், போதைப் பொருட்களை உபயோகித்தல்.

இந்த நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்குத் தோன்றும் குறிகுணங்கள் இந்த வியாதியில் விசேடமான ஒரு அறிகுறி வயிற்றில் புரளும் ஒரு கட்டி போன்று பின்னல் முடிச்சாகும்.

செரியாமை, வயிற்றில் எரிச்சல், வாந்தி, உடல் வன்மை குறைதல், தேகம் மெலிதல், மனம் குன்றல் ஆகிய அறிகுறிகள் காணப்படும்.

❖ பசியின்மை, உணவின் மீது வெறுப்பு, குமட்டல், ஏப்பம், வாயில் நீருறல், வாந்தி, புளியேப்பம், வயிறு எந்த நேரமும் அல்லது உணவு உண்ணும் முன் வரை வலித்தல் அல்லது எரிதல்.

❖ உண்ட உணவு செரியாமல் இருத்தல்

❖ வயிறு உப்பலா இருத்தல்

❖ அடிக்கடி வாந்தி உண்டாதல்

❖ புளித்த ஏப்பத்துடன் முருவித எரிச்சலுடன் வாயு வெளியேறும்

❖ எதிலும் ஆர்வம் குறைந்து உடல் சோர்வாக காணப்படும்

❖ வாயுக் கோளாறு அதிகப் படும்.

## குடற்புண் மூல காரணம்

இந்த நோயை மேல் நாட்டவர் Dyspepsia (ஜீரண கோளாறு), Chronic Gastritis (வயிற்று வேக்காடு), Gastric Ulcer (வயிற்று புண்), Duodenal Ulcer (க்ரனிப் புண்), Gastric Tumor (வயிற்றுக் கட்டி) என பல பெயரிட்டு அழைக்கின்றனர்.

இதற்கு சரியான மூல காரணத்தை மேல் நாட்டு வைத்திய நூல்களில் கூறப்படவும் இல்லை. கண்டுபிடிக்கப்படவும் இல்லை. பொதுவாக வயிற்று நீர் சுரப்பு அதிகமாவதாலும் குறைவதாலும் இந்த வியாதி ஏற்படுகிற தென்றும் அவ்விதச் சுரப்பு அதிகமாதல் குறைதல் இவைகளுக்கு நிச்சயமான காரணம் கண்டுபிடிக்கப்படவில்லை என்று சொல்கிறார்கள்.

ஆனால் சித்த, ஆயுர்வேத மருத்துவ முறைகளில் இதற்கான காரணங்கள் பல விளக்கப்பட்டுள்ளன. இந்த நோய்க்கு காரணம் வயிறு மற்ற அவயங்களின் உள்பாகம் வறண்டு போவதேயாகும் வறட்சியினால் உள்புறத்தில் வலியும் கரடுமுரடான முடிச்சுக்களும் புண்களும் உண்டாவது சாதாரணம்.

இப்படி வறட்சி ஏற்படுவதற்கு காரணம் வறண்ட உணவுகளை அதாவது நெய், எண்ணெய் கொழுப்புத் திரவங்கள் சம்பந்தப்படாத உணவுகளை அடிக்கடி அதிகமாக உண்பதும் பசி வேளைகளில் சாப்பிடாமல் பசியை அடக்குவதும் உடம்பில் வறட்சியைக் கொடுக்கக்கூடிய வேலைகளைச் செய்வதும் அப்படிப்பட்ட சீதோஷ்ணங்களில் அதிகமாக பழகுவதும் உடம்பில் குளிர்ச்சி உண்டாவதற்கான பழக்கங்களாகிய எண்ணெய் தேய்த்துக் கொள்ளுதல் போன்ற பழக்கங்களை கடைப் பிடிக்காமல் இருப்பதும்.

சரீரம் பல வீனமாக இருக்கும் போது வாயு பதார்த்தங்களை அதிகமாக உண்பதும் ஆகும். மல மூத்திர வேகங்களை அடக்குவதும் மூலச் சூடும் குன்மத்திற்கு முக்கிய காரணமாகும் . ஆதலாம் இந்த நோய்க்கு ஆதாரம் வறட்சி , வாய்வு வாதம் அக்னி பலத்தின் சம மின்மை இவை நான்கும் ஒன்றுக்கொன்று ஆதாரமானவை ஆகையால் இந்த நோய்க்கு சிகிச்சை செய்வதற்கு முதலில் செய்யவேண்டியது உடம்பில் குளிர்ச்சி உண்டாக்கும் உணவு வகைகளை உண்பதும், இலகுவான ஆகாரத்தை உண்பதும் மேலும், வாயுவைச் சமனப்படுத்தக்கூடிய உணவுகளையும் மருந்துகளையும் உட்கொள்வதேயாகும்.

குன்மத்தின் வகைகள் சித்தர்கள் குன்மத்தை எட்டு வகைகளாக பிரித்துள்ளனர்.

1.வாதகுன்மம்
2.பித்தகுன்மம்
3.கபகுன்மம்
4.வாயுகுன்மம்
5 .எரிகுன்மம்
6 .சன்னிகுன்மம்
7.சக்திகுன்மம்
8 .வலிகுன்மம்

யூகிமுனி வைத்திய சிந்தாமணி என்ற நூலில் எட்டு வகை குன்மத்தை விளக்கும் வகையில் பாடல்கள் உள்ளன. அவற்றில் இருந்து நாம் அறிவது வாதகுன்மத்தில் நடைபலம் குறைந்து காணப்படும்.

உடல் கனக்கும் உறக்கம் உண்டாகும். ஆகாரம் செல்லாது மலம் இறுகும். நாவறட்சி ஏற்படும். தலை வலி ஏற்படும். பித்த குன்மத்தில் முகம் மஞ்சள் நிறமாக காணப்படும். உடல் உஷ்ணம் அதிகமாக இருக்கும். மயக்கம் மற்றும் மூர்ச்சை அடிக்கடி உண்டாகும். கை, கால் ஓச்சல் இருந்துகொண்டே இருக்கும். வாந்தி ஏற்படலாம்.மலம் கடினப்பட்டு கழிக்க நேரிடும். நெஞ்சில் கோழை கட்டும். தாகம் அதிகமாக இருக்கும். சிறு நீர் சிவந்திருக்கும். கப குன்மத்தில் இளைப்பு உண்டாகி பலவீனம் ஏற்படும். (தொடரும்)




# சூடான தேநீர் குடிப்பவரா நீங்கள்?

# கவனம் கான்சர் வந்து விடும் !

*சென்றவாரத் தொடர்ச்சி..*

சூடான பிரதேசங்களில் உள்ளவர்களுக்கு ஓரளவு பாதிப்பு வாய்ப்பு குறைவு தான்.

இவ்வாறு ஆய்வு முடிவுகளில் தெரிய வந்துள்ளது.

அதிக சூடாக டீ குடித்தால் தான் கான்சர் வரும்: அதிக சூடாக காபி குடித்தால்...? இப்படி காபி குடிப்பவர்களுக்கு கான்சர் வாய்ப்பு அதிகரித்ததே இல்லை என்று ஆய்வில் தெரிய வந்துள்ளது.


மும்பையில் உள்ள டாடா நினைவு மருத்துவமனை நிபுணர்கள் இந்த ஆய்வை மேற்கொண்டனர். இவர்களின் ஆய்வு முடிவுகளை சர்வதேச நிபுணர்கள் ஏற்றுக்கொண்டுள்ளனர்.

டாடா நிபுணர்கள், தங்கள் ஆய்வுக்கு காஷ்மீரில் ஆயிரத்து 500 பேரிடம் சர்வே எடுத்துள்ளனர். அவர்களில் அதிக சூடாக டீ குடிப்போருக்கு கான்சர் ஆபத்து உள்ளதை உறுதி செய்தனர்.

ஆண்டுக்கு இப்படிப்பட்டவர்களில் சராசரியாக 800 பேருக்கு கான்சர் வருவதும் தெரிய வந்துள்ளது.

அமெரிக்காவிலிருந்து வெளிவரும் சர்வதேச கான்சர் ஆராய்ச்சி இதழ், "இன்டர் நெஷனல் கான்சர் எபிடமாலஜி" யில் இந்த ஆய்வு முடிவுகள் வெளி வந்துள்ளன... அது சரி, நீங்கள் அதிக சூடாக டீ குடிப்பவரா? அப் படீன்னா, இனி குடிக்க மாட்டீங்கல்ல...!

# பிராந்திய,சர்வதேச விவகாரங்களில் ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்கு சீனா-ரஷ்யா முடிவு



(பீஜிங்)

பிராந்திய சர்வதேச விவகாரங்களில் ஒத்துழைப்பை வலுப்படுத்த ரஷ்யாவும் சீனாவும் ஒப்பந்தம் செய்துகொண்டுள்ளன. பீஜிங்கில் நேற்று முன்தினம் ரஷ்ய ஜனாதிபதி திமித்ரி மெத்வதேவும் சீன ஜனாதிபதி ஹுஜிந்தாவோவும் இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர்.

ஜி-20 ஷாங்காய் ஒத்துழைப்பு பிரிக் ஆகிய அமைப்புகளின் விதிமுறைகளை கடைப்பிடிப்பதில் ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்தும் இரு நாடுகளும் உடன்பாட்டை மேற்கொண்டுள்ளன.

இதுதவிர வர்த்தகம், பொருளாதாரம், பயங்கரவாத எதிர்ப்பு, பிரிவினைவாத எதிர்ப்பு, அணுசக்தி, வங்கி, நிதி, கல்வி, மருத்துவம், கலாசாரம், விளையாட்டு, ஊடகம், சுற்றுலா உள்ளிட்ட துறைகளில் உறவை மேலும் விரிவுபடுத்திக் கொள்வதென இரு நாட்டு தலைவர்களும் முடிவெடுத்தனர்.

இரண்டாம் உலகப்போரில் ரஷ்யாவும் சீனாவும் ஒரு அணியில் இருந்து செயல்பட்டன. இந்நிலையில் இரண்டாம் உலகப் போரின் 65 ஆம் ஆண்டு நிறைவு விழாவையொட்டி தாங்கள் இணைந்து செயற்பட்டதை இரு நாடுகளும் கொண்டாடின.

மெத்வதேவும் ஹு ஜிந்தாவோவும் பீஜிங்கில் சந்தித்துப் பேசிய பின்னர் இரண்டாம் உலகப்போரின் 65 ஆம் ஆண்டு நிறைவு விழா அறிக்கையை வெளியிட்டனர்.

அதில் கூறியிருப்பதாவது ரஷ்யாவுக்கும் சீனாவுக்கும் இடையே நெருங்கிய தொடர்புண்டு. இரு நாடுகளுக்குமிடையே நீண்ட காலமாக அனைத்து விதத்திலும் நட்புறவு நீடித்து வருகிறது. இதை இரு நாடுகளும் மேலும் வலுப்படுத்திக் கொள்ள விரும்புகின்றன. இதைக் கருத்தில் கொண்டே பல்வேறு உடன்பாடுகள் எட்டப்பட்டுள்ளன.

இந்த உடன்பாடுகளால் இரு நாடுகளுக்கி டையே ஏற்கனவே உள்ள உறவு வலுப்படுவதுடன் விரிவாகும் என்ற நம்பிக்கையுண்டு. உலகை ஆட்டம் காண வைத்த பொருளாதார நெருக்கடியில் இருந்து இரு நாடுகளின் பொருளாதாரமும் மீண்டுள்ளன.

இந்நிலையில் வர்த்தகம் தொடர்பாக கையெழுத்தாகியுள்ள ஒப்பந்தங்கள் இரு நாட்டு பொருளாதார வளர்ச்சிக்கு உத்வேகத்தை அளிக்கும். இந்த ஒப்பந்தங்கள் மூலம் இரு நாடுகளின் உறவில் புதிய அத்தியாயம் தொடங்கியுள்ளதாகவே நினைக்கிறோம்.

பிராந்திய சர்வதேச விவகாரங்களில் இரு நாடுகளும் முக்கிய பங்கு வகிக்கின்றன. உலகளவில் அமைதி நிலவவேண்டும். நிலைத்த நீடித்த வளர்ச்சி இருக்க வேண்டும். அனைவருக்கும் மருத்துவ வசதி கிடைக்க வேண்டும் என்றே இரு நாடுகளும் விரும்புகின்றன.

இதற்கு தங்களால் இயன்ற அளவு இரு நாடுகளும் ஒத்துழைப்பை நல்கி வருகின்றன என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)




# அவுஸ்திரேலிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் பதவியேற்பு


(மெல்போர்ன்)

அவுஸ்திரேலிய நாடாளுமன்றத்துக்கு புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் நேற்று பதவியேற்றுக் கொண்டனர்.

அவர்களுக்கு உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதி ரொபர்ட் பிரஞ்ச் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் பிரதமர் ஜூலியா கில்லார்ட் எதிர்க்கட்சித் தலைவர் டோனி அப்பாட் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

தொழிலாளர் கட்சியின் ஹாரி ஜென்கின்ஸ் நாடாளுமன்ற சபாநாயகராக ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். (ஸ்ரீ-2)



**பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் உள்ள எலிசி மாளிகையில் பாலஸ்தீன ஜனாதிபதி முகமத் அப்பாஸை பிரான்ஸ் ஜனாதிபதி நிகொலஸ் சர்கோசி (வலது) வரவேற்றார்.**

# பாகிஸ்தானில் அமெரிக்கா ஏவுகணைத் தாக்குதல்

## 12 தீவிரவாதிகள் பலி

(இஸ்லாமாபாத்) -

பாகிஸ்தானில் பழங்குடியினர் அதிகம் வசிக்கும் வடக்கு வஜிரிஸ்தான் பகுதியில் அமெரிக்கப் படை கடந்த 26 ஆம் திகதி தொடர் ஏவுகணைத் தாக்குதலை நடத்தியது. இதில் 12 தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர்.

தீவிரவாதிகளுடனான மோதலில் அமெரிக்க வீரர்கள் சிலரும் இருந்திருக்க வாய்ப்புள்ளதாக தெரியவந்துள்ளது. ஆனால் இதுகுறித்து அமெரிக்கப் படை அதிகாரபூர்வ தகவல் ஏதும் தெரிவிக்கவில்லை.

லோவர் மந்தாய் பகுதியில் மூன்று ஏவுகணைகள் சீறிச் சென்று லொறி மீதும் தீவிரவாதிகள் பதுங்கியிருந்த வீட்டின் மீதும் தாக்கின. இதில் வீடு இடிந்து தரைமட்டமாகியது. அதில் பதுங்கியிருந்த தீவிரவாதிகள் 4 பேர் கொல்லப்பட்டனர்.

தந்த் காளி பகுதியில் சீறிச் சென்ற இரு ஏவுகணைகள் ஜீப் ஒன்றைத் தாக்கியது இதில் தீவிரவாதிகள் 5 பேர் கொல்லப்பட்டனர். அதேபோல் ஷெரணி பகுதியில் கார் ஒன்றை குறிவைத்து அமெரிக்கப் படை நடத்திய ஏவுகணைத் தாக்குதலில் 3 தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர்.

பயகங்ரவாதிகள் ஆதிக்கம் நிறைந்த வடக்கு வஜிரிஸ்தான் பகுதியில் அவர்களின் கொட்டத்தை ஒடுக்க அமெரிக்கப் படை கடந்த சில மாதங்களாக கடும் நடவடிக்கை எடுத்து வருகிறது. இப்பகுதியில் விமானத் தாக்குதலையும் ஏவுகணைத் தாக்குதலையும் மாறி மாறி நடத்தி வருகிறது. இந்த மாதம் மட்டும் இதுவரை 19 ஏவுகணைத் தாக்குதல் நிகழ்த்தியுள்ளது.


பாகிஸ்தானின் ஸ்வாத் மாவட்டத்தில் பாதுகாப்புப் படையினருக்கும் தீவிரவாதிகளுக்கும் இடையே கடந்த 26 ஆம் திகதி கடும் துப்பாக்கிச் சண்டை நடந்தது. இதில் தேடப்பட்டு வந்த இரு முக்கிய தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர். தீவிரவாதிகள் பொலிஸ் சோதனைச் சாவடி வழியே தப்பிக்க முயன்ற போது அவர்களை பாதுகாப்புப் படை வீரர்கள் சுட்டு வீழ்த்தினர். (ஸ்ரீ-2)

# பாகிஸ்தானிலுள்ள பயங்கரவாத கூடாரங்களை குண்டுவீசித் தகர்ப்பதற்கு அமெரிக்கா தயார்

(வோஷிங்டன்)

பாகிஸ்தானில் இருக்கும் 150 க்கும் மேற்பட்ட பயங்கரவாத முகாம்களை குண்டு வீசித் தகர்க்க அமெரிக்கா தயாராக இருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

பாகிஸ்தான் மண்ணில் இருந்து செயற்படும் பயங்கரவாத அமைப்புகளால் மீண்டும் ஒரு முறை பெரியளவிலான தாக்குதல் நடத்தப்படுமேயானால் உடனடியாக பாகிஸ்தானில் இருக்கும் 150 பயங்கரவாத முகாம்கள் குண்டு வீசித் தகர்க்கப்படும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)



**ஐக்கிய நாடுகளின் தலைமையகத்தில் அதன் பொதுச் செயலர் பன் கீ-மூனை (வலது) அலேசியாவின் பிரதமர் நஜிப் ரஜாக் சந்தித்து பேசினார்.**

# அமைதிப் பேச்சுவார்த்தையை தொடருமாறு இஸ்ரேல் பாலஸ்தீனத்திடம் கோரிக்கை

(டெல் அவிவ்)

பாலஸ்தீனத் தலைவர் மஹ்மூத் அப்பாஸ் அமைதி பேச்சுவார்த்தையை தொடர வேண்டும் என்று இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு கேட்டுக் கொண்டுள்ளார்.

ஆனால், இதுகுறித்து மற்ற அரபு தலைவர்களுடன் ஆலோசித்து முடிவு எடுப்போம் என்று பாலஸ்தீனத் தலைவர் அப்பாசின் செய்தித் தொடர்பாளர் நபில் அபுருடெனா கூறியுள்ளார்.

இது தொடர்பாக எகிப்து தலைநகர் கெய்ரோவில் அடுத்த வாரம் அரபு தலைவர்களின் கூட்டம் நடைபெறவுள்ளது.

இந்நிலையில் மேற்குக் கரைப் பகுதியில் இஸ்ரேலிய குடியிருப்புக்களை உருவாக்குவதற்கான கட்டுமானப் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. இதை நிறுத்துமாறு விடுவிக்கப்பட்ட கோரிக்கையை இஸ்ரேல் நிராகரித்துவிட்டது. (ஸ்ரீ-2)

# இந்தியாவின் ஒரு பகுதிதான் காஷ்மீர்; பாகிஸ்தானுக்கு இந்தியா பதிலடி

(புதுடில்லி)

காஷ்மீர் இந்தியாவின் ஒரு பகுதியாகும். இதில் எப்போதும் மாற்றமில்லை என்று அழுத்தம், திருத்தமாக திட்டவட்டமாக இந்தியா அரசு சார்பில் பாகிஸ்தானுக்கு பதிலடி கொடுக்கப்பட்டுள்ளது.

காஷ்மீர் இந்தியாவின் ஒருபகுதியல்ல என்பது போன்ற கருத்தை ஏற்படுத்தும் பாகிஸ்தானின் முயற்சியை முறியடிக்கும் வகையில் இந்தியா இவ்வாறு காட்டமாக பதிலளித்துள்ளது.

காஷ்மீர் விவகாரத்தில் இந்தியாவின் நிலைப்பாடு தெளிவாகவும் உறுதியாகவும் உள்ளது. இதில் மாற்றுக் கருத்துக்கே இடம் இல்லை என்றும் இந்திய வெளியுறவுத் துறை சார்பில் ஆணித்தரமாக தெரிவிக்கப்பட்டுள்ளது. காஷ்மீரில் கடந்த சில மாதங்களாக நடந்து வரும் வன்முறையை ஊதிப் பெரிதாக்கி குளிர்காய நினைக்கிறது பாகிஸ்தான். அண்மைக்காலங்களில் பாகிஸ்தான் தலைவர்களின் பேச்சில் இது வெளிப்படுகிறது. காஷ்மீர் மக்களின் கருத்தை அறியச் சென்ற அனைத்துக் கட்சி குழுவில் உள்ள சில கட்சிகள் அந்த மாநிலத்துக்கு தன்னாட்சி அதிகாரம் வழங்க ஆதரவு தெரிவித்தன.

இதைக் கவனித்து வந்த பாகிஸ்தான் தலைவர்கள் இப்போது காஷ்மீர் இந்தியாவின் ஒரு பகுதியல்ல என்று தைரியமாகப் பேசத் தொடங்கியுள்ளனர். காஷ்மீரில் ஏற்பட்டுள்ள குழப்பத்தை சாதகமாக்கி காஷ்மீர் விவகாரத்தை சர்வதேச பிரச்சினையாக்க பாகிஸ்தான் தலைவர்கள் துடிப்பது அவர்களது பேச்சிலிருந்து தெரியவருகிறது.

பாகிஸ்தான் வெளியுறவுத் துறை செய்தித் தொடர்பாளர் அப்துல் பாசித் கடந்த 26 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அளித்த பேட்டியில்




காஷ்மீர் இந்தியாவின் ஒரு பகுதியல்ல. இந்திய அரசமைப்பு சட்டத்திற்குட்பட்டு காஷ்மீர் பிரச்சினைக்கு தீர்வு காண முடியாது என்று கூறியிருந்தார்.

காஷ்மீர் விவகாரம் தொடர்பாக இந்தியாவின் நிலைப்பாட்டில் இப்போது மாற்றம் ஏற்பட்டுள்ளது. இதற்கு முன் காஷ்மீர் பிரச்சினையில் இந்தியா பிடிவாதமாக இருந்தது என்றும் அவர் கூறியிருந்தார். இந்தப் பிரச்சினை தொடர்பாக இந்தியாவும் பாகிஸ்தானும் பல ஆண்டுகளாக பேசி வருகின்றன. காஷ்மீர் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கான பேச்சுவார்த்தைக்கு பாகிஸ்தான் முக்கியத்துவம் அளித்து வருகின்றது. ஆனால் இந்தியா இந்தப் பிரச்சினைக்கு முக்கியத்துவம் கொடுப் பதில்லை என்றும் பேட்டியில் அப்துல் பாசித் தம் இஷ்டம் போல் கருத்து தெரிவித்திருந் தார்.

இதற்கு இப்போது இந்திய அரசு சார்பில் பதிலடி கொடுக்கப்பட்டுள்ளது.காஷ்மீர் விவகாரத்தில் இந்தியாவின் நிலைப்பாடு எப்போதும் போல் தெளிவாகவும் உறுதியாகவும் உள்ளது. காஷ்மீர் இந்தியாவின் ஒரு பகுதி. இது இந்தியாவின் நட்பு நாடுகளுக்கும் ஏன் பிற நாடுகளுக்கும் தெரியும்.துடிப்பு மிக்க ஜனநாயக நாடான இந்தியாவில் மக்களின் கோரிக்கைகளை, பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு உரிய வழிமுறைகளும் அரசியல் சட்ட பாதுகாப்பும் உள்ளது. எனவே இந்தியாவின் உள் விவகாரத்தில் பாகிஸ்தான் மூக்கை நுழைக்க வேண்டாம் என்று கறாராக தெரிவிக்கப்பட்டுள்ளது.

காஷ்மிரில் இப்போது உள்ள குழப்பத்திற்கு தீர்வுகாண்பதற்காக மத்திய அரசு அறிவித்த 8 அம்சத் திட்டத்தை பாகிஸ்தான் ஆதரவு பிரிவினைவாத அமைப்பான மிதவாத ஹூரியத் மாநாட்டுப் பிரிவு நிராகரித்துள்ளது.

மத்திய அரசு அறிவித்துள்ள திட்டம் காஷ்மீர் மக்களின் எதிர்ப்பை, அரசியல் ஆவலை பூர்த்தி செய்வதாக இல்லை என்று மிதவாத ஹூரியத் தலைவர் மீர்வைஸ் உமர் பாரூக் தெரிவித்துள்ளார்.

பிரச்சினையின் அடிப்படையைப் புரிந்து கொள்ள விரும்பாத நிலையே மத்திய அரசின் அறிவிப்பில் இருந்து புலப்படுகிறது என்று அவர் கூறியுள்ளார். ஏற்கனவே மத்திய அரசின் திட்டத்தை ஹூரியத் மாநாட்டுக் கட்சியின் தீவிரப் பிரிவுத் தலைவர் சையத் அலி ஷா கிலானி நிராகரித்துவிட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

## உலகில் தமிழன் நாதியற்றவனாகிவிட்டான் டி.ராஜேந்தர் குமுறல்

இலட்சிய திராவிட முன்னேற்றக் கழகம் சார்பில் சிவகங்கை மாவட்டம் தேவகோட்டை அண்ணா அரங்கில் மத்திய மாநில அரசுகளின் விலைவாசி உயர்வைக் க்ண்டித்து கண்டனப் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

இதில் கட்சியின் தலைவர் டி ராஜேந்தர் கலந்து கொண்டுரையாற்றினார்.

அவர் உலகில் தமிழன் நாதியற்றவனாகி விட்டான்.இந்திய தேசிய இனங்களில் தமிழனைத் தவிர வேறு மொழிக்காரர்கள் இலங்கையில் அழிக்கப்பட்டிருந்தால் அதன் விளைவை இந்த உலகமே கண்டிருக்கும்.

வெள்ளைக் கொடி ஏந்தி வந்த தமிழர்கள் ஈவு இரக்கமின்றி சுட்டுக் கொல்லப்பட்டு உள்ளனர்.40 ஆயிரம் பேர் குற்றுயிரும் குலையுயிருமாய் கிடந்த சம்பவம் உலகில் எங்கேயாவது நடந்தது உண்டா என்று பேசினார்.

(ஸ்ரீ-2)

## மீனவர்கள் எல்லை தாண்டுவதை தடுப்பதற்கு இந்திய கடலெல்லையில் அறிவித்தல் பதாகைகள்

(சென்னை)

இந்தியா,இலங்கை நாடுகளின் கடல் எல்லையில் இந்திய கடல் எல்லையைக் குறிக்கும் வகையில் அறிவித்தல் பதாகை ஒன்றை பொருத்துவது தொடர்பாக இந்தியா கவனம் செலுத்தியுள்ளது.

இந்திய கடல் எல்லைக்குள் இலங்கை கடற்றொழிலாளர்கள் அனுமதியின்றி நுழைவதைத் தடுப்பதே இதன் முக்கிய நோக்கமாகும் என இந்திய கடற்படைப்பிரிவின் பொலிஸ் அத்தியட்சகர் பி.தியாகராஜன் தெரிவித்துள்ளார்.

இது குறித்த யோசனையை இந்திய மத்திய அரசுக்கு சமர்ப்பித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். அறியாமை காரணமாக இலங்கைக் கடற்றொழிலாளர்கள் அடிக்கடி இந்திய கடல் எல்லைக்குள் நுழைவதால் பல்வேறு சிக்கல்கள் தோன்றுவதாகவும் தென்னிந்திய கடற்படைப் பிரிவின் பொலிஸ் அத்தியட்சகர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை அறியாமையினால் இந்திய கடற்றொழிலாளர்களும் இலங்கைக் கடற்பரப்புக்குள் பிரவேசிப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

உத்தேசிக்கப்பட்டுள்ள அறிவித்தல் பதாகையில் ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகளில் இந்திய கடல் எல்லையை குறிக்கும் வாசகங்கள் பொறிக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய மத்திய அரசின் அங்கிகாரம் கிடைத்தவுடனேயே அறிவித்தல் பதாகைகளைப் பொருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் இந்திய கடற்படைப் பொலிஸ் பிரிவு குறிப்பிடுகின்றது.

இதன் மூலம் இலங்கை மற்றும் இந்திய கடற்றொழிலாளர்கள் இந்திய கடல் எல்லையை இலகுவில் இனங்கண்டு கொள்ள முடியும் என பொலிஸ் பிரிவின் அத்தியட்சகர் மேலும் கூறினார்.

கடல் எல்லையை மீறிய குற்றச்சாட்டின் அடிப்படையில் இந்திய கடலோர பாதுகாப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டிருந்த இலங்கைக் கடற்றொழிலாளர்கள் பலர் ஏற்னவே விடுவிக்கப்பட்டுள்ளதாகவும் இன்னும் சிலரை விடுவிப்பது குறித்து பேச்சுவார்த்தை நடைபெற்று வருவதாகவும் அத்தியட்சகர் மேலும் தெரிவித்தார். (ஸ்ரீ-4)

## அயோத்தி வழக்கில் நாளை தீர்ப்பு; அலகாபாத் மேல்நீதிமன்றம் அறிவிப்பு

அயோத்தி பாபர் மசூதி இடம் யாருக்கு சொந்தம் என்பது தொடர்பான வழக்கு அலகாபாத் மேல் நீதிமன்றத்தில் 60 ஆண்டுகளாக நடந்து வருகிறது.கடைசியாக இதை விசாரித்து வந்த அலகாபாத் மேல் நீதிமன்றத்தில் கடந்த 24 ஆம் திகதி இதன் தீர்ப்பு மீது தீர்ப்பு வழங்குவதாக அறிவித்தது.

இந்தத் தீர்ப்பு வெளிவந்தால் நாட்டில் பெரிய அளவில் கலவரம் நடக்கலாம் என எதிர்பார்க்கப்பட்டது.

இதனால் நாடு முழுவதும் பதற்றம் நிலவியது. பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டன.இந்த நிலையில் ரமேஷ் சந்திரா திரிபாதி என்பவர் வழக்கு தீர்ப்பை தள்ளி வைக்க வேண்டும். நீதிமன்றத்திற்கு வெளியே பேச்சுவார்த்தை மூலம் இதற்கு தீர்வு காண வேண்டும் என்று மேல் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தார். இதை நீதிமன்றம் தள்ளுபடி செய்தது.

இதை எதிர்த்து அவர் உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடுசெய்தார். தலைமை நீதிபதி கபாடியா தலைமையிலான 3 பேர் குழு முன்பு இது விசாரணைக்கு வந்தது. அவர்கள் அயோத்தி வழக்கு தீர்ப்பை ஒரு வாரம் தள்ளி வைக்க வேண்டும் என கடந்த 23 ஆம் திகதி உத்தரவிட்டனர். அதன்படி தீர்ப்பு தள்ளி வைக்கப்பட்டது.

தீர்ப்பை தள்ளி வைக்கும் வழக்கை நேற்று மீண்டும் விசாரிப்பதற்காக அறிவித்து இருந்தனர். அதன்படி நேற்று நீதிபதிகள் விசாரணையை தொடங்கினார்கள். மனுதாரர் தரப்பில் வக்கீல் முகுல் ரோகாத்கீ ஆஜராகி வாதாடினார். அரசு தரப்பில் அட்டர்னி ஜெனரல் வானாவதி வாதாடினார். மதியம் விசாரணை முடிந்து தீர்ப்பு வழங்குவதாக அறிவித்தனர்.

அலகாபாத் மேல் நீதிமன்றில் தீர்ப்பை தள்ளி வைக்க கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுவை தள்ளுபடி செய்து உயர்நீதிமன்று நேற்று உத்தரவிட்டது.

இதையடுத்து அயோத்தி வழக்கில் நாளை வியாழக்கிழமை மாலை 3.30 மணிக்கு தீர்ப்பு வழங்கப்படும் என்று அலகாபாத் மேல் நீதிமன்றம் அறிவித்துள்ளது. (ஸ்ரீ-2)




தஞ்சை பெரியகோயில் 1000வது ஆண்டு நிறைவு விழாவையொட்டி அரண்மனை வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள சோழர் வரலாற்று கண்காட்சி வரும் 3ம் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. இதுவரை 3.5 லட்சம் பேர் கண்காட்சியை பார்வையிட்டுள்ளனர். கண்காட்சிக்கு வந்த பொதுமக்கள்.

இறந்து போனவனின் செருப்புகளுக்காகக் காத்திருப்பவன் வெறுங்கால்களுடனே நடக்க வேண்டி வரும். ~ டேனிஷ் பழமொழி.

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# பாதிக்கப்பட்ட மக்களின் பிரதிநிதிகளுடன் தமிழ்க் கட்சி அரங்கத் தலைவர்கள் சந்திப்பர்

## சிவாஜிலிங்கம் தெரிவிப்பு



(கொழும்பு)

மீள்குடியேற்றப்பட்ட மற்றும் இடைத்தங்கல் முகாம்களில் உள்ள மக்களின் பிரச்சினைகள் குறித்து அம்மக்களின் பிரதிநிதிகளுடன் தமிழ்க் கட்சிகளின் அரங்கதில் அங்கம் வகிக்கும் தலைவர்கள் எதிர்வரும் 2 ஆம் திகதி சனிக்கிழமை கலந்துர்ரையாடவுள்ளதாக தமிழ்த் தேசிய விடுதலைக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

தமிழ்க் கட்சிகளின் அரங்கத்தின் அடுத்த கூட்டம் ஒக்ரோபர் 2 ஆம் திகதி தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் ஆனந்தசங்கரி தலைமையில் அவரது கிளிநொச்சி அலுவலகத்தில் இடம் பெறவுள்ளது.

அன்றைய தினம் இக் கட்சிகளின் தலைவர்களின் கூட்டம் முடிந்தவுடன் அவர்கள் மீள்குடியேற்ற மக்களினதும் இடைத் தங்கல் முகாம் மக்களின் பிரதிநிதிகளினதும். அம் மக்களின் பிரச்சனைகள் குறித்து கலந்துரையாடுவர் என சிவாஜிலிங்கம் கூறினார்.

தமிழ்க் கட்சிகளின் அரங்கத்தில் அங்கம் வகிக்கும் 10 தமிழ்க் கட்சிகளின் தலைவர்களும் பிரதிநிதிகளும் அரங்கத்தின் கூட்டத்தில் கலந்துகொள்ளவுள்ளனர்.

இதேவேளை இவ்வரங்கத்தில் பங்குபற்றுமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு விடுக்கப்பட்டுள்ள அழைப்புக் குறித்து கூறிய அவர், இதுவரை தமிழ்த் தேசியக் கூட்டமைப் பினரிடமிருந்து உத்தியோகபூர்வ பதில் வரவில்லையென்றும் சிவாஜிலிங்கம் தெரிவித்தார். (ச-5)

# இணக்க சபை ஊடான விசாரணை மதிப்புத் தொகை அதிகரிக்கப்பட்டுள்ளது

## நீதி அமைச்சு அறிவிப்பு

(கொழும்பு)

இணக்க சபை ஊடான விசாரணை மதிப்புத்தொகை அதிகரிப்புக்கு ஏற்ற வகையில் அந்த சபைகளுக்கு கூடுதல் அதிகாரம் வழங்கப்படவுள்ளது.அதன்படி இணக்க சபைகளின் ஊடாக இரண்டரை இலட்சம் ரூபாய் வரையிலான கொடுக்கல் வாங்கல் தொடர்பான பிரச்சினைகளுக்கு தீர்வினைப் பெற்றுக் கொள்ள முடியும்.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற விசேட கலந்துரையாடலின் பின்னர் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

இணக்க சபைகளின் மூலம் இதுவரை காலம் 25 ஆயிரம் ரூபாய் வரை சம்பந்தப்பட்ட பிணக்குகள் மாத்திரமே விசாரணை செய்யப்பட்டதுடன், தற்போது இணக்க சபைகளின் அதிகாரம் பரவலாக்கப்பட்டுள்ளன.முறைப்பாட்டாளரும் பிரதிவாதியும் தமது சார்பில் இணக்க சபைக்கு ஒவ்வொரு பிரதிநிதியைத் தெரிவு செய்ய முடியும்.

பிரதேச செயலகத்தில் நியமிக்கப்பட்டுள்ள இணக்க சபைத் தலைவர்களில் ஒருவரை தெரிவு செய்து கொள்ள முடியும்.இந்த மூவரின் தலைமையில் பிரச்சினை விசாரணை செய்யப்பட்டு தீர்வு பெற்றுக்கொடுக்கப்படும்.

பொதுமக்கள் நீதிமன்றம் சென்று அலைக்கழிவதைத் தவிர்க்கும் வகையில் இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதற்கென இணக்க சபை சட்டத்தில் திருத்தம் செய்யப்பட்டு நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக ஆராய்வதற்கென நீதி பிரதி அமைச்சர் ரெஜினோல்ட் குரே தலைமையில் நேற்றுமுன்தினம் காலை நீதியமைச்சில் விசேட கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது.

நீதியமைச்சின் செயலாளர் சுகத் கம்லத், இணக்க சபை ஆணைக்குழுவின் மேலதிக செயலாளர் திருமதி கமலினி சில்வா, பதில் செயலாளர் அரந்தர ஆகியோரும் இதில் கலந்து கொண்டனர். (ஸ்ரீ-2)

# பகிடிவதைக்கு எதிரான விதியை அமைச்சர் தவறாகப் பயன்படுத்துகிறார்

## அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் குற்றச்சாட்டு

உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க பகிடிவதைக் கெதிரான விதியை, மாணவர்களைப் பழிவாங்கும் வகையில் தவறாகப் பயன்படுத்தி வருகிறார் என அனைத்து பல்கலை கழக மாணவர் சம்மேளனத்தின் அமைப்பாளரான உதுல் பிரேமரட்ன தெரிவித்துள்ளார்.

பேராதனைப் பல்கலைக்கழக மாணவர்கள் 4 பேர் பொய்க் குற்றஞ்சாட்டப்பட்டு கடந்த வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டதாக நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் அவர் தெரிவித்தார்.

மாணவர்கள், அமைச்சரின் வருகைக்கு அமைதியான வகையில் எதிர்ப்புத் தெரிவித்தனர். இதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. தனியார் பல்கலைக்கழகங்களே முதலாவது காரணமாகும். ஏற்கனவே திறக்கப்பட்டு மாணவர்கள் பயன்படுத்திக் கொண்டிருக்கும் கணினி ஆய்வு கூடத்தை திறந்து வைப்பதாக கூறிக்கொண்டு அமைச்சர் வந்தமை இன்னொரு காரணமாகும்.

அமைச்சரின் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் மாணவர்களை சீண்டியதால்தான் குழப்பம் ஏற்பட்டது. மாணவர்கள் இதனால் தான் அமைச்சருக்கு எதிராகச் சத்தமிட்டனர். இதுதான் நடந்தது. மாணவர்கள் அமைச்சரை ஒருபோதும் மறித்து வைத்திருக்கவில்லை.

பேராதனை பல்கலைக்கழக மாணவர் சங்கத் தலைவர் டினுக செனவிரட்னவும் செய்தியாளர் மாநாட்டில் பேசினார். போலிக் குற்றச்சாட்டிலிருந்து கைதுசெய்யப்பட்ட தோழர்கள் விடுவிக்கப்படும் வரை எமது மாணவர்கள் சங்கப் போராட்டம் தொடரும். இன்று நாம் அடையாள வகுப்பு பகிஷ்கரிப்பை நடத்தவுள்ளோம். 4 மாணவர்கள் கைதுசெய்யப்பட்டதை கண்டித்து ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடைபெறும் என அவர் கூறினார். (ச-5)

## மீளாய்வுக்கூட்டம்

வடமராட்சி வலய பாடசாலைகளின் மாதாந்த மீளாய்வுக் கூட்டம் இன்று காலை 8.30 மணி தொடக்கம் மாலை 3.30 மணி வரை யாழ். புலோலி மெ.மி.த.க. பாடசாலை மண்டபத்தில் நடைபெறும்.

இதில் உலக உணவுத் திட்டம், அண்மையில் வெளியான தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை பெறுபேறுகள், ஆண்டிறுதிப் பரீட்சை, மீள ஆரம்பிக்கப்பட்ட பாடசாலை செயற்பாடுகள் மற்றும் தரமான கல்வி உள்ளீடு ஆகியவை தொடர்பாக இக்கூட்டத்தில் ஆராயப்படவுள்ளதாக வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராஜா அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2-19)

## சுவாமி விவேகானந்தரின் அருள்வாக்கு



பலவகை யோகங்களிலும் வைராக்கியம் அல்லது துறவே திருப்புமுனையாக கூறப்படுகின்றது.

நான் குறையுடையவன்.நான் ஆண் .நான் பெண். நான் பாவி .நான் மனம் .எனக்கு சிந்தனை உண்டு. நான் சிந்திக்கின்றேன். என்பவையெல்லாம் வெறும் மன மயக்கங்கள் .நீ சிந்திப்பதே இல்லை. உனக்கு உடல் ஒரு போதும் இருந்ததேயில்லை.

நீ குறையுடையவபனாக இருந்ததேயில்லை. நீங்கள் சுதந்திரர் என்று தைரியமாகக் கூறமுடியுமானால் இந்தக்கணமே நீங்கள் சுதந்திரர்கள் .

இந்து என்று சொல்லிக்கொள்ள ஏன் வெட்கப்படுகிறீர்கள்? உயர்ந்ததும் புகழ் மிக்கதுமான சொத்தல்லவா அது!

# ஐக்கிய தேசியக் கட்சிக்கு மீண்டெழும் யோகம் உண்டா?

1978இல் புதிய அரசியல் யாப்பை கொண்டு வந்த ஜே.ஆர்.ஜயவர்த்தன தனதும், தனது ஐக்கிய தேசியக் கட்சியினதும் நலன் கருதியே இந்த அரசியல் யாப்பை தயாரித்திருந்தார்.

தான் தயாரித்த அரசியல் யாப்பு தனது கட்சிக்கு உலை வைக்கும் என்று அவர் நினைத்தாரில்லை.

என்ன செய்வது, நாம் ஒன்று நினைக்க தெய்வம் ஒன்று நினைக்கின்றது.

ஜே.ஆர்.ஜயவர்த்தனவின் ஆட்சியில் அவலப்பட்டு ஆற்றாது துடித்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இன்று ஏதோ ஒரு வடிவில் ஆட்சிப்பீடம் ஏறி, ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களை தம்பக்கம் ஆட்கொண்டு அமைச்சுப் பதவிகளை அருளுகின்றது.

இதனால் ஐக்கிய தேசியக் கட்சியின் சமகாலம், எதிர்காலம் அனைத்தும் சூனியமாகிக் கொண்டிருப்பதை தெரிந்துகொள்ள முடிகின்றது.

இதிலிருந்து ஐக்கிய தேசியக் கட்சியை மீட்டெடுப்பதாக இருந்தால், தலைமைத்துவத்தை மாற்ற வேண்டும் என்பதே அந்தக் கட்சி விசுவாசிகளின் கருத்தாகும்.

அப்படியானால் ரணில் விக்கிரமசிங்க ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவத்தை விட்டுக் கொடுக்க வேண்டும்.

இதற்கு அவர் தயங்கும் ஒவ்வொரு கணமும் அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆளும் தரப்புடன் இணைந்து கொள்வதை தவிர்க்க முடியாது போகும்.

அதேநேரம் ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து ஆளும் தரப்பிற்கு தாவுவது மனச்சாட்சிக்கு உகந்ததல்ல என நினைப்போர் ஒன்றிணைந்து புதிய கட்சியை ஆரம்பிப்பர்.

அது ஐக்கிய தேசியக் கட்சிக்கு மாரகச் சனியாக அமையும். அப்போது ரணில் விக்கிரமசிங்க இயல்பாகவே அரசியலில் இருந்து ஒதுங்கிக் கொள்வார்.

ஆக, ஐக்கிய தேசியக் கட்சியை காப்பாற்ற வேண்டுமாயின், ரணில் விக்கிரமசிங்க தனது கட்சித் தலைமையை விட்டுக் கொடுத்துவிட்டு அந்தக் கட்சியின் ஆலோசகராக இருக்கலாம். கட்சித் தலைமையை கைவிடுவது சுயகௌரவத்திற்கு கேடு என நினைத்தால், ஐக்கிய தேசியக் கட்சிக்கு சமாதி கட்டியவர் ரணில் விக்கிரமசிங்க என்ற பழிச்சொல் வரலாற்றில் நீங்கா இடத்தை பிடித்துவிடும்.

நமக்கு ஆளும் பலன் இல்லை என்றால் ஆளும் பலன் கொண்டவரை ஆட்சிப் பீடமேற்றி அதன் மூலம் கௌரவமாக இருக்கும் வகையில் தலைவிதியை மாற்றியமைக்க சிந்திப்பது அறிவுசால்பட்டது.

அறிஞர் அண்ணாத்துரை மரணித்தபோது, நாவலர் நெடுஞ்செழியனை முதலமைச்சராக்க வேண்டும் என பலரும் விரும்பினர். ஆனால் கலைஞர் கருணாநிதி, நாவலர் நெடுஞ்செழியனைச் சந்தித்து அவரின் கையைப்பிடித்து “காலாக நினைத்துக்கொள்” நான் முதலமைச்சராக இருக்கிறேன். நீ துணையாக இரு என்றார்.

நாவலரின் சந்தர்ப்பம் நழுவியது. பின்பு எம்.ஜி. ஆரின் அதிமுகவில் இணைந்து நிதிஅமைச்சராக நாவலர் நெடுஞ்செழியன் பணியாற்றினார். எம்.ஜி. ஆர். உயிரிழக்க நெடுஞ்செழியனை முதலமைச்சராக்குங்கள் என்ற கருத்து மேலெழுந்தது.

விதி விடவில்லை. வீரப்பன் போன்றவர்கள் எம்.ஜி.ஆரின் மனைவி ஜானகி அம்மாளுக்கு உருவேற்றி அவரை முதலமைச்சராக்க, நெடுஞ்செழியன் செல்வி ஜெயலலிதாவின் பக்கம் சென்றார்.

ஒரு தடவை ஜெயலலிதா முதலமைச்சராக இருக்க முடியாது என நீதிமன்றம் உத்தரவிட, எங்கே நாவலர் நெடுஞ்செழியன் அவரை முதலமைச்சராக்குவோம் என்று வினவ, அவர் இறந்துவிட்டார் எனற பதில் வர ஓ.பன்னீர்ச் செல்வம் அந்தப் பதவியை பெற்றுக்கொண்டார்.

ரணில் விக்கிரமசிங்கவுக்கும் ஆட்சிப்பலன் வீழ்ச்சிதான்; என்ன செய்வது?



வலிகாமம் மேற்கு முன்பள்ளி ஆசிரியர் சங்கமும் வட்டுக்கோட்டை குடும்ப முன்பள்ளிகளும் இணைந்து நடத்திய கலைவிழாவும் கண்காட்சியும் நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்துகொண்ட வலிகாமம் கல்வி வலய ஆரம்பப் பிள்ளைக்கல்வி அபிவிருத்திப் பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளர் சி.குகனேசன் கண்காட்சியை திறந்து வைப்பதையும் விசேட கல்வி அலகு உதவிக் கல்விப் பணிப்பாளர் ந.முருகானந்தன் மற்றும் பிரதம விருந்தினர் ஆகியோர் உரையாற்றுவதையும் மாணவர்களின் கலைநிகழ்வையும் படங்களில் காணலாம்.

# அவுஸ்திரேலிய அணியுடனான டெஸ்ட் தொடரில் சாதிப்பேன்

## சுழற்பந்து வீச்சாளர் அமித் மிஸ்ரா நம்பிக்கை



(மும்பை)

"அவுஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் மீண்டும் ஒருமுறை சாதிப்பேன்" என இந்திய சுழற்பந்து வீச்சாளர் அமித் மிஸ்ரா நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இந்தியாவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள அவுஸ்திரேலிய அணி 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது. முதல் டெஸ்ட் நாளை மறுதினம் மொகாலியில் ஆரம்பமாகிறது.

கடந்த 2008 இல் இந்தியா சென்ற அவுஸ்திரேலிய அணி 4 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடியது. இதில் இந்தியா 2:0 என்ற கணக்கில் தொடரை வென்றது. இத்தொடரில் அறிமுகமான இந்திய சுழற்பந்து வீச்சாளர் அமித் மிஸ்ரா, 3 டெஸ்டில் மொத்தம் 14 விக்கெட்டுக்கள் வீழ்த்தினார்.

இது குறித்து அமித் மிஸ்ரா கூறியதா வது,

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரை மிகுந்த ஆவலுடன் எதிர்நோக்கியுள்ளேன் ஏனெனில் கடந்த 2008 இல் அவர்களுக்கு எதிராக சிறப்பாகப் பந்து வீசி விக்கெட் வேட்டை நடத்தினேன். இதேபோல் இம்முறையும் அதிக விக்கெட் வீழ்த்தி, இந்திய அணியின் வெற்றிக்குப் பக்க பலமாக இருப்பேன் என நம்புகிறேன். இதற்காக முழுவீச்சில் பயிற்சி மேற்கொண்டு வருகிறேன்.

இத்தொடர், டெஸ்ட் அரங்கில் "நம்பர்-1" இடத்திலுள்ள இந்திய அணிக்கு கடும் சவால் நிறைந்ததாக இருக்கும். ஏனெனில் அவுஸ்திரேலிய அணியின் வேகப் பந்து வீச்சு பலமாக உள்ளது. தவிர அனுபவ பொண்டிங், மைக்கெல் ஹசி, வோட்சன் உள்ளிட்டோர் துடுப்பாட்டத்தில் சாதிக்க அதிக வாய்ப்பு உள்ளது.


இருப்பினும் இவர்களை கடந்த முறை வீழ்த்தி இருப்பதால், அதே நம்பிக்கையுடன் செயற்படும் பட்சத்தில் ,மீண்டும் கோப்பை வென்று சாதிக்கலாம்.

இத்தொடரில் சாதிக்க இந்தியப் பந்து வீச்சாளர்கள் கடுமையாகப் போராட வேண்டும். ஹர்பஜன், சாகிர், இஷாந்த் உள்ளிட்ட திறமையான பந்து வீச்சாளர்கள் இருப்பதால் எளிதில் வெற்றிபெற வாய்ப்புள்ளது. துடுப்பாட்டத்தில் தோனி, சச்சின், சேவாக் உள்ளிட்டோர் கைகொடுப்பார்கள் என நம்புகிறேன்.

சுழற்பந்து வீச்சுக் குறித்து முன்னாள் அணித் தலைவர் அனில் கும்ளே மற்றும் தேர்வுக் குழு உறுப்பினர் நரேந்திர கிர்வானி நிறைய "டிப்ஸ்" வழங்குகின்றனர். இவர்களது ஊக்கம் போட்டியில் சாதிக்க உதவுகிறது. இவ்வாறு அமித் மிஸ்ரா கூறினார்.

# அடுத்த முறை அனைத்து வீரர்களும் ஏலம்; இது எங்களுக்கு உணர்ச்சிமயமான தருணம்

## சம்பியனான சென்னை அணித் தலைவர் தோனி விபரிப்பு



சம்பியன்ஸ் லீக் கிரிக்கெட் போட்டியில் சம்பியனான பின்னர் பேட்டியளித்த சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் தலைவர் தோனி, அடுத்த முறை அனைத்து வீரர்களும் ஏலம் விடப்படுவதால் ,கடைசியாக இணைந்திருக்கும் இந்தத் தருணம் உணர்ச்சிமயமானது என்று தெரிவித்தார்.

தென்னாபிரிக்காவில் நடந்து வந்த 10 அணிகள் பங்கேற்ற 2 ஆவது சம்பியன்ஸ் லீக் 'இருபது -20' கிரிக்கெட் தொடர் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவுடன் முடிபடைந்தது. இறுதிப்போட்டியில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணி 8 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் தென்னாபிரிக்காவைச் சேர்ந்த வாரியர்ஸ் அணியை வீழ்த்தி சம்பியனானது.

இந்த ஆட்டத்தில் முதலில் ஆடிய வாரியர்ஸ் 20 ஓவர்களில் 7 விக்கெட் இழப்புக்கு 128 ஓட்டங்களையே எடுத்தது. சுழற்பந்து வீச்சாளர் முரளிதரன் 3 விக்கெட்டுகளும், அஷ்வின் 2 விக்கெட்டுகளும் சாய்த்தனர். பின்னர் ஆடிய சென்னை சுப்பர் கிங்ஸ் முரளி விஜய்(58 ஓட்டங்கள்), மைக் ஹஸி(51 ஓட்டங்கள்) அரைச்சதத்தின் உதவியுடன் 2 விக்கெட் மட்டுமே இழந்த நிலையில் 19 ஓவர்களில் இலக்கை எட்டியது. சம்பியனான சென்னை அணிக்கு ரூ.12 கோடியும், 2 ஆவது இடம் பிடித்த வாரியர்ஸ் அணிக்கு ரூ.6 கோடியும் பரிசுத் தொகையாகக் கிடைத்தன.

**தோனி நெகிழ்ச்சி**

வெற்றிக்குப் பின்னர் சுப்பர் கிங்ஸ் அணியின் தலைவர் தோனி கூறியதாவது,

இது எங்களுக்கு மகிழ்ச்சிமயமான மிகப் பெரிய தருணம். ஒரு குழுவாக நாங்கள் விளையாடிய கடைசிப் போட்டி இதுவாகும். துரதிர்ஷ்டமாக அடுத்தமுறை அனைத்து ஐ.பி.எல். வீரர்களும் ஏலத்தில் விடப்பட இருக்கிறார்கள். எனவே சில வீரர்கள் எங்களுடன் நீண்ட காலம் இருக்கமாட்டார்கள் என்பது தெரியும். நாங்கள் இணைந்திருக்கும் கடைசிப் போட்டி என்பதால் உண்மையிலேயே இது எங்களுக்கு உணர்ச்சி மயமான தருணமாகும்.

இந்தமுறை ஐ.பி.எல். கோப்பையை வென்றோம். அதன் தொடர்ச்சியாக இப்போது சம்பியன்ஸ் லீக் 'இருபது-20' கிரிக்கெட்டிலும் சம்பியனாகியிருக்கிறோம். இதைவிட சிறப்பாக அமைய முடியாது.

அதிர்ஷ்டவசமாக நாங்கள் எங்[illegible] அணியில் சில வெளிநாட்டு வீரர்களைப் பெற்றோம். பிளமிங், சுப்பர் பயிற்சியாளராக செயற்பட்டுள்ளார்.

ஹைடன் மற்றும் மைக்கெல் ஹஸி இருவரும் இளம் வீரர்களுக்கு தொடர்ந்து உதவிக்கரமாக இருந்தனர் எனத் தோனி தெரிவித்தார்.

# விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர்கள் வட மாகாணத்துக்கு நியமனம்

## நேர்முகப் பரீட்சையில் கடும் போட்டி

(யாழ்ப்பாணம்)


வடமாகாணத்திற்கான விளையாட்டுத் துறையை அபிவிருத்தி செய்யும் முகமாக விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர்கள் நியமனம் செய்யப்படவுள்ளனர்.

வடமாகாண கல்விப் பண்பாட்டு அலுவல்கள் மற்றும் விளையாட்டுத் திணைக்களம் மேற்கொண்ட நடவடிக்கைகளின் பய னாக வடமாகாணத்திற்கான விளையாட்டு பயிற்றுவிப்பாளர்களை நியமனம் செய்வதற்கான நேர்முகப் பரீட்சை கடந்த திங்கட்கிழமை 27ஆம் திகதி திருகோணமலையில் உள்ள விளையாட்டுத் திணைக்கள அலுவலகத்தில் நடைபெற்றுள்ளது. இந்நேர்முகப் பரீட்சையில் வடமாகாணத்தைச் சேர்ந்த விளையாட்டு அலுவலர்கள் கலந்து கொண்டுள்ளார்கள். குறிப்பாக கரப்பந்தாட்டம், மெய்வன்மை, வலைப்பந்தாட்டம், கிரிக்கெட், கால்பந்தாட்டம், கபடி ஆகிய விளையாட்டுக்களுக்கான பயிற்று விப்பாளர்கள் முதல் கட்டமாக தெரிவு செய்யப்படவுள்ளார்கள்.

இந்த நேர்முகப் பரீட்சைக்குச் சென்றவர்களில் பெரும்பான்மையான விளையாட்டு அலுவலர்கள் ஒரே காலத்தில் நியமனம் பெற்றவர்கள் என்பதினால் பயிற்றுவிப் பாளர்கள் நியமனத்தில் கடுமையான போட்டி காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

கடந்த பல வருட கால இடைவெளிக்குப் பின்னர் விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர்கள் நியமிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# முதலாவது டெஸ்ட் போட்டியில் ஹர்பஜன் விளையாடுவதில் சிக்கல்!



(மொகாலி)

அவுஸ்திரேலிய அணியுடனான முதலாவது டெஸ்டில் இந்திய சுழற்பந்து வீச்சாளர் ஹர்பஜன் சிங் விளையாடுவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

பொண்டிங் தலைமையிலான அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணி 2 டெஸ்ட் மற்றும் 3 ஒருநாள் போட்டிகளில் விளையாடுவதற்காக இந்தியாவுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளது.

இந்தியா-அவுஸ்திரேலியா அணிகள் மோதும் முதல் டெஸ்ட் போட்டி நாளை மறுதினம் மொகாலியில் ஆரம்பமாகிறது. இந்தப் போட்டியில் இந்திய அணியின் முன்னணி சுழற்பந்து வீரர் ஹர்பஜன் சிங் ஆடுவது சந்தேகம்.

நேற்று முன்தினம் நடந்த பயிற்சியின் போது அவருக்குப் பின் காலின் தசைப் பகுதியில் காயம் ஏற்பட்டது.

எம்.ஆர்.ஐ. ஸ்கேன் எடுக்கப்பட்டது. சில தினங்கள் ஓய்வில் இருக்குமாறு டாக்டர்கள் வலியுறுத்தி இருப்பதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

இதன் காரணமாக ஹர்பஜன்சிங் முதல் டெஸ்டில் ஆடுவதற்கான வாய்ப்பு இல்லை என்று கூறப்படுகிறது.

அமித் மிஸ்ரா, ஓஜா ஆகிய சுழற்பந்து வீரர்களும் அணியில் உள்ளனர்.

ஹர்பஜன் ஆடாத பட்சத்தில் இரு வருக்கும் 11 பேர் கொண்ட அணியில் வாய்ப்புக் கிடைக்கும் என தகவல்கள் வெளியாகி உள்ளன.



அரியாலையில் நடைபெற்ற ஏர் பூட்டல் விழாவில் கலந்து கொண்ட பிரமுகர்களையும் விவசாயிகளையும் மேல் உள்ள படங்களிலும் பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, யாழ்.அரச அதிபர் இமெல்டா சுகுமார் ஆகியோர் விவசாயிகளுக்கு உபகரணங்கள் வழங்குவதையும் அமைச்சர் மற்றும் ஆளுநர் ஏர் பூட்டி உழுவதையும் படங்களில் காணலாம்.

# கைத்தொழில் முயற்சிகளை மேம்படுத்த முன்னுரிமை!

(யாழ்ப்பாணம்)

மஹிந்த சிந்தனை தொலை நோக்கிற்கு அமைய கைத்தொழில் முயற்சிகளை மேம்படுத்துவதற்கு முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படவிருப்பதால் ஏதேனும் காரணத்தால் தற்சமயம் செயலிழந்துள்ள, தொடர்ந்து நடத்த முடியாதுள்ள அல்லது சீர்குலைந்துள்ள தேசியக் கைத்தொழில்கள் தொடர்பான தகவல்களைச் சேகரிக்கும் வேலைத்திட்டம் ஒன்றை இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபை ஆரம்பித்துள்ளது.

இந்த வேலைத்திட்டத்தில் பங்குகொள்ள விரும்பும் கைத்தொழில் முயற்சியாளர்கள் கீழ்காணும் மாவட்ட அலுவலகங்களிலிருந்து விண்ணப்பப்படிவங்களைப் பெற்று உரிய விபரங்களை இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபைக்கு சமர்ப்பிக்கும்படி கேட்கப்படுகிறார்கள். விண்ணப்பப்படிவம் பெறுவதற்கு ரூபாய் 200 செலுத்த வேண்டும்.

விண்ணப்பப்படிவங்கள் அக்டோபர் 8 ஆம் திகதி வரை விநியோகிக்கப்படும். முறைப்படி நிரப்பப்பட்ட படிவங்களை அக்டோபர் 15 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட கைத்தொழிலாளர்,

யாழ்ப்பாண மாவட்ட அலுவலகம், கைத்தொழில் அபிவிருத்திச் சபை, தேசிய வீடமைப்புக் கட்டடம், சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். (021-222 2421)

அல்லது

வவுனியா மாவட்ட அலுவலகம், கைத்தொழில் அபிவிருத்திச் சபை, கச்சேரி, வவுனியா. (024 222 2274)

என்ற முகவரியில் பெற்றுக்கொள் முடியும். (ச)

# விண்ணப்பம் கோரல்

(கொழும்பு)

சிறுவர் அபிவிருத்தி மகளிர் விவகார அமைச்சில் வெற்றிடமாகவுள்ள மகளிர் அபிவிருத்தி அலுவலர் பதவிக்கு தகைமை பெற்ற இலங்கைப் பிரஜைகளான பெண்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பதாரி அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பட்டம் பெற்றிருத்தல் வேண்டும். விண்ணப்பம் கையேற்கும் இறுதித் திகதிக்கு 18 வயதிற்கு குறையாதவராகவும் 45 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

தயார் செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் 2010.10.18 ஆம் திகதிக்கு முன்னர் செயலாளர் சிறுவர் அபிவிருத்தி, மகளிர் விவகார அமைச்சு இல.175 ஏ, நாவலை வீதி, நுகேகொடை என்ற முகவரிக்குப் பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும்.

விண்ணப்பங்களை இட்டு அனுப்பும் கடித உறையில் இடதுபக்க மேல் மூலையில் மகளிர் அபிவிருத்தி அலுவலர் பதவிக்கான விண்ணப்பம் -2010 எனக் குறிப்பிடல் வேண்டும்.

இது தொடர்பிலான மேலதிக விபரங்களை வலம்புரிக் காரியாலயத்தில் பார்வையிட முடியும்.

❖ ❖ ❖

இளைஞர் அலுவல்கள் அமைச்சின் கீழ் இயங்கி வரும் சிறுதொழில் முயற்சிகள் அபிவிருத்திப் பிரிவில் பணிபுரியும் உதவிப் பணிப்பாளர் (திணைக்களம் சார்) அலுவல்களுக்கான பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் கொழும்பில் நடத்தப்படும் வினைத்திறன் காண் தடைப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் பதிவுத் தபால் மூலம் 2010.11.01 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம் (ஒழுங்குபடுத்தல் மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளை), பொலவத்த, பத்திரமுல்ல என்ற முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

விண்ணப்பப்பத்தை அனுப்பும் தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் உதவிப் பணிப்பாளர் (திணைக்களம் சார்) அலுவலர்களுக்கான வினைத்திறன் காண் தடை நிலைப் பரீட்சை எனத் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும். (ச-3)

# புலமைப் பரிசில் பரீட்சை முன்னிலைப் பெறுபேறு

**மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம்**

அச்சுதன் கீர்த்தனன் (185- மாவட்ட நிலை 2), சிறிகாந்தன் அருள்ராஜ் (168), ஜெயரூபன் குணரூபா (161), சிறிதரன் கீர்த்தனா (157), ரவிச்சந்திரன் லக்ஷிகா (156), கோடீஸ்வரன் மலரவன் (153), சண்முகம் பிரசாந் (149), மாணிக்கராசா சபிதா (146), தம்பிராஜா தனுஜன் (143). (ச)

# வெள்ளைக் கொடி வழக்கு பொன்சேகா நேற்று ஆஜரானார்

வெள்ளைக் கொடி சம்பவம் தொடர்பில் இரண்டாவது நாளாக மேல் நீதிமன்றத்தில் நேற்று நடைபெற்ற வழக்கு விசாரணை அடுத்த மாதம் 4 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

வெள்ளைக் கொடி சம்பவம் தொடர்பில் நேற்று முன்தினம் நீதிமன்றத்திற்குச் சமுகமளிக்காத முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் சரத் பொன்சேகா கொட்டும் மழையிலும் நேற்று நீதிமன்றத்தில் ஆஜராகினார்.

இதன்போது சரத் பொன்சேகா தரப்பில் ஆஜரான சட்டத்தரணி நலின் ஹெதுஹெட்டி, சரத் பொன்சேகா சுகவீனமுற்றிருப்பதாகவும் இதனாலேயே அவரினால் நேற்று முன்தினம் விசாரணைக்கு சமுகமளிக்க முடியாமல் போனதாகவும் குறிப்பிட்டார்.

இதனைக் கருத்தில் கொண்ட நீதிபதி வழக்கினை எதிர்வரும் 4 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

இதேவேளை அடுத்த வழக்கு விசாரணையின்போது சரத் பொன்சேகாவிடம் பேட்டி கண்ட ஊடகவியலாளரான பெட்ரிக்கா ஜன்ஸ் மற்றும் அந்த ஊடக நிறுவனத்தின் உரிமையாளர் லால் விக்கிரமதுங்க ஆகியோரின் சாட்சிகள் மாத்திரமே விசாரிக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார். (ச-5)

# அரசியல் ஆய்வரங்கு

(யாழ்ப்பாணம்)

அரசியல் அமைப்பின் பதின்மூன்றாவது திருத்தமும் தமிழர்களும் என்ற பொருளில் அரசியல் ஆய்வாளர் அ.யோதிலிங்கம் நிகழ்த்தும் அரங்கு எதிர்வரும் ஒக்டோபர் 3 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை 3.30 மணிக்கு இல. 148 டேவிட் வீதி, யாழ்ப்பாணத்ததில் அமைந்துள்ள திருமறைக்கலாமன்றத்தின் கலைத்துவ மண்டபத்தில் இடம்பெறும். (ந)

# பிரத்தியேக வகுப்புக்களைத் தடை செய்வது தொடர்பில் அரசு முடிபெடுக்கவில்லை

## பிரதமர் தெரிவிப்பு

(கொழும்பு)

ஞாயிறு தினங்களில் பிரத்தியேக வகுப்புக்களைத் தடை செய்வது தொடர்பாக அரசு எவ்வித முடிபையும் இன்னம் எடுக்கவில்லை என்று பிரதமர் டி.எம்.ஜயரத்ண தெரிவித்தார்.

கண்டி சுஜீஸ் ஹோட்டலில் ஆயிரம் பிக்குகளுக்கு அன்னதானம் வழங்கும் வைபவத்திலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

ஞாயிறு தினங்களில் மாணவர்கள் பிரத்தியேக வகுப்புகளுக்குச் செல்வதனால் பௌத்த அறநெறி வகுப்புக்கள் (தஹம் பாசல்) தடைப்படுவதையும் அதைத் தடை செய்வது தொடர்பாக அரசின் நிலைப்பாடு என்ன என்று ஒரு மதகுரு கேட்டபோதே தமது உரையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

பௌத்த மதகுருக்களுக்கு அன்னதானம் மற்றும் வஸ்திரம் என்பன பிரதமரால் வழங்கி வைக்கப்பட்டன. (ச-5)

# பல்கலைக்கழக மாணவர்கள் மகாநாயக்கரைச் சந்தித்தனர்

(கொழும்பு)


பேராதனைப் பல்கலைக்கழக மாணவர்கள் மத்தியில் தற்போது ஏற்பட்டுள்ள பதற்ற நிலையைப் பற்றி மகாசங்கத்தினரின் ஆலோசனையைப் பெறுவதற்காக பேராதனைப் பல்கலைக்கழக மாணவர்கள் குழு ஒன்று நேற்று மாலை கண்டி அஸ்கிரிய மற்றும் மல்வத்தைப் பீடாதிபதிகளைச் சந்தித்து தமது நிலைமையை விளக்கிக் கூறியுள்ளனர்.

பேராதனைப் பல்கலைககழக மாணவர்கள் நான்கு பேரை விளக்க மறியலில் வைத்திருப்பது சம்பந்தமாகவும் இங்கு மகாநாயக்க தேரரிடம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இங்கு கருத்துத் தெரிவித்த அஸ்கிரிய மற்றும் மல்வத்த பீடாதிபதிகள் நீதிமன்றத்தில் வழக்கு ஒன்று இருப்பதைக் கருத்தில் கொள்வதுடன் மாணவர்களின் கோரிக்கைகளை சம்பந்தப்பட்டவர்களுக்குத் தெரியப்படுத்துவதாகவும் அவர் தெரிவித்தார். (ச-3,5)

# தராதரமற்ற வெளிவாரி பட்டப்படிப்பை வழங்கும் பல்கலை. மீது நடவடிக்கை

## மானியங்கள் ஆணைக்குழுத் தலைவர் வலம்புரிக்கு பேட்டி



(கொழும்பு)

தராதரமற்ற முறையில் வெளிவாரி பட்டப்படிப்புக்களை வழங்கும் பல்கலைக்கழகங்களின் அனுமதிகள் தடைசெய்யப்படும் என பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் காமினி சமரநாயக்க வலம்புரிக்குத் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தகவல் தருகையில்,

நாட்டில் 11 பல்கலைக் கழகங்கள் வெளிவாரிப்பட்டப்படிப்புக்களை வழங்குகின்றன. எனினும் சில பல்கலைக் கழகங்களினால் வழங்கப்படும் வெளிவாரிப் பட்டப்படிப்புக்கள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் ஏற்றுக்கொள்ளக் கூடியவையல்ல என முறைப்பாடு கிடைத்துள்ளது.

இது தொடர்பில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் தராதர மதிப்பீட்டுக் குழு விசாரணைகளை மேற்கொண்டபின் புதிய நடைமுறையை வெளிவாரிப்பட்டப்படிப்புக்களை வழங்கும் பல்கலைக்கழகங்களுக்கு அறிவிக்கவுள்ளது.

இதற்கான சுற்று நிருபம் ஒக்ரோபர் மாத இறுதியில் வழங்கப்படும். குறிப்பாக வெளிவாரிப் பட்டப்படிப்புக்களை வழங்கும் சில பல்கலைக்கழகங்களில் அனுமதி பெற்ற பின்பு மாணவர்கள் சிலர் ஒரு இலட்சம் வரையிலான பணம் செலுத்தி பட்டம் பெற்றுள்ளனர். இது நாட்டுக்கு பாரிய பிரச்சினையை ஏற்படுத்தும்.

சிறந்த பட்டதாரிகளை உருவாக்க முடியாது. அத்துடன் உள்வாரி பட்டப்படிப்புக்களுக்கு அமைவாக ஆய்வு ஒப்படைகள் வெளிவாரிப்பட்டப்படிப்புக்களில் பெறப்படுவதில்லை.

எனவே எதிர் காலத்தில் வெளிவாரிப் பட்டப்படிப்புக்களை வழங்கும் பல்கலைக்கழகங்கள் கடைபிடிக்க வேண்டிய நடைமுறைகள் தொடர்பில் அடுத்தமாத இறுதியில் சுற்று நிருபம் ஒன்று வழங்கப்படும்.

அத்துடன் உள்வாரிப் பட்டப்படிப்புகளுக்கு அமைவாக ஆய்வு ஒப்படைகளை வெளிவாரிப் பட்டப்படிப்புக்களில் பெறப்படுவதில்லை. எனவே எதிர்காலத்தில் வெளிவாரிப்பட்டப்படிப்புக்களை வழங்கும் பல்கலைக்கழகங்கள் கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகள் தொடர்பில் அடுத்தமாத இறுதியில் சுற்று நிருபம் ஒன்று வழங்கப்படும்.

அத்துடன் வெளிவாரிப்பட்டப்படிப்புகளுக்கான அனுமதியை பெறுவதற்கு க.பொ.த. உயர்தர பரீட்சை பெறுபேற்றின் பிரகாரம் வெட்டுப்புள்ளி (இசட் கோர் அடிப்படையில்) ஒன்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவால் நிர்ணயிப்பது தொடர்பில் ஆராயப்படுகிறது.

பல பல்கலைக்கழககங்கள் வெளிநாட்டு முறையிலான இணைய வழி கற்கை நெறிகளை மேற்கொள்கின்றன. இலங்கையில் 2020ஆம் ஆண்டு வீட்டில் இருந்தவாறு ஒன்லைன் முறையில் பட்டப்படிப்பை மேற்கொள்ளும் வசதிகள் செய்யப்படும்.

இவ்வாறான நிலையில் தராதரமற்ற கற்கை நெறிகளை மேற்கொள்ள முடியாது என அவர் கூறினார். (ச-5)

## வெடிகுண்டு...

தமிழர் பகுதிகளில் வீதிகள் அமைக்கவும் இதர அடித்தள கட்டுமானப் பணிகளுக்காகவும் சீனாவிலிருந்து தருவிக்கப்பட்டவையாகும்.

அவர்களுடன் கொண்டுவரப்பட்ட வெடிமருந்துகளை வெளியில் வைத்தால் அது யாருடைய கையிலாவது சிக்கினால் ஆபத்து என்று பொலிஸ் நிலையங்களில், வளாகங்களில், பொலிஸ் நிலையங்களுக்கு அருகில் என்று வெடிமருந்துகளையும் வெடித்திரிகளையும் பெட்டிபெட்டியாக வைத்திருக்கின்றனர்.

வெடி மருந்துகளையும் வெடித்திரிகளையும் உரிய பாதுகாப்புடன் நல்ல பக்குவத்தில் வைத்திருக்க வேண்டும். அந்தப் பகுதியில் தீவிபத்து நேராமல் பார்த்துக் கொள்ள வேண்டும். உரிய காலத்தில் அவற்றை ஆய் வு செய்ய வேண்டும். விரைவில் பயன்படுத்திவிட வேண்டும் அல்லது அப்புறப்படுத்திவிட வேண்டும். இவை எதையும் செய்யாமல் திருட்டு போகாமல் இருந்தால்சரி என்று பொலிஸ் நிலையங்களுக்கு அருகில் வைத்திருக்கின்றனர்.

எனவே வீதி போடுவதற்காகக் கொண்டுவரப்பட்ட இந்த வெடிமருந்துகளும் இதர சாதனங்களும் அதன் பிறகு ஏறெடுத்தும் பார்க்காமல் இருக்கின்றன. இவை வெடித்தால் பொலிஸ் நிலையத்தில் இருப்பவர்களுக்கும் அருகில் வசிப் பவர்களுக்கும் உயிரிழப்பை ஏற்படுத்தி விடும் என்பதை கரடியனாறு சம்பவமே உணர்த்துகிறது. அங்கே வைத்திருந்தது மிகக்குறைந்த அளவுதான். அதுவே இந்த அளவுக்கு உயிர் பலிவாங்கியது என்றால் அதைப் போல பலமடங்கு வைத்திருக்கும் பொலிஸ் நிலையங்களும் அதைச் சுற்றியுள்ள கட்டடங்களும்தப்புமா என்ற கேள்விக்குறி எழுந்திருக்கிறது. மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ளபல பொலிஸ்நிலையங்களுக்கு அருகில் இப்படி வெடி மருந்துக்கள் குவிக்கப்பட்டுள்ளன. (ச-5)

## வெடிபொருள் அபாயம் உள்ள...

யத்தை பாடசாலை நிர்வாகத்திடம் கையளிக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இது தொடர்பில் அவர் மேலும் தனது உரையில் தெரிவித்ததாவது,

வலி. வடக்கு உயர்பாதுகாப்பு வலயத்தில் அமைந்துள்ள மாவிட்டபுரம் பகுதியில் நேற்று முன்தினம் மக்களை மீள்குடியமர்த்துவதற்கான கண்ணி வெடியகற்றும் பணியில் ஈடுபட்டிருந்த வேளை ஒரு படைவீரர் பலியாகியும் இருவர் காயமும் அடைந்தனர்.

இது போன்ற சம்பவம் மக்களை மீள்குடியேற்றியபின் நிகழ்வதற்கு நான் அனுமதிக்க மாட்டேன். இதனால் மக்கள் பாதிக்கப்படக் கூடாது என்பதில் உறுதியாகவுள்ளேன். எனவே மக்களை மீள்குடியமர்த்துவதற்குமுன் சகல இடங்களிலும் கண்ணிவெடிகள் அகற்றப் படும்.

இந் நடவடிக்கைகளில் படையினருடன் வெளிநாட்டு கண்ணிவெடி அகற்றும் நிறுவனங்களையும் இணைத்துக்கொள்ளவுள்ளோம். இதே போன்றுதான் வயாவிளான் மத்திய மகாவித்தியாலய சுற்றப்புறங்களிலும் கண்ணிவெடிகள் அகற்றப்பட்டு விரைவில் பாடசாலை ஆரம்பிக்கப்படும். மாணவர்கள் பாடசாலைக்கு எதுவித தடைகளுமின்றி வந்து கல்விகற்பதற்கான சகல ஏற்பாடுகளும் செய்து கொடுக்கப்படும்.

இது போன்ற மத்திய மகாவித்தியாலயம் ஒன்றிலேயே நானும் கல்விகற்றேன். இன்று இராணுவ சேவையில் இணைந்து மக்களுக்கு சேவையாற்றுகின்றேன்.

இது போன்று இங்கு கல்விகற்கும் மாணவர்களும் படையில் இணைந்து உதவி புரிய வேண்டும் என யாழ்.கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்க தெரிவித்தார். (ச-5)

## 15 வருடங்களுக்குப்...

அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் மற்றும் யாழ்.கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்க ஆகியோர் அதிதிகளாக கலந்து கொண்டனர்.

இதில் உரையாற்றிய வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி, ஆசியாவில் ஆச்சரியமிக்க நாடாக இலங்கையை மாற்றும் ஜனாதிபதியின் திட்டத்தில் நடைபெறும் மீள்குடியமர்வுகளில் இதுவும் ஒன்று. தற்போது வடக்கில் 120 ஆயிரம் ஏக்கர் வயல் நிலங்கள் மீளக்கையளிக்கப்பட்டு நெற்செய்கை இடம்பெறவுள்ளது.

இதில் யாழ்ப்பாணத்தில் இதுவரை 909 ஏக்கர் காணிகள் மீளக்கையளிக்கப்பட்டுள்ளன என அவர் குறிப்பிட்டார்.

அத்துடன் நிகழ்வில் உரையாற்றிய பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, 400 ஏக்கர் வயல் காணிகள் இன்று (நேற்று) மக்களிடம் கையளிக்கப்படுகிறது.

பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டு இவ்வாறு தொடர்ந்தும் மீதமுள்ள காணிகள் மக்களிடம் கையளிக்கப்படும்.

கிடைக்கும் நல்ல சந்தர்ப்பங்களை சரியாகப்பயன்படுத்தி கிடைப்பவற்றை நாம் பெற்றுக் கொள்ள வேண்டும் என்றார்.

அரியாலைக் கிழக்கில் யுத்த நடவடிக்கை காரணமாக கடந்த 15 வருடங்களாக இப் பகுதியில் மக்கள் அனுமதிக்கப்படாத நிலையில் நேற்று 400 ஏக்கர் வயல் நிலங்கள் மக்களிடம் கையளிக்கப்பட்டன.

அத்துடன் இரு சக்கர உழவு இயந்திரம், உழவு இயந்திரங்கள், நீர் பம்பிகள், உரவகைகள், விதை நெல் என்பனவும் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டன. (எ-5)

## அமைச்சர்...

அகழப்படுவதை தடுத்து நிறுத்தவும் என அமைச்சர் பசில் நேற்று யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்யவிருந்தார். எனினும் அவரது விஜயம் இரத்தான காரணம் குறிப்பிடப்படாமல் இரத்துச்செய்யப்பட்டது. இதுகுறித்து விழா ஏற் பாட்டுக் குழுவிற்கு அறிவிக்கப்பட்டதாகவும் குறிப்பிடப்பட்டது. (ச-5)

## வயாவிளான் மத்திய...

ஜி.ஏ.சந்திரசிறி, யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார், யாழ். படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்க ஆகியோர் கலந்து கொண்டு சம்பிரதாய பூர்வமாக பாடசாலையை ஆரம்பித்து வைத்தனர்.

அத்துடன் வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன், யாழ்.மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் வி.ரி. செல்வரட்ணம், வலயக் கல்விப் பணிப்பாளர்கள், கோட்டக் கல்வி அதிகாரிகள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம் 1946ஆம் ஆண்டு ஜனவரி 16ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. இது 27 ஏக்கர் நிலப்பரப்பில் அமைக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் இலவசக் கல்வியின் தந்தை கலாநிதி சி.டபிள்யூ.டபிள்யூ.கன்னங்கராவினால் கொண்டுவரப்பட்டு நாடு பூராகவும் சிறந்த சமூகத்தையும் தலைமைத்து வத்தையும் கட்டியெழுப்புவதற்காக 54 மத்திய மகா வித்தியாலயங்களை நிறுவும் திட்டத்தில் யாழ். மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 4 பாடசாலைகளில் வயாவிளான் மத்திய மகாவித்தியாலயமும் அடங்கும்.

5ஆம் தரப்பரீட்சையில் சித்தியடையும் மாணவர்கள் தமது கல்வியை இப்பாடசாலையில் தொடர்வதன் மூலம் இலவச தங்குமிட வசதி, இலவச உணவு என்பவற்றை பெற்றுக் கொள்ள முடியும்.

தொடர்ந்து 1990ஆம் ஆண்டு ஏற்பட்ட இடப் பெயர்வினால் இத்திட்டம் கைவிடப்பட்டது. இந்நிலையில் 1998ஆம் ஆண்டு நவோதயா பாடசாலைத் திட்டத்தில் இப் பாடசாலை இணைத்துக் கொள்ளப்பட்டது.

தற்போது மகிந்த சிந்தனையில் உள்ளவாறு நாட்டில் ஆயிரம் பாடசாலை அபிவிருத்தி செய்யும் திட்டத்தில் இணைக்கப்பட்டுள்ளது.

இதனால் எதிர்வரும் 5 வருடங்களிற்குள் 60 மில்லியன் ரூபாய் செலவில் அபிவிருத்தி செய்யப்படவுள்ளது.

வயாவிளான் மத்திய மகாவித்தியாலயம் உரும்பிராயில் தனியார் காணியொன்றில் இயங்கி வருகின்றபோதும் ஆயிரத்து 200 இற்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு கல்வியை வழங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை இப்பாடசாலையில் கட்டிடங்கள் புனரமைக்கப்பட வேண்டியுள்ளமையினால் கற்பித்தல் நடவடிக்கைகள் ஆரம்பமாவதில் தாமதம் ஏற்படும் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-5)

## விடுதலைப்புலிகள்...

கடந்த மே. 14ஆம் திகதி இது தொடர்பான அரசாணை வெளியிடப்பட்டது. அந்த ஆணை, நடுவர் மன்றத்தில் உறுதி செய்யப்பட வேண்டும் என்பது நடைமுறை.

அதற்காக கடந்த 21ஆம் திகதி நடந்த விசாரணையில் வைகோ ஆஜரானார். அதற்குத் தமிழக அரசு வழக்கறிஞர் தனஞ்ஜயன் ஆட்சேபம் தெரிவித்தார். அதனையடுத்து முறைப்படி வழக்கறிஞர் மூலம் ஆஜராகுமாறு நீதிபதி விக்ரம்ஜித் சென் வைகோவுக்கு உத்தரவிட்டார்.

அதையடுத்து கடந்த 24ஆம் திகதி விசாரணை நடந்தபோது வைகோ முறைப்படி மனுத்தாக்கல் செய்தார். ஆனால் தனி வழக்கறிஞரை வைக்காமல் அவரே வாதாடினார்.

அதையடுத்து புலிகள் சார்பாக வைகோ ஆஜராக முடியுமா என்பது குறித்த தீர்ப்பை ஒத்திவைப்பதாக தெரிவித்த நீதிபதி விக்கிரம்ஜித் சென் நேற்று முன்தினம் அந்த உத்தரவை வழங்கினார். அதன்படி சட்டவிரோத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டத்தின் கீழ் விடுதலைப் புலிகள் சார்பில் ஆஜராக வைகோவுக்கு உரிமையில்லை என்று தீர்ப்பளித்துள்ளார்.

அதே நேரத்தில் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மீதான தடையை நீடிப்பது தொடர்பான அரசாணை குறித்து அடுத்த விசாரணை சென்னையில் அக்டோபர் 5ஆம் திகதி நடைபெறவுள்ளது. (ச-5)

## மீள்குடியேற்றத்திற்கான...

ஒன்றில் இடம்பெற்றது.

இதில் உரையாற்றும் போது அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

வலிகாமம் வடக்கில் இடம்பெறும் இந்தப் பாடசாலை கையளிக்கும் நிகழ்வானது வலி. வடக்குக்கான மீள்குடியேற்றத்தின் ஆரம்பக் கட்ட நடவடிக்கை. இதன் தொடர் நடவடிக்கையாக ஏனைய செயற்பாடுகள் மேற்கொள்ளப் ப டும்.

ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ள இப் பாடசாலை தொடர்ந்து இங்கு இயங்குவதற்குத் தேவையான சகல நடவடிக்கைகளும் விரைவில் மேற்கொள்ளப்படும். இதற்கான அனுமதியை யாழ். மாவட்ட கட்டளைத்தளபதி மகிந்த ஹத்துருசிங்கவிடம் கோரப்பட்டுள்ளது.

முழுமையாக சேதமடைந்துள்ள பாடசாலையை புனரமைப்பதற்கான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஜனாதிபதி கூறியமைக்கமைவாக தெற்கைப் போலவே வடக்கிலும் அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தொடர்ந்தும் அபிவிருத்திகள் வடக்கில் இடம்பெறும் என்று தெரிவித்தார். (ச-5)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 29.09.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.